Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24
ரூபா 30.00
ஒக்ரோபர் 22 - 28, 2015

# தினமுரசு வாரமலர்

முரசு 1140
THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY





## அச்சத்தின் எதிரொலியா
## அரசியல்வாதிகளின் ஆயுள் சிறை



## ஜெயிக்குமா ஜெனீவாத் தீர்மானம்



## மாறுமா தமிழர்களின் தலைவிதி?

## அதிபரின் படத்தால்



அலங்கரிக்கப்படும் குடாநாட்டு பாடசாலை ஆண்டு விழாக்கள்!

## விளக்கு மட்டுமா சிவப்பு?

கவிஞர் கண்ணதாசன்

## ௐ மனக்குழப்பம் அகல பரிகாரம்

ஜாதகத்தில் சந்திரன் பலம் குறைந்து அல்லது பகை கிரஹத்துடன் இருந்தால், மனக்குழப்பம் அதிகம் இருக்கும். அவ்வாறு அமைந்தவர்கள், பௌர்ணமி அன்று சந்திரனை தரிசித்து வணங்கி, "ஓம் சந்திராய நமஹ" என்று ஒன்பது முறை சொல்வது நல்லது.

மேலும், சந்திரனுக்குரிய பச்சரிசியில் சாதம் வடித்து, தானும் சாப்பிட்டு, தன்னைச் சார்ந்தவர்களும், தான் வளர்க்கும் விலங்குகளுக்கும் அளித்து சாப்பிடச் சொல்வது நல்லது. திங்கட்கிழமை தோறும் செய்யலாம்!.

கடக ராசியில் பிறந்தவர்கள், இரண்டாம் எண்ணில் பிறந்தவர்கள், திங்கட்கிழமை பிறந்தவர்கள் ஆகி யோர் முத்துமாலை, மற்றும் முத்து மோதிரம் அணியலாம். இதனால், சந்திரபகவான் அருளும், மனச்சாந்தியும் கிட்டும்!.

## ஆன்மீகம் - தெய்வீக உறவு

இரத்த உறவும் சொந்தமும் பந்தமும்தான் பெரிதென நினைக்கும் இந்த உலகில், அன்பு என்னும் ஆற்றின் கரையை அகலமாக்கியிருக்கிறேன் என்று உறவுக்கும் பாசத்திற்கும் உள்ள வரம்பை, எல்லையைக் கடந்ததாக்கியவர் நம் இயேசு. இரத்த உறவு என்னும் சிறிய சிறைக்குள் கூனிகுறுகி நிற்கும் இந்தச் சமுதாயத்திற்கு இயேசுவின் இவ்வார்த்தை வரிகள் உறவுக்கு இலக்கணம்.

இயேசு அங்கு நின்ற தன் தாயையும் தன் சகோதரர்களையும் பார்த்து இவ்வார்த்தைகளைச் சொன்னதன்மூலம் தன் தாயையும் சகோதரர்களையும் இழிவுபடுத்தியதாகவோ குறைவாக மதிப்பிட்டதாகவோ கருதுவதற்கு இடமில்லை. மாறாக அவர்களைப் பெருமைப்படுத்துகிறார். இவர்கள் தந்தை இறைவனின் திருவுளத்தை தங்கள் வாழ்வில் வாழ்ந்து காட்டியவர்கள். இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி வாழ்ந்தவர்கள் என்பதைச் சொல்லாமல் சொல்லுகிறார்.

அன்பால் ஒன்றித்து சகோதர சகோதரிகள்கூடி வாழும் சமூகத்தில் உள்ளோர் அனைவரும் இயேசுவின் தாயும் சகோதர சகோதரிகளே. உண்மைக்கு குரல்கொடுத்து, நீதிக்கு போராடி, மனிதத்திற்காக உயிர் கொடுக்கும் ஆணும் பெண்ணும் இயேசுவின் தாயும் சகோதர சகோதரிகளே.

## ஆடையின் சிறப்பு

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். அருமை நாயகம் (ஸல்) அவர்கள் அருளினார்கள். "இருவகையினர் நரகவாசிகளாக இருக்கிறார்கள். அவர்களை நான் பார்க்கவில்லை. (இதுவரை அவர்கள் படைக்கப்படவில்லை. அவர்கள் எனக்குப் பின் தோன்றுவார்கள்.) அவர்களில் ஒரு பிரிவினர் பெண்களாக இருப்பார்கள். ஆடை அணிந்து நிர்வாணிகளாக ஆண்களின் பக்கம் மோகம் (ஆசை) கொண்டவர்களாகவும், ஆண்களை (தங்களின் உடல், உடை அழகை மினுக்கிக்காட்டி மயக்கி) தங்களின் தலை ஒட்டகங்களின் திமில்போன்று உயர்ந்து ஒரு பக்கம் சாய்ந்தும் இருக்கும். இவர்கள் சுவனம் புகமாட்டார்கள். சுவனத்தின் நறுமணத்தையும் நுகரமாட்டார்கள். ஆனால் அதன் நறுமணம் ஐநூறு மைல்களுக்கு அப்பால் இருந்து வீசும். (நூல்: முஸ்லிம்)

முஹம்மது ஹஸனி, கல்முனை – 07.

## கவிதைப்போட்டி 1138



● பாராட்டுக்குரியது ●

### முடியும்!

முடியாத ஒன்றை
முயன்று பார்க்கின்றாய்
முடியுமென்று
விடியும் உன்வாழ்வியல்
படியொன்றில் ஏறி
நில்லம்மா!

ஆர்.ரேகா, கொக்குவில்.




## கவிதைப் போட்டி இல 1140



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 02. 11. 2015

கவிதைப் போட்டி இல. 1140 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### வீண்வம்பு எதற்கு

எட்டுதில்லையா எத்தனம் உனக்கு
விட்டு விடு வீண்வம்பு எதற்கு
பிஞ்சு விரல் நோகுமம்மா
உன் பஞ்சு முகம் வாடுமம்மா..!

க.கோகிலன், கிளிநொச்சி.

### முடிவு வரும்

சிறுமையில் கொடுமையிது
வறுமையின் வடிவமிது
முயன்றுபார் முடிவு வரும்
தயங்கிடாதே முடியா தென்று.

த.மயூறி, யாழ்ப்பாணம்.

### பாவம்

வறுமையின்
கொடுமையிதோ...?
சொட்டுநீர் பஞ்சமிதோ...?
எட்டி நின்று நீர்
முட்டுமென்று தட்டுகிறாள்
கிட்டாத நீரிற்காய் பாவம்
கொட்டாவி விடுவாளா...?

கே.மேனகா, வவுனியா.

### முயற்சியா?

முட்டுதில்லையா? வாளி - உன்
சொட்டு நீர் முயற்சியால்
சிறுமைக்கும் ஓர்
வலிமையுண்டு
சிந்தும் நீர் இருந்து
பாரம்மா!

க.வண்ணன், விசுவமடு.

## உங்கள் பக்கம்

### வட்டுவாகல் பாலம் புனரமைப்பது எப்போது?

முல்லைத்தீவு - வட்டுவாகல் பிரதேசம் போரினாலும் ஆழிப் பேரலையினாலும் பேரழிவு களைக்கண்டுள்ள இடம்.

அங்கு படிப்படியான வளர்ச்சிகள் இடம்பெற்று வருகின்றது. அந்தவகையில் முல்லைத்தீவு - வட்டுவாகல் பாலத்தினை புனரமைத்துத் தருமாறு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவின் நகரத்தின் நுழைவாயிலான வட்டுவாகல் பாலம் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமலுள்ளது. இப்பாலத்தினை புனரமைப்பதன் மூலமாக முல்லைத்தீவு நகரம் பெரும் வளர்ச்சியடையுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பாலத்தை புனரமைத்துத் தருமாறு உரிய அதிகாரி களிடமும் கோரிக்கைவிடுத்து உள்ளோம். ஆனாலும் இதுவரை எதுவித முயற்சிகளும் எடுக்க வில்லை. உரிய அதிகாரிகள் விரைவில் புனரமைத்துத் தருமாறு தினமுரசு உங்கள் பக்கமூடாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

எம்.வாமனன்,
வட்டுவாகல்.

## வாசகர்சாலை

### வெற்றி முரசு!!

தினமுரசுக்கு வணக்கம்,

முரசில் மாற்றத்தை பெரிதும் எதிர்பார்த்தேன். அந்த மாற்றம் முரசில் நிகழ்ந்திருக்கிறது. வித்தியாசமான பல கட்டுரைகள் இடம்பெற்றிருக்கின்றது. கிராமங்களை நோக்கி... வாரமொரு காரம் வாழ்வியற் சிந்தனை என்பவை சிறப்பாக உள்ளது. அந்தவகையில் முரசின் வெற்றி இன்னும் உச்சியைத் தொடரவேண்டும்.

எம்.தாட்சாயினி, கொழும்பு - 14.

### ஒத்துழைப்பு வேண்டும்

நீண்டநாட்களுக்கு பிறகு முரசுக்கு வாசகர்சாலையை வரைகின்றேன். எமது பிரதேசத்துக்கு அடிக்கடி தினமுரசு வருவதில்லை. மிகவும் வருத்தமாக உள்ளது. சென்றவாரம் முரசுவந்தது. அதில் பல மாற்றங்கள் தெரிகிறது. வாழ்த்துக்கள். கண்டியிலும் முரசு வாசகர்கள் பல பேர் இருக்கிறார்கள். இதற்கு முரசுதான் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

மா.வசந்தன், கண்டி.

### அருமை

மாற்றம் ஒன்றே மாறாதது. முரசின், பக்கங்கள் பிரமாதம். லேடீஸ் ஸ்பெசல், சினிவிசிட், விளையாட்டு செய்திகள் என்பவை அருமையிலும் அருமை. முரசு மிளிரவேண்டும்.

க.யசோதரன், மன்னார்.

### ஒக்ரோபர் - 22



" விடாமுயற்சி உள்ளவர்கள் வாழ்வில் எத்தனையோ சாதனைகளைப் படைத்திருக்கின்றனர். ஆனால், வெறும் பணத்தை மட்டுமே உங்களின் வெற்றிக்கு அளவுகோலாக ஆக்கிவிடாதீர்கள். "

பரமஹம்ச யோகானந்தர்


மடல்கள் மற்றும் ஆக்கங்கள் உட்பட சகல தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212221811
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்: (E-mail):-
thinamurasu@live.com



# ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அரசியல் முதிர்ச்சி இல்லை!

## ராவய ஆசிரியர் தலையங்கம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு விமர்சனங்களைத் தாங்கிக்கொள்ளும் அரசியல் முதிர்ச்சி இல்லை என்று ஆசிரியர் தலையங்கம் ஒன்றை ராவய பத்திரிகை வெளியிட்டுள்ளது.

குறித்த தலையங்கத்தில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, ஊடகங்கள் தன்னை அரசியல் ரீதியாக காணாமல் போகச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் விமர்சனம் ஒன்றை முன்வைத்து இருந்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை அமர்வுக்கு தனது புதல்வரை அழைத்துச் சென்றமை, ஜனாதிபதியின் பயன்பாட்டுக்கு புதிய வாகனங்களை கொள்வனவு செய்தமை போன்ற விடயங்கள் குறித்த ஊடகங்களின் விமர்சனத்துக்கான பதிலாக ஜனாதிபதியின் கருத்து வெளிப்பட்டிருந்தது.


எனினும் ஊடகங்கள் என்பது பொதுமக்களின் வரிப்பணத்தில், பொதுமக்களுக்காக நடத்தப்படுவதன்றி, அரசியல்வாதிகளின் அடிவருடிகளாக செயற்படுவதற்கான சாதனங்கள் அல்ல. அதனை ஜனாதிபதி உள்ளிட்ட அரசியல்வாதிகள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

ஊடகங்களின் செய்திகளில் தவறுகள் இருந்தால் சுட்டிக்காட்டவேண்டுமே தவிர, அவற்றை விமர்சிப்பது சிறந்த அரசியல்வாதிகளுக்கான பண்பு அல்ல. ஜனாதிபதி இதனை உணர்ந்து கொள்ளவேண்டும்.

அதேநேரம் அரசாங்கத்தின் மீதான ஊடக விமர்சனங்களை கட்டுப்படுத்த முயற்சித்தால் மஹிந்தவுக்கு நடந்தது போன்றே ஏனைய அரசியல்வாதிகளின் தலைவிதியும் அமையும் என்றும் ராவய பத்திரிகை வலியுறுத்தியுள்ளது.

## யாழ்.மாவட்ட நலன்புரி நிலைய மக்களுக்கு உலருணவு வழங்க ஏற்பாடுகள் தேவை!

### டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்து!



யாழ்மாவட்டத்தில் 7 பிரதேச செயலகங்களில் 1318 குடும்பங்களைச் சேர்ந்த 4737 அங்கத்தவர்கள் வசித்து வருகின்றனர். இம்மக்கள் பல வருடங்களாக தங்களது சொந்த இடங்கள் மற்றும் வாழ்வாதாரங்களை இழந்த நிலையில் வாழ்ந்துவருவதால் இம்மக்களுக்கு உலருணவு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், மீள்குடியேற்ற, புனர்வாழ்வு அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளார்.

மேற்படி நலன்புரி நிலைய மக்களின் தேவைகள் தொடர்பில் கடந்த 2015.09.23ம் திகதி, நாடாளுமன்றத்தில் நிலையியற் சட்டத்தின்கீழ் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மீள்குடியேற்ற அமைச்சரிடம் பல கேள்விகளைக் கேட்டிருந்தார். இவ்விடயம் தொடர்பில் அமைச்சர் கடந்த 2015. 10. 02ஆம் திகதி நாடாளுமன்றத்தில் பதிலளிக்கும்போது, மேற்படி மக்களுக்குரிய உலருணவு நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், இந்த நலன்புரி நிலையங்களில் பல வருடங்களாக வசித்துவரும் மக்கள் வலிகாமம் வடக்கு பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள். கடற்றொழில் மற்றும் விவசாய செய்கைகளில் ஈடுபட்டுவந்த இம்மக்கள், இன்றைய சூழலில் வாழ்வாதாரங்களை மேற்கொள்ள வழியில்லாது பல்வேறு துயரங்களை அனுபவித்துவருகின்றனர்.

எனவே, யாழ் மாவட்டத்தில் நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்கு அவர்கள் மீள்குடியேற்றம் செய்யப்படும்வரை உலருணவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மைத்திரியை கொலை செய்ய திட்டமிட்டார் மகிந்த! பிள்ளையான் வெளியிடும் திடுக்கிடும் தகவல்கள்



மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக செயற்பட்ட காலகட்டத்தில் அமைச்சராக செயற்பட்ட மைத்திரிபால சிறிசேனவை கொலை செய்ய, தன்னுடன் ஒப்பந்தம் ஒன்று செய்துகொண்டதாக முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான் வாக்குமூலம் அளித்துள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சூழ்ச்சி, குற்றத்திற்கு உதவுதல் மற்றும் உடந்தையாக ஆயுதங்கள் வழங்கியமை தொடர்பில் சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பிள்ளையான் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கிழக்கு மாகாணத்தில் அல்லது பொலநறுவையில் வைத்து கொலை செய்வதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தனக்கு தனிப்பட்ட ரீதியில் கோரிக்கை விடுத்தார்.

எனினும் கிழக்கு மாகாணத்தில் வைத்து கொலைசெய்தால் தன் மீது குற்றஞ்சுமத்தப்படும் என்பதனால், கொழும்பில் வைத்து கொலை செய்ய திட்டமிட்டபோதும், மகிந்த அதனை நிராகரித்துள்ளார்.

பின்னர் எப்பட்ட இணக்கப்பாட்டிற்கமைய கொழும்பிற்கு அண்டிய பிரதேசமான பொரலஸ்கமுவ பிரதேசத்தில் வைத்து தற்கொலைக் குண்டுத் தாக்குதல்தாரிகள் ஊடாக மைத்திரிபால சிறசேனவை கொலை செய்வதற்கு திட்டமிட்டதாகவும் எனினும் தற்போதைய ஜனாதிபதி மயிரிழையில் உயிரை காப்பாற்றி கொண்டுள்ளதாகவும் பிள்ளையான் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இந்த முழுமையான திட்டம் தொடர்பில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் பிரபல முஸ்லிம் வர்த்தகர் ஊடாக எதிர்க்கட்சிக்கு அறிவித்ததாகவும், அவர்கள் அது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என பிள்ளையான் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஜோசப் பரராஜசிங்கத்தை கொலை செய்வதற்கான காரணத்தை குற்றப் புலனாய்வு பிரிவிற்கு விளக்கிய பிள்ளையான், ராஜன் சத்திய மூர்த்தியை நாடாளுமன்றத்திற்கு அனுப்பிவைப்பதற்கு சந்தர்ப்ப மேற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் விடுதலை புலிகளினால் அதற்கு முன்னரே சத்திய மூர்த்தி கொலை செய்யப்பட்டதாக பிள்ளையான் குறிப்பிட்டுள்ளார்.

ஜோசப் பரராஜசிங்கம் புலிகள் அமைப்பின் கைப்பாவை என பிள்ளையான் தெரிவித்துள்ளார்.

அதன்பின்னர் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியதும் ஜோசப் பரராஜசிங்கத்தை கொலை செய்வதற்காக T -56 துப்பாக்கிகள் இரண்டு பயன்படுத்தப் பட்டதாகவும், துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டவர்களில் ஒருவர் அதற்குபின்னர் இடம்பெற்ற விபத்தொன்றில் உயிரிழந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். மற்ற நபர் இதுவரையில் வெளிநாட்டில் வசிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலை புலிகள் அமைப்பு பிளவு பட்டதனை அடுத்து அநாதைகளாக்கப் பட்ட புலிகள் அமைப்பின் குறைந்த மட்டத்திலான செயற்பாட்டாளர்கள் இராணுவ புலனாய்வு பிரிவினால் செயற்படுத்தப்பட்டதாகவும், நாட்டில் பல பிரதேசங்களில் தமிழ் தேசிய துப்பாக்கிதாரர்களினால் மேற்கொள்ளப் பட்ட அனைத்து கொலைகளுக்கு இராணுவப் புலனாய்வு பிரிவினரால் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதாகவும பிள்ளையான் தெரிவித்துள்ளார்.

இந்த தகவல்களுக்கமைய இராணுவ புலனாய்வு பிரிவின் பலர் எதிர்வரும் நாட்களில் விசாரணைக்கு அழைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

## சீன நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு அனுமதி வழங்கப்படும்



### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

சீனாவுடன் இலங்கை கொண்டிருக்கின்ற உறவின் ஒரு பகுதியாக, எதிர்காலத்தில் சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் இலங்கை கடற்பரப்பில் பிரவேசிக்க அனுமதி வழங்கப்படும் என பிரதமர் தெரிவித்துள்ளார்.

எனினும் நிரந்தரமாக சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் இலங்கை கடற்பரப்பில் இருக்கமுடியாது என, சிங்கப்பூருக்கு விஜயம் செய்துள்ள பிரதமர் அங்கு ஊடகங்களிடம் உரையாற்றியபோது கூறியுள்ளார். நட்புரீதியாக வரும் கப்பல்கள் குறித்து, அண்டைநாடுகளுக்கு தகவல் தெரிவிக்கப்படும். கடந்த முறை, சீன நீர்மூழ்கி கப்பல் வந்தபோது, தனக்கு தெரிவிக்கவில்லை என, இந்தியா கூறியது.

இனி, அதுபோல் நடக்காதபடி, அனைத்து கப்பல்களின் வருகையும் இந்தியாவிற்கு தெரிவிக்கப்படும். சீனாவுடன் இலங்கை, நீண்டகாலமாக நல்லுறவு வைத்துள்ளது. இதை, இந்தியாவிற்கும் தெரிவித்துள்ளோம், என ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

## மகளை கர்ப்பிணியாக்கிய தந்தை

புத்தளம் - மணல்குண்டுவ பகுதியைச் சேர்ந்த 16 வயதான தனது மகளுடன் உறவுகொண்டு அவரை கர்ப்பிணியாக்கிய தந்தையின் குற்றவியல் குறித்து விசாரணை மேற்கொண்டு வருவதாக புத்தளம் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். தாயார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் கணவரைப் பிரிந்து கொழும்பு - கிரான்பாஸ் பகுதியில் தங்கியுள்ளார். இதன்படி இவர்களிற்கு இரண்டு பெண் பிள்ளைகள் மற்றும் ஆண் பிள்ளையும் சந்தேகநபர் பொறுப்பில் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் தனது மூத்த மகள் சுகவீனமுற்றிருப்பதாக அறியக் கிடைத்ததை அடுத்து ஆராய்ந்து பார்த்தவேளை அவர் ஆறு மாத கர்ப்பிணி என தெரியவந்துள்ளதாக முறைப்பாட்டாளர் பொலிஸாரிடம் குறிப்பிட்டுள்ளார்.

## கொண்டைய்யாவுக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்



கொடதெனியாவ சிறுமி சேயா கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருந்த கொண்டைய்யா எனப்படும் துனேஷ் பிரியஷாந்த குறித்த வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டு உள்ளார்.

இதேவேளை இந்த வழக்கு தொடர்பில் கைதாகி தானே குற்றத்தை செய்ததாக வாக்குமூலம் அளித்துள்ள கொண்டையாவின் சகோதரர் எதிர்வரும் நவம்பர் 2ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், கொண்டைய்யாவின் சகோதரராக சமன் ஜெயலத்தின் மரபணுப் பரிசோதனை அறிக்கை, சிறுமியின் சடலத்தில் இருந்து பெறப்பட்ட மரபணுக்களுடன் ஒத்துப் போவதாக அறிவிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த வழக்கில் முதலில் கைதான 17 வயது மாணவன் உள்ளிட்ட இருவரின் மரபணுப் பரிசோதனை அறிக்கைகளும் குற்றத்துடன் ஒத்துப்போகாமையால் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். மேலும் கொண்டைய்யாவின் மரபணுப் பரிசோதனை அறிக்கையும் குற்றத்துடன் ஒத்துப்போகவில்லை என, அணமையில் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையிலேயே அவரை குறித்த குற்றத்தில் இருந்து விடுவித்து மினுவான்கொட நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது. எனினும் அவர்மீதுள்ள வேறு சில குற்றங்களுக்காக கொண்டைய்யா தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தொடர்பில் அத்தனகல்ல மற்றும் கம்பஹா ஆகிய நீதிமன்றங்களில் குறித்த வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன.

## செய்தித்தாள் வாசித்த ஒருவருக்கு ஒரு மாத சிறைத் தண்டனை

செய்தித்தாள் வாசித்த ஒருவருக்கு ஒரு மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட சம்பவமொன்று சிலாபத்தில் இடம்பெற்றுள்ளது. சிலாபம் நீதிமன்றில் நீதவான் எதிரில் நபர் ஒருவர் செய்தித்தாள் ஒன்றை வாசித்துள்ளார்.

இவ்வாறு செய்தித்தாள் வாசித்த நபருக்கு சிலாபம் நீதவான் ஹேசான் டி மெல் உத்தரவிட்டுள்ளார். புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிசாந்தவுடன் கடந்த 15ஆம் திகதி நீதிமன்றம் சென்றிருந்த தப்போவ பிரதேசத்தைச் சேர்ந்தவரே இவ்வாறு தண்டிக்கப்பட்டுள்ளார். அமில என்ற நபர், நீதவானின் எதிரில் செய்தித்தாள் ஒன்றை மரியாதையின்றி வாசித்துக் கொண்டிருந்தார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. குறித்த நபரை கடுமையாக எச்சரித்த நீதவான், ஒரு மாத கால சிறைத்தண்டனை விதித்துள்ளார்.

தினமுரசு
வாரமலர்
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## தமிழினியை வைத்து அரசியல் நடாத்தும் தனித் தேசியவாதிகள்

அண்மையில் புற்றுநோயால் இறந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் பெண் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினியை வைத்து சில பத்திரிகைகளும், சில அரசியல்வாதிகளும் தமிழ்த்தேசியம் எனும் பெயருக்குள் தனித்தேசியத்தை நிலைநாட்ட முற்படுகின்றனர்.

விடுதலைப் புலிகளின் படத்தையும் விடுதலைப் புலிகளின் செய்தியையும் தலைப்பிட்டு முன்பக்கத்தில் பிரசுரித்தால் தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் தேசிய பத்திரிகை எனும் பெயரில் எடுபடும் எனும் நோக்கோடு ஒரு சில பத்திரிகைகள் தொழிற்பட்டுவருகின்றன. மறுபுறத்தில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்பது போன்ற செயற்பாடுகளையும், வெளியீடுகளையும் முன்னெடுத்தால் தமிழ் தேசியம் எனும் பெயருக்குள் தமது தனித்தேசியம் மக்களால் உள்வாங்கப்படும் எனும் நோக்கோடு தொழிற்படும் அரசியல்வாதிகளும் உள்ளனர்.

அந்தவகையில் அஞ்சலி செலுத்துவதற்கும் அது தொடர்பான கருத்துக்களை முன்வைப்பதற்கும் தற்போது சிலருக்கு தமிழினி கிடைத்துள்ளது. பாவம் அர்த்தமற்ற அஞ்சலிகளால் அவரது ஆத்மாகூட சாந்தியடையாது. தியாகத்தின் திருவுருவமாக உண்மையில் இருந்தவர்களிற்கும், மடிந்த மாண்புமிகு பூத உடலிற்கும் அஞ்சலி செலுத்துவது தப்பென்று சொல்லவில்லை. அவரவர் அரசியலில் அந்தஸ்தைப் பெறுவதற்காக தமிழினியைப் பயன்படுத்துவது தப்பு.

சிலரின் தியாகவழிப் போராட்டங்கள்கூட தீக்கிரையாக்கப் பட்டமைக்கு அடிப்படை இப்படிப்பட்ட தீயவர்களின் பங்கீடு அத் தியாகவழிக்குள் கலப்படமானமையே ஆகும். சரியோ, தப்போ அடுத்தவரிற்காக அனலில் விழுந்து தணலாகிப் போனவர்களை ஒவ்வொருவரும் மதித்துத்தான் ஆகவேண்டும். அதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை தெரிவுகள் தப்பானதே தவிர, தேடிய இலட்சியத்துக்குள் பல தியாகங்கள் உண்டு. அதை மதித்து மனதார அஞ்சலி செலுத்தமுடியுமானால் செலுத்துங்கள். இல்லையேல் விட்டுவிடுங்கள். அது தனிமனித கொள்கை வெளிப்பாடு. அதில் எவரும் தலையிடமுடியாது. அதற்காக அர்த்தமற்ற அரசியல் அபிலாசைகளை அஞ்சலிமூலம் வெளிப்படுத்தாதீர்கள். இவர்களைவிட அன்றுதொட்டு இன்றுவரை ஆயுதவழியில் அழிவுகளைத்தவிர எதையும் வென்றெடுக்க முடியாது என வாதிடுவோரை மதிக்கலாம்தானே...!

சுயலாப அரசியலை சுத்திகரிப்பதற்காக சுடரேற்ற நினைப்பது தியாகத்தைத் தீண்டும் செயற்பாடாக ஒருபுறமிருப்பதோடு, மறுபுறத்தில் மக்களை ஏமாற்றும் செயற்பாடாகவும் அது மறுபிறவியெடுக்கின்றது. தமிழினியெனும் தனிநபரைப்போன்று விடுதலைப் போராட்டத்தில் விதையானவர்களைப் பயன்படுத்தி பலர் வாழ்கின்றனர். வேறு சிலர் பயன்படுத்தி மேலே வந்துவிட்டு பயங்கரவாதப் போரால்தான் பாதியை இழந்துவிட்டோம் எனப் பலமாக விமர்சிக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் விதைகளைப் பயன்படுத்தி தேர்தல் பயிர்களை அருமையாக அறுவடை செய்யலாம் என நினைத்து களம் குதித்த கட்டுரையாளர்களிற்கு கடந்த தேர்தலில் மக்கள் தக்கபாடம் கற்பித்துவிட்டார்கள். இனி-வரும் காலங்களில் இந்தத் துருவத்தில் மக்களை ஏமாற்ற முடியாது என்பதையும் அத்தேர்தல் சில அரசியல்வாதிகளிற்கு எடுத்துக்காட்டியுள்ளது. இதன் அடிப்படைதான் "கடந்த காலங்களில் நாம் விட்ட தவறுகள்தான் இத்தனை அழிவுகளுக்கும் காரணம்" எனவும் விமர்சிக்க சிலரை தூண்டியுள்ளது. காலத்திற்குக் காலம் மக்களின் நாடி பிடித்து அறிந்து பேசத்தெரிந்த சிலரிற்கு பெரும்பான்மை அரசின் நாடி பிடித்து தீர்வினை பெற்றுத்தர ஏன் முடியவில்லை... உயிரோடு இருந்திருந்தால் அர்த்தமற்ற அஞ்சலிக்கு தமிழினிகூட அனுமதித்திருக்கமாட்டார்.

ஆசிரியர்

# அச்சத்தின் எதிரொலியா



## அரசியல் கைதிகளின் ஆயுள் சிறை

அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும். அடைத்து வைக்கப்படுவதில் எந்தவிதத்திலும் நியாயம் இல்லை என்பதற்கு மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் நல்லாட்சி நிலவி புரிந்துணர்வுகள் வலுப்படுத்தப்பட்ட போதிலும்கூட ஏன் இன்னும் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான அனுமதியை அரசு வழங்கத்தயங்குகின்றது. அரசின் தயக்கத்துக்கு என்ன காரணம் என்பது தொடர்பான பக்கங்களை இதுவரை எந்த அரசியல்வாதிகளும் பார்த்ததில்லை. எந்த ஊடகங்களும் நோக்கவில்லை. அரசின் அச்சத்துக்கான அடிப்படைப் பிரச்சினைகளை ஆராய்ந்து, அதற்கான உத்தரவாதங்களை வலுவூட்டி அவரவர் தமது நிலைக்கு அப்பால் சென்று அடுத்தவர் பிரச்சினைகளையும் சீர்தூக்கிப் பார்ப்பதுவே இவ் அரசியல் கைதிகளின் விடுவிப்பிற்கு தீர்வினை பெற்றுத்தரும்.



இதுதொடர்பாக சிந்திக்கவேண்டியது இன்றைய கட்டாய தேவையாகும். அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டு இதனால் உடல்நிலை பாதிப்படைந்து பலர் துன்பியல் நிலைக்கு ஆளாகியும்கூட நல்லாட்சி இதுதொடர்பாக உடன் முடிவுகளை வழங்க ஏன் பின்நிற்கின்றது. அதில் இருக்கின்ற அச்சப்பாடுகளை தீர்த்து நம்பிக்கையீனங்களைத் கலைத்து புரிந்துணர்வுகளை வலுப்படுத்த வேண்டியதே தமிழ் மக்களின் அரசியல் பிரமுகர்களது இன்றைய கடமையாகும். தவறு-களை சுட்டிக்காட்டி பலவாறான துருவங்களில் நியாயப்படுத்தி இனவாதங்களை இலங்கையில் மீண்டும் வலுப்படுத்தாது சம்பந்தப்பட்டவர்களோடு நேரடியாகத் தொடர்புகொண்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும்.

பயங்கரவாதச் தடைச்சட்டத்தின்கீழ் அரசியல் கைதிகளாக கைதுசெய்யப்பட்டவர்கள் 18 மாதங்களுக்குள் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தவேண்டும். அதில் குற்றவாளிகளாக இனங்கண்டால் பயங்கரவாதச் தடைச் சட்டத்தின்கீழ் ஒரு வருடத்திற்கே சிறைத்தண்டைகள் வழங்கஅனுமதியுண்டு.

அந்தவகையில் கைதிகள் முன்மொழிவதுபோல,

**தாம் குற்றமிழைத்தவர்களுக்குரிய தண்டனைகளையே தீர்ப்பளிக்காது இதுவரை காலமும் அனுபவித்துவிட்டோம். ஆகவே எமக்கான தண்டனைகளை அரசு இத்தனை காலமும் சிறையடைத்து வைப்பதனூடான பெற்றுத்தந்துவிட்டது. இனி எம்மை விடுவிக்குமாறு நாம் கூறுவதில் நியாயமுண்டு என்கின்றனர்.**

இதிலும் நியாயம் இல்லாமல் இல்லை.

மறுதுருவத்தில் சட்டத்தரணிகளின் வாதங்களுக்கூடாக நோக்குமிடத்து, அரசியல் கைதிகளை மீண்டும் அடைத்துவைப்பதில் எந்தவிதமான நியாயங்களும் இல்லை என்பது தெளிவாகப் புலனாகின்றது. அவ்வாறிருந்தும் இனவாதத்துக்கு அப்பால் நல்லாட்சியை நடத்திவரும் தேசிய அரசு இதுதொடர்பான முடிவுகளை எடுப்பதில் ஏன் தாமதிக்கின்றது. ஏன் அஞ்சுகின்றது. அதன் பின்னணிகளைப் புரட்டிப் பார்த்து அதற்கான வாக்குறுதிகளை வழங்கி அப்பால் நகர்வதே இதற்கான தீர்வினைக் கொண்டுவரும்.

பேச்சிலே கூறுவார்கள், தமிழன் இடம்கொடுத்தால் மடம் கட்டுவான் என்று. இந்த சிந்தனை இன்று தேசிய அரசிற்குள் புரையோடிக் கிடக்கின்றனவா?, அல்லது மீண்டும் ஒரு விடுதலைப் போராட்டம் உக்கிரமடைந்தால் சிங்கள மக்கள் மத்தியில் இந்தத் தேசிய அரசு அதற்கான துரோகிகளாக மாறுவார்கள் என்று தேசிய அச்சப்படுகின்றதா?

உண்மையிலேயே விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் அடிப்படை, அது உக்கிரமடைந்ததன் அடிப்படை, அது வன்முறைகள் எல்லைக்கு அப்பால் வெடித்ததன் அடிப்பனைடகள் பல. அதில் தமிழ். சிங்கள தரப்புகள் அனைத்துமே குற்றவாளிகள்தான். அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அரசியல் தீர்வினை நாடிய சிறுபான்மையினங்கள் அதை வென்றெடுக்க முடியாமல் திணறியது. அகிம்சை வழியில் போராடியும்கூட அதை இந்திய தேசம் உட்பட இலங்கை பெரும்பான்மை அரசுகள் அவமதித்தது.

இந்தக் கட்டத்தில்தான் வன்முறைப் போராட்டங்கள் வடிவம்பெற்றது. அது சிறுபான்மை இனங்களுக்கு சிங்களதேசம் திணித்த போர் முடிவு என வாதிடவும் இடமுண்டு.


(21 ஆம் பக்கம் பார்க்க)

வெண்கட்டியன்

# விக்கிலீக்ஸ் வெளியிட்ட இரகசியங்கள்!!

பகுதி -03-

ஊடுருவி




### அற்புதமான கெரில்லா

புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் தளபதி குமரன் என்கிற இயக்கப்பெயரால் அறியப்படுகின்றார். குமரப்பன் என்று அழைக்கப்படுபவரும் இவரே ஆவார். இவரின் சொந்தப்பெயர் என்ன? என்பது எமக்கு தெரியவில்லை. இவர் அதீத தந்திரசாலி என்று சமயோசித புத்திசாலி என்றும் கூறப்படுகின்றார். இவருக்கு வழங்கப்பட்ட வளங்களை வைத்துக்கொண்டு மிக அற்புதமான கெரில்லாத் தாக்குதலை நடத்தி இருக்கின்றார்.

இவர் மேல் வகுப்பில் பாடசாலைக் கல்வியை உதறித் தள்ளியவர் ஆவார். மட்டக்களப்பில் வளர்ந்தவர். இவரின் அம்மா மட்டக்களப்புத் தமிழர் ஆவார். இவரின் அப்பா யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர். இதனால் குமரன் புலிகள் இயக்க யாழ்ப்பாண தலைமையால் மாத்திரம் அன்றி மட்டக்களப்பு மாவட்ட இயக்கப் போராளிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

இவர் ஏராளமான சந்தர்ப்பங்களில் கைது செய்யப்படுகின்றமையில் இருந்து அல்லது படுகொலை செய்யப் படுகின்றமையில் இருந்து மயிரிழையில் தப்பிப் பிழைத்து உள்ளார். இவரை பிரத்தியேகமாக படுகொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட பதுங்குத் தாக்குதல் குறித்து இலங்கை இராணுவத்தின் சிரேஷ்ட தளபதி ஒருவர் எமக்குக் கூறினார்.

**விக்டரின் கட்டளைக்கு அமைய ராதாவே அனுராத புரத்தின் புனித நகரம் மீதான தாக்குதலை 1985 ஆம் ஆண்டு, மே மாதம் திட்டமிட்ட வகையில் மேற்கொண்டு இருந்தார். இதில் 150 இற்கும் அதிக மான சிவிலியன்கள் படுகொலை செய்யப்பட்டனர். யாழ்ப்பாண குடாநாட்டில் வல்வெட்டித்துறையில் அதிக காலத்தை ராதா கழித்து உள்ளார். மன்னார் பிராந்திய தளபதியாக பதவியேற்க முன்னர் தென்னிந்தியாவில் ராதா இருந்து உள்ளார். அப்போது புலிகளின் 4ஆவது பயிற்சி அணியின் பொறுப்பாளராக ராதா விளங்கினார்.**

### ஆறாவது புலன்

மட்டக்களப்புக்கு வெளியில் தமிழ் குடும்பம் ஒன்றிடம் இருந்து கப்பம் பெற குமரப்பன் நேரில் வருகின்றார் என்று இராணுவத்துக்கு தெரியவந்தது. இது கடத்தல் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய கப்பம் ஆகும். இராணுவத்துடன் தமிழ் குடும்பம் ஒத்துழைத்தது. இக்குடும்பத்தின் வீடு அமைந்து இருந்த வீதியில் படையினர் மறைந்து காத்திருந்தனர். குமரனும், இன்னொருவரும் மோட்டார் சைக்கிள் ஒன்றில் இவ்வீதியை நோக்கிவந்தனர். ஆனால் எந்தவொரு வெளிப்படையான காரணமும் இல்லாமலேயே மோட்டார் சைக்கிளை நிறுத்தினார் குமரன். கீழே இறங்கினார். வீதியை நோட்டமிட்டார். சுற்றும்முற்றும் பார்த்தார். வந்த வழி யிலேயே மோட்டார்சைக்கிளில் திரும்பிப் போய்விட்டார்.

ஆனால் இடம்பெற இருந்த பதுங்குத் தாக்குதலை எப்படி குமரன் தெளிவாக மோப்பம் பிடித்தார்? என்பதுதான் மர்மமாக உள்ளது, எல்லோருக்கும் ஐந்து புலன்கள் உள்ளன, இவருக்கு ஆறாவது புலன் இருக்கவேண்டும் என்று வியந்து கூறினார் மேற்சொன்ன இராணுவ தளபதி.

புலிகளின் மட்டக்களப்பு தள முகாமை ஓர் ஜனவரி மாதம் விசேட அதிரடிப் படையினர் சுற்றிவளைத்தனர். ஆனால் குமரன் மயிரிழையில் தப்பினார். ஆயினும் குமரனின் பிக் அப் வாகனம் கைப்பற்றப்பட்டது. வாகனத்தின் முகப்பில் பெய்ரூட் என்கிற சொல் காணப்பட்டது.

### சிங்களவர்கள் படுகொலை

மட்டக்களப்பு பிராந்தியத்தில் குமரனுக்கு அடுத்தநிலையில் இருப்பவர் டேவிட். மட்டக்களப்பின் தெற்கு பகுதியும், அம்பாறையின் வடக்குப் பகுதியும் இவரின் கட்டுப்பாட்டில் விடப்பட்டு உள்ளன. இவரின் சொந்தப் பெயர் தெரியவில்லை. அம்பாறை மாவட்டத்தில் பொத்துவிலைச் சேர்ந்த சவரத் தொழிலாளி ஒருவரின் மகன் ஆவார். இப்பிரதேசத்தில் வழமையாக பொலிஸாருக்கு டேவிட்டின் தகப்பனே சவரம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தீவுப் பகுதியில் உள்ளே நுழையக் கூடிய காடுகளுக்குள் 12 - 15 பேர் கொண்ட ஆட்களுடன் 1986 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் டேவிட் செயற் பட்டார் என்று அதிரடிப் படை தளபதி எமக்குக் கூறினார்.

### டேவிட்டின் ரேடியோ

தொடர்பாடல்களை அதிரடிப் படையி-னர் அடிக்கடி ஒட்டுக்கேட்டனர், ஆனால் ஒருபோதுமே இவரின் கெரில்லா படையை பிடிக்க உடனடியாக செயற்பட முடியாமல் போய்விட்டது என்றும் இத்தளபதி குறிப்பிட்டார்.

இவரின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசத்தில்தான் 1987 ஆம் ஆண்டு, பெப்ரவரி மாதம் 40 சிங்கள சிவிலியன்கள் கொல்லப்பட்டனர். இவர்தான் இப்படுகொலைகளை தலைமை தாங்கி மேற்கொண்டாரா? இவரின் உத்தரவின் பேரில்தான் படு கொலைகள் மேற்கொள்ளப்பட்டனவா? என்பது தெரியவில்லை.

### மன்னார்ப் பிரதேசவாதம்

புலிகளின் மன்னார் பிராந்திய தளபதி ராதா ஆவார். இவரின் உண்மையான பெயர் அந்தோனி என்பதாகும். யாழ்ப்பாணத்தில் அரியாலையை சேர்ந்தவர். இந்து உயர்சாதிக்கு உரியவர். இவருக்கு சுமார் 20 வயது இருக்கும். இவர் விக்டரின் மரணத்தை அடுத்து 1986 ஆம் ஆண்டு, ஒக்டோபர் மாதம் பிராந்திய தலைமைப் பொறுப்பை ஏற்றார். மன்னார் பிராந்தியத்தில் பிரசித்தி வாய்ந்த தளபதியாக விக்டர் விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.



விக்டர் மன்னாரைச் சேர்ந்தவர். கத்தோலிக்கர் ஆவார். மன்னார் மாவட்ட மொத்த சனத்தொகையில் 42 சதவீதமானவர்கள் கத்தோலிக்கர்கள், 25 சதவீதமானவர்கள் இந்துக்கள், ஏனையோர் முஸ்லிம்கள்.

விக்டரின் இடத்துக்கு யாழ்ப்பாண இந்து ஒருவரை நியமிக்க பிரபாகரன் தீர்மானம் எடுத்தமையை அடுத்து மன்னார் மாவட்ட புலி உறுப்பினர்களில் கணிசமான தொகையினர் இயக்கத்தை விட்டுச்செல்ல முயன்றனர். மன்னாருக்கு கிட்டுவை அனுப்பினார் பிரபாகரன். அதிருப்தி அடைந்திருந்த மன்னார் பையன்களுக்கு புலிகள் இயக்கத்தில் இருந்து எவரும் விலகிச் செல்ல முடியாது என்று நினைவுபடுத்தினார் கிட்டு.

### ஊழல் புலி

விக்டரின் இடத்துக்கு ராதா நியமிக்கப்பட்ட பிற்பாடு மூன்று நிலக் கண்ணிவெடிகள் வெடிக்க வைக்கப்பட்ட சம்பவத்தை தவிர எந்தவொரு தாக்குதலும் மன்னாரில் புலிகளால் மேற்கொள்ளப்படவில்லை என்று இராணுவ வட்டாரம் ஒன்று எமக்கு தெரிவித்தது.

விக்டரின் கட்டளைக்கு அமைய ராதாவே அனுராதபுரத்தின் புனித நகரம் மீதான தாக்குதலை 1985 ஆம் ஆண்டு, மே மாதம் திட்டமிட்ட வகையில் மேற்கொண்டு இருந்தார். இதில் 150 இற்கும் அதிகமான சிவிலியன்கள் படுகொலை செய்யப்பட்டனர். யாழ்ப்பாண குடாநாட்டில் வல்வெட்டித்துறையில் அதிக காலத்தை ராதா கழித்துள்ளார். மன்னார் பிராந்திய தளபதியாக பதவியேற்க முன்னர் தென்னிந்தியாவில் ராதா இருந்து உள்ளார். அப்போது புலிகளின் 4 ஆவது பயிற்சி அணியின் பொறுப்பாளராக ராதா விளங்கினார்.

மன்னாரில் ராதாவுக்கு அடுத்த நிலையில் சாஜகான் உள்ளார். இவர் மன்னாரைச் சேர்ந்தவர். இதனால் விக்டரின் இடத்தில் இவரே மன்னார்ப் புலிகளால் நேசிக்கப்பட்டார். சாஜகான் என்கிற பெயரில் இந்திய திரைப்பட நட்சத்திரம் ஒருவர் இருக்கின்றார். துணைத் தளபதி சாஜகான் அழகான தோற்றமும் கொண்டவர். எனவே இவர் நடிகர் சாஜகான் என்றும் குறிப்பிடப்படுகின்றார்.

மன்னார் பிராந்தியத்தில் புலிகளின் இன்னொரு த்லைவர் சலீம். இவர் நிர்வாக விடயங்களுக்கு பொறுப்பானவர். வரி வசூலிப்பு, நீதி நிர்வாகம், பிரசாரம் போன்ற விடயங்களை கையாள்கின்றார்.

எங்களின் வட்டாரம் ஒன்று வழங்கிய தகவலின்படி சலீம் நிதிக் கையாடல்கள் செய்கின்றார், இதனால் பொதுமக்கள் மத்தியில் மன்னாரீல் புலிகளின் செல்வாக்கு சரிகின்றது என்று பிரபாகரனுக்கு ராதா முறைப்பாடு செய்திருக்கின்றார். இத்தகவல் உண்மையாக இருக்கின்ற பட்சத்தில் சலீமின் பதவிக் காலம் ரொம்பக் குறைவுதான்.

(யாத்திரை தொடரும்)

# நிலமெல்லாம் இரத்தம்

**175**

பா.ராகவன்



அன்றைக்கு அவர் விதைத்தது தான் இன்றைக்கு காஸாவிலிருந்தும் மேற்குக்கரையிலிருந்தும் இஸ்ரேலியர்களை, இஸ்ரேலிய அரசே வெளியேற்றும் அளவுக்குப் பலனளிக்கத் தொடங்கியிருக்கிறது.

அரபாத் இறந்ததனால்தான் இந்த முன்னேற்றம் சாத்தியமாகியிருக்கிறது என்று இன்றைக்கு இஸ்ரேலிய அரசு விஷமப்பிரசாரம் செய்யலாம் செய்கிறது. உண்மையில் அன்றைக்கு அமைதிப்பேச்சு என்கிற விஷயத்தை அவர் ஆரம்பித்து வைக்காதிருப்பாரேயானால், ஜோர்டன் நதி முழுச் சிவப்பாகவே இப்போது ஓடவேண்டியிருந்திருக்கும்.

பலஸ்தீன் விடுதலைப் போராட்ட சரித்திரத்தில், ஒஸ்லோ ஒப்பந்தம் மிக முக்கியமானதொரு கட்டம். ஏனெனில் அமைதியை உத்தேசித்துச் செய்யப்பட்ட இந்த ஒப்பந்தம், இருதரப்பிலும் மக்கள் மத்தியில், மிகப்பெரிய அதிருப்தியையே உண்டாக்கியது. இப்படி ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டதற்காக, இஸ்ரேலியப் பிரதமராக இருந்த இட்ஸாக் ராபினை ஒரு யூதரே கொலை செய்தார் (1995). அடுத்துவந்த பொதுத்தேர்தலில், யூதர்கள் மிகக் கவனமாக பழைமைவாத யூதரான பெஞ்சமின் நெதன்யாஹூவைப் (Benjamin Netanyahu) பிரதமராக்கி உட்காரவைத்தார்கள். ஒருபோதும் அவர், அரேபியர்களுக்கு எந்த அதிகாரத்தையும் தரமாட்டார் என்கிற நம்பிக்கை யூதர்களுக்கு இருந்தது.

மறுபுறம், அரபுகள் தரப்பில் யாசர் அரபாத்மீது உண்டான அதிருப்தி, நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போனது. ஒஸ்லோ ஒப்பந்தத்தின்படி, அரேபியர்கள் யூதர்களின்மீது தாக்குதல் நடத்தமாட்டார்கள் என்றும், பதிலாக கொஞ்சம் கொஞ்சமாக மேற்குக் கரை மற்றும் காஸா பகுதியிலிருந்து இஸ்ரேல் தன்னுடைய இராணுவத்தை வாபஸ் பெற்றுக்கொள்ளும் என்றும் ஏற்பாடாகியிருந்தது.

எங்களைக் கலந்து ஆலோசிக்காமல் நீங்களாக எப்படி ஒப்பந்தத்தை ஏற்கலாம் என்று அரபாத்தைக் கேட்டார்கள், பலஸ்தீனிய அரேபியர்கள். குறிப்பாக, அங்குள்ள விடுதலை இயக்கங்கள் அனைத்துமே, இந்த ஒப்பந்தத்துக்கு எதிராகத்தான் இருந்தன.

அரபாத் தன் சக்திக்கு உட்பட்ட அளவில் ஒவ்வொரு இயக்கத்தையும் அழைத்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தி, ஒப்பந்தத்தின் அவசியத்தை வலியுறுத்திப் பார்த்தார். தினசரி, பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு மக்களுக்கும் விளக்கமளித்தார். கேட்கத்தான் ஆளில்லாமல் போய்விட்டது.

"யூதர்கள்மீது அரேபியர்கள் தாக்குதல் நடத்தமாட்டார்கள் என்று எழுதிக்கொடுத்துக் கையெழுத்துப் போட்டீர்கள் அல்லவா? இதோ பாருங்கள்," என்று அன்றுதொடங்கி, கலவரங்களும் தாக்குதல்களும் நம்ப முடியாத அளவுக்கு அதிகரிக்க ஆரம்பித்தன.

ஒஸ்லோ ஒப்பந்தத்துக்கு இஸ்ரேலிய அரசு சம்மதித்ததன் அடிப்படைக் காரணமே, ஹமாஸ் உள்ளிட்ட போராளி இயக்கங்களின் செயல்பாடுகளை அரபாத் முயற்சி எடுத்து முடக்கிவைக்கவேண்டும் என்பதுதான். ஆனால் எந்தவிதமான பேச்சுவார்த்தை சமரசங்களுக்கும் இயக்கங்கள் ஒத்துழைக்கத் தயாராக இல்லாத காரணத்தால், பலஸ்தீன் முழுவதும் படிப்படியாக வன்முறை அதிகரிக்கத் தொடங்கியது.

இஸ்ரேலிய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் ஓர் அறிக்கையின்படி செப்டம்பர் 1993 தொடங்கி, செப்டம்பர் 2000 வரையிலான காலகட்டத்தில் மொத்தம் 256 இஸ்ரேலியர்களை அரேபியர்கள் கொன்றிருக்கிறார்கள்.

(தொடரும்)




# விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா

## கறுப்புக்கும், வெள்ளைக்கும் எல்லையற்ற இடைவெளி

படித்துக்கொண்டே இரவிலும் பகலிலும் வயல்களில் வேலைசெய்து வந்தார் மண்டேலா. இரவுநேரங்களில் அவருடைய இனத்தைச் சேர்ந்த பெரியவர்கள் தீயை மூட்டி, அதை சூழ்ந்து உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டுக்கொண்டே இருப்பார்.

வெள்ளையர்கள் வருவதற்கு முன்பே தங்களது இனத்தவர் எப்படியெல்லாம் சந்தோஷமாக நாட்களைக் கடத்தி மேன்மையான வாழ்க்கை வாழ்ந்தனர் என்று அவர்கள் கூறுவதைக் கேட்டார் மண்டேலா. நிகழ்காலத்தில் வெள்ளையர் தங்கள் இனத்தவருக்கு செய்துவரும் கொடுமைகளைக் கதைகதையாகக் கேட்டு வருந்தினார்.

துப்பாக்கியும், பீரங்கியும் ஏந்திய வெள்ளையரின் போர் வீரர்கள் புதிய போர்க்கருவிகள் ஏதுமில்லாத ஆபிரிக்கரை நூற்றுக்கணக்கில் சுட்டுக் கொன்றனர். தங்களுடைய பழமையான வீடுகளிலிருந்து குடிபெயர்ந்து செல்ல மறுத்த ஒரே காரணத்துக்காக, கறுப்பர் இனத்தை சேர்ந்த தம்முடைய மக்களை வெள்ளையர் சித்திரவதை செய்வதை மண்டேலாவால் சகித்துக்கொண்டிருக்க முடியவில்லை.

தங்கள் இனத்தவரின் துயரத்தைத் துடைக்கவேண்டிய கடமை தனக்கு இருப்பதாகக் கருதினார் நெல்சன் மண்டேலா. தென்னாபிரிக்காவில் கடுமையான நிறக் கொடுமை எல்லாவற்றிலும் நீக்கமறத் தாண்டவமாடிக் கொண்டிருப்பதைக் கண்டு குமுறினார் மண்டேலா. கறுப்பரின் பள்ளிக் கூடங்கள் புறக்கணிக்கப்பட்டன. அதனால், ஒழுங்கான கல்வி முறை இல்லாமல் இருந்தது. ஆனால், வெள்ளையர்களுக்கான பள்ளிகளோ சிறப்பாகப் பராமரிக்கப்பட்டன.

மருத்துவமனைகளில் வேற்றுமை பாராட்டப்பட்டது. புதைகுழியிலும், பிணங்கள் எரிக்கப்படும் இடங்களிலும் நிறவேற்றுமை வெறிதாண்டவமாடியது. மண்டேலா கெல்ட்டவுனின் பள்ளியில் விடுதியில் தங்கி படித்த காலத்தில், வைக்கோலைப் படுக்கை உறைக்குள் திணித்து படுக்கை தயாரித்துக் கொடுத்தனர்.

அதன்பின் ஜோகன்ஸ்பர்க்கில் தொடர்ந்த உயர்கல்வியின்போதும், வறுமையும், நிறவேற்றுமைக் கொடுமைகளும் அவரைத் துரத்தத்தான் செய்தன. ஜோகன்ஸ்பர்க்கில் வால்டர் சிசூலா என்பவர் நட்பு கிடைத்தது. மேலும், அவரது மாமன் மகளான ஈவி லின் மசே என்பவரை மண்டேலாவுக்கு சிசூலூ அறிமுகப்படுத்த அது காதலாக அரும்பியது.

பின் இருவரும் தம்பதியராய் மாறினர். அவர்களுக்கு முதலில் ஆண் குழந்தையும், பிறகு இரண்டு பெண் குழந்தைகளும் பிறந்தன. அடிப்படைத் தேவைகளே பற்றாக்குறையாக உள்ள



குடும்ப சூழலில் வாழ்ந்தார் மண்டேலா. நிறவேற்றுமைக் கொடுமைகளும் அத்துடன் சேர்ந்து மண்டேலாவை வழக்கறிஞர் பட்டம்பெற தடைசெய்தது.

ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் இளைஞர் அணியில் சேர்ந்து முக்கியப் பங்காற்றத் துவங்கினார் மண்டேலா. வெள்ளையர் ஆட்சிப் பொறுப்பேற்று கறுப்பினத்தவரை பலவகையிலும் பழி வாங்கத் துவங்கினர். இனவேறுபாட்டுப் பட்டியல்கள் குடும்பங்களைப் பிரித்தன. தங்களுடன் பெண்டிரை அழைத்து வராது வந்த வெள்ளையர் கறுப்பினப் பெண்டிரை மணந்து பெற்ற பிள்ளைகளும் நிறவேற்றுமைக் கொடுமைக்கு ஆளாகினர்.

ஒன்றுபட்ட குடும்பங்கள் புகுத்தப்பட்ட நிறவேற்றுமைப் பிரிவினைகளால் சிதைந்து சின்னாபின்னமாகின. தங்களின் வீட்டு வழியே நடந்தால் கறுப்பர்கள் சுட்டுக் கொல்லப்படுவர் என்ற எச்சரிக்கை விளம்பரப் பலகை வைத்தனர். நிலங்களைப் பறித்தனர். தொழில்களைத் தடை செய்தனர் .எதிர்த்தவர்களை எரித்தனர்.

நடன அரங்குகள், கடற்கரைகள், திரை அரங்குகள் யாவும் கறுப்பின மக்களுக்குத் தடைசெய்யப்பட்டன. அரசியலில் ஈடுபட்டிருந்தாலும் ஏழை எளியோருக்காகவும், கறுப்பின ம்க்களின் அடிமை விலங்கு ஒடிக்கவும், நெல்சன் மண்டேலா தவறாமல் நீதிமன்றங்களுக்கு சென்று வழக்கறிஞராகப் பணியாற்றினார்.

தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டங்களில் முக்கிய பங்காற்றிய மண்டேலா, 1951ல் இளைஞரணியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நீதிமன்றங்களில் வழக்கறிஞராக இருந்த போதிலும் கறுப்பினத்தவர் என்பதால் மண்டேலா போன்றோர் தாழ்வாக நடத்தப் பட்டனர். கறுப்புக்கும், வெள்ளைக்கும் எல்லையற்ற இடைவெளி வளர்ந்து கொண்டே இருந்தது.

(தொடரும்)

# ஜெயிக்குமா ஜெனீவாத் தீர்மானம்



> “முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிக்கை இலங்கைக்குப் பாதகமானது. சர்வதேச பலமான நாடுகளுக்கு இலங்கை தாரை வார்க்கப்பட்டுள்ளது. அரச தலைவர்கள் கூறுவது போல இலங்கைக்கு இராஜதந்திர வெற்றி அல்ல. தீர்மானம் வெளிநாட்டு நீதிபதிகள், சட்டவியலாளர்களை நியமிக்க சிபார்சுசெய்து உள்ளது. அத்துடன் அதற்கான நிர்வாகச் செலவுகளும் பலமான நாடுகளால் மேற்கொள்ளப் படும். அரசாங்கம் கூறுவதுபோல் அமெரிக்கா தீர்மானம் புதிய அரசாங்கத்திற்கு சாதகமாக அமையவில்லை.”

சென்ற மாதம் ஜெனிவா மனித உரிமை ஆணையகத்தில் நடைபெற்ற அமர்வுகள் தொடர்பாக இலங்கையிலும், ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், இந்தியாவிலும் வெளிப்படுத்தப்படும் கருத்துக்கள், அழுத்தங்கள் மக்கள் மத்தியில் கூடியளவு எதிர்பார்ப்புக்களை உருவாக்கியுள்ளன. இந்தவிதமான போக்கு சடுதியாக இம்முறை ஏற்பட்டதல்ல. கடந்த மூன்று வருடங்களாக ஐ.நா. ஜெனிவா நிகழ்ச்சி நிரலில் இலங்கை மனித உரிமைகள் விவகாரம் தொடர்ச்சியாக இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதன் பின்னணி மற்றும் அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, இந்தியா ஆகிய உலகின் சக்திமிக்க நாடுகள் பிராந்தியங்களின் நிலைப்பாடு ஆராயப்படவேண்டிய பிரதான விடயங்களாகும். ஐ.நா. ஜெனிவா UNHRC மன்றில் நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றுவரும் இலங்கை தொடர்பான விடயத்தின் தலையங்கம் பின்வருமாறு: “இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் போது இறுதிக்கட்டத்தின்போது இலங்கை அரச படைகளாலும், புலிகளாலும் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய்வதாகும்” கடந்த வருடங்களில் இலங்கைமீதான தீர்மானங்கள் பெரும்பான்மை உறுப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டதாகும். UNHRC சபையின் 47 உறுப்பு நாடுகள் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் வாக்கெடுப்பின்போது பெரும்பான்மையான நாடுகள் இலங்கைக்கு எதிராக தீர்மானம் மேற்கொண்டன. இலங்கையைப் பொறுத்தமட்டில் இந்தியா நாட்டின் நிலைப்பாடு இலங்கைக்கு கவலை தரும் விடயமாக அமைந்தது. இந்தியா நீண்டகாலமாக சர்வதேச அரங்குகளில் இலங்கைக்கு ஆதரவு தெரிவித்துவந்துள்ளது. கடந்த இரண்டு வருடங்களாக இந்தியாவின் நிலைப்பாடு இலங்கைக்கு மகிழ்ச்சி தருவதாக அமையவில்லை. இலங்கை அமெரிக்காவுடன் இணைந்து சமர்ப்பித்ததால் இம்முறை வாக்கெடுப்புக்கு அவசியம் ஏற்படவில்லை.

2015ஆம் ஆண்டு புரட்டாதி - ஐப்பசி காலப்பகுதியில் இடம்பெற்ற அமர்வுகளின்போது நிகழ்ந்த விவாதங்களும், தீர்மானங்களும், கவனிக்கப்படத்தக்கவை. கடந்த ஆண்டு அமர்வுகளின்போது அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் முன்வைத்த கருத்துக்களும் தீர்மானங்களும் இலங்கைக்கு பெரும் அழுத்தத்தை உருவாக்கியது. இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய நிலைப்பாட்டினை ஏற்றுக்கொண்டாலும் இலங்கையை முற்றாகக் கைவிடாத நிலைப்பாட்டினை மேற்கொண்டது.

இலங்கையில் 2015ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் அமெரிக்க, ஐரோப்பிய, இந்தியா நிலைப்பாட்டில் இலங்கையின் புதிய ஆட்சியாளருக்கு சாதகமான ஒரு மாற்றத்தை ஏற்படுத்தின. அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் புதிய ஜனாதிபதியின் அரசாங்கத்தின் வருகையைப் பாராட்டி இலங்கையில் ஜனநாயகம் மீளுயிர்த்ததாக சான்றிதழ் வழங்கின. இந்தியாவின் போக்கிலும் புதிய அரசாங்கம் தொடர்பாக பெரு மாற்றம் காணப்பட்டது. 2015, புரட்டாதி அமர்வுகட்கு முன்னர் ஐ.நா. ஜெனிவா தொடர்பான பல நகர்வுகள் சர்வதேச அரங்கில் நடந்தேறின. இலங்கைக்கு அமெரிக்க மேற்கு ஐரோப்பிய முக்கியஸ்தர்களின் விஜயங்கள் ஒன்றின்பின் ஒன்றாக இடம்பெற்றன. இலங்கை, இந்தியா நாடுகளுக்கிடையில் உயர்மட்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

இம்முறை அமர்வின்போது UNHRC ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை தொடர்பான அறிக்கை இலங்கையின் புதிய ஆட்சியாளர்கட்கு இக்கட்டான நிலையைத் தந்துள்ளது. அமெரிக்கா மேற்கு ஐரோப்பிய நாடுகள் வெளிப்படுத்தும் கருத்துக்கள் பெரும் உற்சாகமளிப்பதாக இருந்தாலும் மனித உரிமை ஆணையரின் அறிக்கை இலங்கை அரசாங்கத்துக்கு சங்கடத்தை ஏற்படுத்தி உள்ளது என்பதே யதார்த்தமாகும்.

ஜெனீவாத் தீர்மானம் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்காக விசாரணை மன்றை உள்நாட்டு, வெளிநாட்டு நீதிபதிகள் சட்டவியலாளர்களை உள்ளடக்கியதாக அமையவேண்டும் என்பது பிரதான சிபார்சாக அமைந்து உள்ளது. இதனைத் தமிழ் ஊடகங்கள் கலப்பு நீதிமன்றம் என வார்த்தைப் பிரயோகம் செய்கிறார்கள். இக்கலப்பு நீதிமன்றம் சர்வதேச சட்டவியலாளர்களை உள்ளடக்கவேண்டும் என ஆரம்ப அறிக்கையில் கூறப்பட்டது. பின்னர் இடம்பெற்ற கலந்துரையாடல்களில் சர்வதேசம் என்கின்ற வார்த்தைக்கு பதிலாக பொதுநலவாய நாடுகளில் இருந்து சட்டவியலாளர்கள் என இறுதி தீர்மானத்தில் வாசகம் திருத்தப்பட்டது.

இறுதி தீர்மானத்தின் பிரதான அம்சங்களின் பின்வருமாறு:

01. கலப்பு நீதிமன்றம் உருவாக்கல்.

02. அரசாங்க படைகள் சட்டத்திற்கு புறம்பாக கொலைகள் புரிந்தமை, படைகள் கற்பழிப்பில் ஈடுபட்டமை.

03. சரணடைந்தவர்களை பாதுகாக்க தவறியது.

04. புலிகள் பலவந்தமாக இயக்கத்திற்கு சிறுவர்களையும் வயோதிபர்களையும் இணைத்தமை, மக்களின் சுதந்திர நடமாட்டத்திற்கு தடை விதித்தமை. மக்களின் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் விடுத்தமை. மக்களை தாக்கியமை போன்றவை. பலவந்த ஆட்சேர்ப்பில் எழிலனின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கை தொடர்பாக அரச எதிர்க் கட்சி தமிழ் தேசியக் கூட்டமைப்பு, புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்களின் கருத்துக்கள் கவனத்திற்கு எடுக்க வேண்டியவை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் ஐ.நா. ஜெனிவா மன்ற விசாரணை இலங்கைக்கு பெருவெற்றி. இலங்கை அமெரிக்காவுடன் இணைந்தே தீர்மானத்தை சமர்ப்பித்தது. விசாரணை உள்ளக விசாரணையாக இடம்பெறும். எமது படைத்தரப்பினரை நாம் பாதுகாப்போம். பிரதமர் ரணில் இத்தீர்மானத்துடன் இலங்கை ஜெனீவா நிகழ்ச்சி நிரலிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. விசாரணை படைவீரர்களை பாதிக்க மாட்டாது. புதிய நீதி முறைமைமூலம் விசாரணை முன்னெடுக்கப்படும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிக்கை இலங்கைக்குப் பாதகமானது. சர்வதேச பலமான நாடுகளுக்கு இலங்கை தாரை வார்க்கப்பட்டுள்ளது. அரச தலைவர்கள் கூறுவதுபோல இலங்கைக்கு இராஜதந்திர வெற்றி அல்ல. தீர்மானம் வெளிநாட்டு நீதிபதிகள், சட்டவியலாளர்களை நியமிக்க சிபார்சு செய்துள்ளது. அத்துடன் அதற்கான நிர்வாகச் செலவுகளும் பலமான நாடுகளால் மேற்கொள்ளப்படும். அரசாங்கம் கூறுவதுபோல் அமெரிக்கா தீர்மானம் புதிய அரசாங்கத்திற்கு சாதகமாக அமையவில்லை.

சிறிபால டீ சில்வா:- தீர்மானத்தின் பிரகாரம் நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கையின் சட்டமுறைமை இடம் கொடுக்காது. அத்துடன் இலங்கையின் அரசியலமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். சில அம்சங்கள் சர்வஜன வாக்கெடுப்புக்கு உட்படுத்தப்பட வேண்டி ஏற்படலாம்.

ஜே.வி.பி எனப்படும் மக்கள் விடுதலை முன்னணி அறிக்கையை நிராகரித்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிக்கையை வரவேற்பதாகக் கூறியுள்ளது.

புலம்பெயர் நாடுகளில் தமிழ் டயஸ்போறா என அழைக்கப்படும் புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்கள் தமது அதிருப்தியை வெளியிட்டு உள்ளனர்.

இது இவ்வாறிருக்க, ஜெனீவா மனித உரிமை ஆணையகத்தின் இறுதி அதிகாரம் எத்தகையது. இலங்கையை குறிவைக்கும் அமெரிக்கா மேற்கு ஐரோப்பிய நாடுகளின் மனித உரிமை பேணல் சாதனைகள் எவ்வாறு அமைந்துள்ளன. பலமான நாடுகள் தாம் குறிவைக்கும் நாடுகளை தமது கட்டுப் பாட்டின்கீழ் கொண்டுவர மனித உரிமை விடயத்தை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தல் போன்ற விடயங்கள் ஆராயப்பட வேண்டியவை ஆகும். அமெரிக்காவின் ஈராக், ஆப்கானிஸ்தான், சிரியா நாடுகளில் முன்னின்று நடாத்திய நடாத்துகின்ற ஆக்கிரமிப்புகள், மனித உரிமை மீறல்கள் பெரும் பட்டியலிட்டுக் கூறக் கூடியவை. சீனாவை பின் தள்ளப்பட வேண்டுமென்ற நிகழ்ச்சி நிரலில் சிறிய வளர்ச்சியடைந்துவரும் நாடான இலங்கையின்மேல் ஆதிக்கம் செலுத்த முனைவது பெரும் அருவருக்கத்தக்கது ஆகும். இந்தியா, இலங்கைக்கு தற்போது பெரும் ஆதரவாக நடந்துகொள்கிறது.

இலங்கையின் இலத்திரனியல் அச்சு ஊடகங்களில் இன்று விவாதிக்கப்படும் பிரதான விடயமாக அமைந்துள்ளது. ஐ.நா. அமைப்பில் இறுதித்தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் ஐ.நா. பாதுகாப்பு அமைச்சில் நிரந்தர அங்கத்துவ நாடுகளுக்கு மட்டுமே உள்ளது.

இலங்கைக்கு அயல்நாடான இந்தியாவின் ஒத்துழைப்பும் ஐ.நா. நிரந்தர நாடுகளான ரஷ்யா, சீனாவின் நிரந்தர ஆதரவும் இலங்கைக்கு பார தூரமான சிக்கல்களைத் தரப்போவது இல்லை. ஆனால், மைத்திரிபால அரசாங்கம் மேற்கு நாடுகளின் தயவில் வாழ்கின்றபடியால் அவர்களை திருப்திப்படுத்த சில நடவடிக்கைகளை எடுப்பது எதிர்பார்க்கக்கூடியது.

**தேவதர்மன்**

# மாறுமா தமிழர்களின் தலைவிதி?




**தமிழ்** மக்களின் வாழ்விலே விடிவு வருமா? பிரச்சினைக்கு முடிவொன்று கிட்டுமா? என்பதே தமிழ் மக்களது இன்றைய எதிர்பார்ப்பாக உள்ளது.

கடந்த அறுபதாண்டுகளுக்கும் மேலாக தனித்து வாழக்கூடிய உரிமையை, எம்மை நாமே ஆழக்கூடிய சூழலை, அடக்குமுறையற்ற வாழ்க்கையை பாரபட்சம் இல்லாத கல்வி, எம்மண்ணிலே அத்துமீறிய குடியேற்றம், முறையற்ற இராணுவப் பிரசன்னம் என்பனவெல்லாம் தமிழ் மக்களுக்குப் பெரும் பிரச்சினையாக இருந்து வந்தநிலையிலே மேற்கூறிய பிரச்சினைகளை பேசித் தீர்க்க முன்னைய அரசியல் தலைமைகள் முயன்றபோதிலும், அதற்கான சரியான நேர்மையான விட்டுக்கொடுக்கக் கூடியதான அரசியல் சூழலை பெரும்பான்மைக் கட்சிகள் உருவாக்க முயலவில்லை. ஏதோ ஒன்றைச் செய்யமுற்படுவதுபோலக் பாசாங்கு காட்டிக்கொண்டாலும், மறுபுறத்தே பெரும்பான்மை மக்களை கோபமூட்டி தமிழர்க்கு எதிராக தூண்டிவிடப்பட்டு வந்த சம்பவங்களே பெருமளவு நடைபெற்றுவந்துள்ளன. தமிழ் மக்களுக்கு உள்ள பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளவும், பேசவும் பெரும்பான்மைக் கட்சிகள் பின்னடைவையே காட்டினார்கள். பாதயாத்திரை உட்பட பல நிகழ்வுகள், கூட்டங்களை கூட்டினார்கள். "சிறி" சட்டம், தனிச்சிங்கள சட்டமூலம் என்பனவற்றை வகுத்தார்கள். தமிழர்களை விரோதிகளாகவே பார்த்தார்கள்.

இவையெல்லாம் உச்சமடைந்தே இனக்கலவரம் மூண்டது. தமிழர்கள் வகையின்றி கொல்லப்பட்டனர். தமிழர்களின் சொத்துக்களை கொள்ளையிட்டார்கள். பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். கப்பல்மூலம் தமிழ் மக்கள் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர்.

இப்படியாக உருவான வன்செயல்களை முடிவுக்குக் கொண்டுவரவும், தமிழ் மக்களின் உரிமைகளை ஆயுதமேந்தியாவது பெற்றிடவேண்டும் என்னும் நோக்குடன்தான் தமிழ் இயக்கங்கள் தோற்றம்பெற்றது. ஆயினும் மழைபெய்ய முளைக்கும் காளான்கள்போன்ற நிலையிலேயே பல இயக்கங்கள் உருவாகி, பின் அழிக்கப்பட்டு, தனி மனிதர்களாக வாழவிரும்பியவர்களும் போராடி, கடைசியில் வாழ்ந்த பூமி, இருந்த வீடுகள், சேர்த்த சொத்துக்கள் எல்லாவற்றுக்கும் மேலான உயிர்கள் பறிக்கப்பட்டு, அகதிக்கோலம் சுமந்து, விதவை வாழ்வை வாழ அக்கினிக்குஞ்சுகளாக, சிறைப்பட்டு வாழும் வாழ்வே மிச்சமாகியது. உரிமைகள் கிடைக்கவில்லை. இருந்ததையும் இழந்து கடைசியில் காணாமல்போனோரைத் தேடுவதும், சிறையில் உள்ளோரை விடுதலை செய் என்று உண்ணாநோன்பு, "எங்கள் நிலத்தை எமக்குத் தா" என்று போராட்டம், இப்படியாக தமிழர்களின் தலைவிதி நடுத்தெருவுக்கு வந்துவிட்டது.

தமிழ் அரசியல்வாதிகளும் தேர்தல் வேளைகளில் மட்டும் வந்து தமது பொய்முகங்களை மட்டும் காட்டி வாக்கு வங்கிகளை நிரப்பிக்கொண்டு. மீண்டும் கொழும்புக்கு போய்விடுவார்கள். அங்கே தான் சொகுசு வாழ்க்கை உள்ளது. குளிரூட்டிய அறைகள் உள்ளன. பெயருக்கு மட்டும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆனால் வாழ்வதோ கொழும்பில், இப்படியான பொய்யர்களால் தமிழ்மக்களின் வாழ்வுக்கு ஒருபோதும் விடிவு உண்டாகாது. உண்டாகப்போவதுமில்லை.

இதுவரை காலமும் வெளியில் நின்றுகொண்டு அரசுக்கு எதிராகக் கூச்சல் போட்டவர்கள் இன்று இணக்க அரசியல் பாதைக்கு திரும்பியுள்ளனர். கடந்த பல வருடங்களாக பெரும்பான்மை அரசுடன் இணைந்து இணக்க அரசியல் செய்த முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமிழ் மண்ணுக்கும் மக்களுக்கும் நிறையவே செய்துள்ளார். வேலையற்றவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கினார். புகையிரதத்தை யாழ்ப்பாணம் கொண்டுவந்தார். அழிவடைந்த பூமியை அபிவிருத்தியால் அழகான பூமியாக்கியவர் டக்ளஸ் தேவானந்தா. மின்சாரம் வரப் பாடுபட்டவர். பாதைகள் திருத்தப்பட்டன. அரச அலுவலகங்கள் புத்துயிர் பெற்றது. ஆலயங்களுக்கு அள்ளிவழங்கியதுடன், கல்வியை முன்னேற்றியவர். ஏழை மக்களுக்காக உழைத்தவருக்கு விடியலை உருவாக்க முனைந்தவருக்கு கூட்டமைப்புக் கொடுத்த பட்டம் துரோகி.

ஆனால் இன்று பெரும்பான்மை அரசுடன் மன்னிக்கவும், ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து இணக்க அரசியல் பாதை என்றுபோய் பட்டம் பதவிகளைப் பெற்றது மட்டுமே மிச்சமாகியுள்ளது.

இவர்களினால் தமிழர்களின் தலைவிதியிலே ஒரு சிறு துரும்பளவு மாற்றத்தைக்கூட கொண்டு வரமுடியாது. ஏனென்றால் இவர்கள் கடந்த அறுபதாண்டுகளாக எதையுமே செய்யவில்லை. இனிமேலும் செய்யமாட்டார்கள் என்பதே உண்மை. கறையான் கஸ்டப்பட்டு புற்றெடுக்க பாம்பு வந்து குடியேறிய கதையிலே கூட்டமைப்பு உள்ளது.

நீண்டகாலத்தின் பின்பு எதிர்க்கட்சித் தலைவர் பதவி திருவாளர் சம்பந்தன் ஐயாவுக்கு கிட்டியுள்ளது. புதிய தலைவர் 'ஆனவுடன் மனிசன் தமிழன் என்பதனைக் கூட மறந்துவிட்டார். ஏனென்றால் அண்மையிலே யாழ்ப்பாணம் வந்துபோன சம்பந்தன் ஐயா! வரும் பாதையிலேயே கிராமசேவையாளர் அதாவது வலி.வடக்கு பகுதி கிராமசேவையாளர் ஒருவரைப் பார்த்து, "ஏன் இன்னும் ஏனைய பகுதிகள் விடுவிக்கப்படவில்லை என்று கேட்டுள்ளார் என்ன கேள்வியிது! எதிர்க்கட்சித் தலைமையானதும் தான் இந்த நாட்டின் மாண்புமிகு ஜனாதிபதி என்று எண்ணிவிட்டார். தமிழ் மக்களை மீண்டும் சொந்தமண்ணிலே குடியேற்றுவோம், மாகாணசபையை எம்மிடம் தந்தால் இராணுவத்தை துரத்துவோம் என்றவர்கள் பேசும் பேச்சா இது! தமிழர்களின் தலையெழுத்து சரியில்லை என்பதனால்தான் பதவிகள் கிடைக்கின்றது. ஆனாலும் தாங்களும் செய்யமாட்டார்கள். செய்யக்கூடியவரையும் தடுக்கின்றனர். அதாவது டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமைச்சுப்பதவி கொடுக்கக்கூடாது என்று அரசை கட்டாயப்படுத்தி வருகின்றனர்.

ஏன் இந்த வீண் வம்பு, டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமைச்சுப் பதவி கிட்டினால், தமிழ் மக்களுக்கு நிறைய சேவைகளை செய்வார். அரசிடமிருந்து பிடுங்கி மக்களை வாழவைப்பார். மக்கள் அமைச்சர்மீது திரும்பிவிடுவார்கள் எனும் பயம் கூட்டமைப்புக்கு உள்ளது.

வடக்கு தமிழர்களைப் பொறுத்த மட்டிலே ஒரு அரச அலுவல்களை, அபிவிருத்தியை, வேலைவாய்ப்பை, அவசர விடயங்களை கதைக்கவோ, செயற்படுத்தித் தரவோ எந்தவொரு அமைச்சும் இங்கில்லை.

சிறுவர் இராஜாங்க அமைச்சாக விஜயகலா அம்மா இருக்கின்றார். ஆனாலும் அவரது இருப்பிடம் கொழும்பு, இடைக்கிடை வந்து யாழ்.மக்களுக்கு தலைகாட்டி விட்டுப் போய்விடுவார். அவருக்கு வழங்கப்பட்டதும், முக்கிய மற்ற, அதுவும் இராஜாங்க அமைச்சு, இந்த அமைச்சினை வைத்துக்கொண்டு மாண்புமிகு அமைச்சினால் எதனையும் பெயரளவில் சாதித்துவிட முடியாது.

அவசர, அவசிய தேவைகளுக்காக தியேட்டர் பக்கம்போய் அலுவல் பார்த்தவர்கள் இப்போது கலங்கி நிற்கின்றனர். அரசமட்ட உயரதிகாரிகள் முதல் அடிமட்ட மக்கள்வரை தியேட்டர் பக்கம்போனால் தம்பிரச்சினைக்குத் தீர்வைக்கண்டு திரும்பிய வரலாறுகள் பதிவிலே உள்ளது.

இப்போது எந்த உதவியினையும், ஏன் அபிவிருத்தியைக்கூட வடக்கு சந்திக்காது! வடக்கு மக்களுக்குப் பெரும் சாபக்கேடாக அமைந்துவிட்டது. பொய்யர்களைக் தெரிவுசெய்து தமது இருப்பைக்கோட்டை விட்டுவிட்டனர்.

ஐக்கிய நாடுகள் சபையிலும் தமிழர் தரப்புக்கு ஆதரவாக கூட்டமைப்பு எதனையும் செய்யவில்லை. அரசிடமிருந்து பெற்றுக்கொண்ட சலுகைகளுக்காக தமிழர்களின் தலையெழுத்து அமெரிக்காவிலே ஏலம் போய்விட்டது!

எதுவுமே கிட்டாது, கிடைக்காது என்று தெரிந்துகொண்ட அரசியல் கைதிகள் உண்ணாநோன்பு இருக்கின்றனர். தாம் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களிடம் பேசவேண்டும் என்று கோரிக்கை விட்டுள்ளனர். சிறைகளில் இருக்கும் கைதிகளை சில கூட்டமைப்பு உறுப்பினர்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர். விடயம் இந்த அளவுடன் முடிந்துவருகின்றது.

மாண்புமிகு நீதி அமைச்சருடன் கூட்டமைப்பு பேச்சாளர் சுமந்திரன் சென்றிருந்தார். நீதி அமைச்சு கைதிகளிடம் காலஅவகாசம் கேட்டபோது, கூடச்சென்ற கூட்டமைப்பு பிரமுகர் எதுவுமே பேசவில்லை.

இது இவ்வாறிருக்க, யாழ்ப்பாண மாவட்டங்களிலே அடையாள உண்ணாநோன்பினை கைதிகளின் உறவுகள் மேற்கொண்டுவருகின்றனர். இவற்றிலே கூட எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளவில்லை. அனுதாபம் தெரிவிக்கவில்லை. இவர்களும் மக்களுடன் இணைந்து போராடினால் இவ்விடயம் முழு உலகுக்கும் போய்ச்சேரும். மக்களது தேவைகளுக்காக உழைக்காத கூட்டமைப்பினரைத் தேர்வுசெய்த மக்கள் இப்போது தமது தவறினை உணரத் தொடங்கிவிட்டனர்.


நிலைமைகள் இவ்வாறு போய்க் கொண்டிருக்க காணாமல்போனவர்களின் தேடுதல்களை மக்களே செய்து கொண்டிருக்கின்றனர். அரசியல் கைதிகள் எவருமே இல்லை என்று நீதி அமைச்சு கூறிவருகின்றது.

இதனை எதிர்த்து கதைக்க தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தட்டுப்பாடு உள்ளது. ஆனாலும் கதைக்கக் கூடியவர்களுக்கு மக்கள் பலத்தை கொடுக்கவில்லை. இதன் முழுப்பலனும் இப்போது தெரிகின்றது.

சாதாரணமாக சிறைகளிலுள்ளவர்கள் குற்றம் செய்யாதவர்களே. இவர்களை விடுதலைசெய்யவே அரசு அஞ்சுகின்றது. அப்படியானால் தமிழ் மக்களது பிரச்சினை எந்தக் காலத்திலே தீரப்போகின்றது என்ற கேள்வியை மக்களே கேட்கின்றனர். ஆட்சிக்கும் அதிகாரத்துக்கும் வரும் மட்டும்தான் எல்லாமே. பின்னர் நல்லாட்சியும் இல்லை. நாட்டாமை ஆட்சியுமில்லை. எல்லாமே பெரும்பான்மை எண்ணியபடியே தான் நடக்கும்.

இதை உணராத தமிழ் அரசியல்வாதிகள் நன்றாகத் தெரிந்துகொண்டும் வருகின்ற அரசுக்கு குடைபிடித்து வரும் நிலைமை தொடரும்வரை மாறுமா, தமிழ் மக்களின் தலைவிதி எனும் வினாவுக்கு யாராலுமே விடை சொல்லமுடியாது!.

**அளவெட்டி ப.உதயகுமார்**





> குடாநாட்டில் இளையோர்கள் மத்தியில் மதுபானம் பாவிப்பது ஒரு நாகரிகமான பழக்கமாக மாறிவருகின்றது. இதனால், சில இளைஞர்கள் தொடங்கி 80 வயது முதியவர் வரை மதுப்பாவனைக்கு அடிமையாகிவருகின்றனர். இளம் குடும்பஸ்தர்கள் மதுப்பாவனைக்கும், புகைத்தலுக்கும் அடிமையாகி தாங்கள் உழைக்கும் பணத்தில் பெரும் பகுதியை இத்தகைய துர்ப்பழக்கங்களுக்கு செலவிடுவதன் காரணமாக அவர்களை சார்ந்திருக்கும் அவர்களது மனைவியர், பிள்ளைகள் பலவிதமான துன்பங்களை சந்திப்பதை அன்றாட வாழ்வில் காணக்கூடியதாக இருக்கின்றது.

# எப்படி மாற்றுவது இப்படிப்பட்ட யாழ்.மண்ணை

குடாநாட்டில் பல்வேறு பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் கொலை, கொள்ளை, களவு, கற்பழிப்பு, குடும்பச்சண்டைகள், கோடிச் சண்டைகள் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு மக்கள் முகம்கொடுத்து வருகின்றனர். அத்தோடு, குடாநாட்டில் மதுப்பாவனையாளர்கள் தொகையும் நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றது. வாகன விபத்துச் சம்பவங்களும் அடிக்கடி இடம்பெறுவதன் காரணமாக பலர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர். வீதிகளில் பொது மக்கள், வாகனங்களின் அதிவேகத்தால் போக்குவரத்துச் செய்வதற்கு அஞ்சுகின்றனர்.

குறிப்பாக, பாடசாலை மாணவர்கள் வீதிகளைக் கடந்து செல்லமுடிவதில்லை. சைக்கிள்களில் பெற்றோர்கள் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பிவைத்துவிட்டு அவர்கள் வீடுதிரும்பி வரும்வரை தங்கள் குலதெய்வங்களை வேண்டிநிற்கின்றனர். குறிப்பாக, பெண் பிள்ளைகளை பெற்ற பெற்றோர்கள் மிகவும் கவனமாக அதிக அக்கறை செலுத்தி கண்களை இமைகாப்பதுபோல பாதுகாத்து வரவேண்டும். துன்பங்களைத் தேடி நாமே செல்கின்றோம். துன்பங்கள் எங்களைத் தேடிவருவதில்லை. ஆகவே பெற்றோர்கள், ஆசிரியர்கள், முதியவர்கள், புத்திஜீவிகளின் அறிவு முதிர்ந்த அறிவுரைகளை கேட்டு ஒழுக்கமாகவும், சாதுரியமாகவும், சமயோசிதமாகவும் நடந்துவந்தால் பிரச்சினைகளுக்கு இடமே இருக்காது.

இந்த இடத்தில் முதியவர் ஒருவர் கூறிய அறிவுரை ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது. அந்தக் காலத்தில் நான் நினைக்கிறேன் 60 வருடங்களுக்கு முன்பு இங்குள்ள பெண் பிள்ளைகளை 5ஆம், 6ஆம் வகுப்புக்களுடன் படிப்பதை நிறுத்திவிட்டு, அவர்களை வீட்டில் வைத்து அவர்களுக்கு அறிவான நூல்களையும் வாங்கிக்கொடுத்து படிக்கவைத்து அறிவுரைகள் கூறி, பட்டறிவுடன்கூடிய ஒழுக்கமான கல்வியை எம்முன்னோர்கள் புகட்டி வந்தனர். அத்தோடு, தங்கள் கட்டுப்பாட்டுக்குள்ளும் வளர்த்து வந்தனர். இதனால், பிரச்சினைகள் தோன்றவழி இல்லாது அவர்கள் ஒழுக்கசீலர்களாக வளர்ந்துவந்ததாகத் தெரிவித்தார். அது அந்தக்காலம். இந்தக் காலம் கலியுக காலம். பெண் பிள்ளைகள் தங்களின் எதிர்காலம் நலன்கருதி, இன்று கல்வியில்கூடிய அக்கறை செலுத்தி பரீட்சைகளில் உயர் பெறுபேறுகளைப் பெற்று முன்னுக்கு வந்துகொண்டு இருக்கிறார்கள். காரணம், தாங்கள் பரீட்சையில் சித்தி பெற்று உயர்ந்த கல்வியைக் கற்று, உயர் பதவிவகிக்க வேண்டுமென்ற எண்ணமேயாகும். இதனால், யாழ்.குடாநாட்டில் அநேக அரச திணைக்களங்களில் உயர்ந்த பதவிகளில் பெண்களே காணப்படுகின்றனர்.

இதேவேளை, யாழ் குடாநாட்டில் சீதனப் பிரச்சினையால் எத்தனையோ இளம்பெண்கள் வாழ வழியின்றி வயது 35 ஐயும் தாண்டி நடைப்பிணமாக வாழ்வதையும் நாம் காண முடிகிறது. சீதனம் கேட்பதில் ஆண் பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர்கள்தான் அதிக அக்கறை காட்டுவதாக நண்பர் ஒருவர் தெரிவித்தார். இது இவ்வாறிருக்க, சில பெண்கள் தங்களுக்குரிய துணையை தாமே தெரிவுசெய்து பின்பு பெற்றோருக்குத் தெரிவித்தும் சிலர் அவர்களின் சம்மதத்துடனும் சிலர் சம்மதம் இன்றியும் திருமணம் செய்துகொள்கின்றார். இவர்களில் பலர் "ஆசை 60 நாள் மோகம் 30 நாள்" என மணவாழ்வு கசந்து, குறுகிய கால இடைவெளிக்குப் பின்னர் விவாகரத்துக்கோரி நீதிமன்றப் படிகளில் ஏறுவதை இங்கு சர்வசாதாரணமாக பரவலாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

பெற்றோர்களின் விருப்பப்படி அவர்களின் வாழ்த்துரையோடு இடம்பெறும் திருமணங்கள் அநேகமாக நீடித்து நிலைத்து நிற்கின்றன. இது இவ்வாறிருக்க, இன்றைய யாழ்ப்பாண இளம் பெண்கள் சிலர் "கண்டதே காதல்கொண்டதே கோலம்" என்றநிலையில் மக்கள் அதிகம் நடமாடும் பொதுஇடங்களில் தங்களை மறந்த நிலையில் பிற ஆண்களோடு சிறிதும் கூச்சமின்றி கைபேசிகளில் நீண்டநேரம் உரையாடுவதும், பின்பு அவர்களை இரகசியமாக சந்திப்பதும் பின்னர் திரையரங்குகள், குளிர்பானக் கடைகள், புடைவைக்கடை ஆகியவற்றுக்குச் சென்று இனிமையாக பொழுதுகளை கழித்து வருகின்றார்கள்.

இவ்வாறு இவர்கள் மத்தியில் துளிர்விடும் "திடீர் காதல்" திருமணத்தில் போய் முடிவடைகின்றதா என கேட்டால் இல்லை என்றே பதில் வரும். சில இளம்பெண்கள் காதலிப்பது ஒருவர் கழுத்தை நீட்டுவது வேறு ஒருவருக்கு என்ற நிலையில் உள்ளதை நாம் இன்றைய நவநாகரிக சமூகத்தில் காணமுடிகிறது.

குடாநாட்டில் இளையோர்கள் மத்தியில் மதுபானம் பாவிப்பது ஒரு நாகரிகமான பழக்கமாக மாறிவருகின்றது. இதனால், சில இளைஞர்கள் தொடங்கி 80 வயது முதியவர்வரை மதுப்பாவனைக்கு அடிமையாகி வருகின்றனர். இளம் குடும்பஸ்தர்கள் மதுப்பாவனைக்கும், புகைத்தலுக்கும் அடிமையாகி தாங்கள் உழைக்கும் பணத்தில் பெரும் பகுதியை இத்தகைய துர்ப்பழக்கங்களுக்கு செலவிடுவதன் காரணமாக அவர்களை சார்ந்திருக்கும் அவர்களது மனைவியர், பிள்ளைகள் பலவிதமான துன்பங்களை சந்திப்பதை அன்றாட வாழ்வில் காணக்கூடியதாக இருக்கின்றது. இதன் காரணமாக குடும்பச்சண்டைகள் பெருகி, வீண் மனஸ்தாபங்கள் ஏற்பட்டு விவாகரத்துக்கள் பெருகி, இளம் குடும்பப்பெண்கள் தங்கள் குழந்தைகளுடன் ஜீவனாம்சம்கோரி நிற்போர் தொகை அதிகரித்துவருவதாக வயோதிபர் ஒருவர் தெரிவித்தார். அத்தோடு, குடாநாட்டில் உள்ள வங்கிகளில் அதிக பணம் வைப்புச் செய்பவர்கள் மதுபான விற்பனையாளர்களே என வங்கியாளர் ஒருவர் தெரிவித்தார். இதேவேளை, கசிப்பு உற்பத்தி வீதம் தற்போது குறைந்துள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். வேண்டிய மதுபான வகைகளை இங்கு தாராளமாகப் பெறக்கூடியதாக உள்ளமையே இதற்குரிய காரணமாகும்.


இதேவேளை, யாழ்.குடாநாட்டில் நோயாளர்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. மாலை வேளைகளில் இடம்பெறும் கிளினிக் மாலை 6.30 வரை இடம்பெறுகின்றது. இதற்குரிய காரணங்கள், மக்கள் இளம் வயதிலேயே தீயபழக்கங்களைப் பழகுவதால் குறைந்த வயதிலேயே நோயாளிகளாக மாறிவிடுகின்றார்கள். முன்பு 80 - 90 வயது வரை முன்புவாழ்ந்த மக்கள் இன்று விரைவில் நரை, திரை, மூப்பு ஏற்பட்டு 60 - 65 வயது வரையுமே வாழ்கிறார்கள். மக்கள் கட்டுப்பாடின்றி மனம் போன போக்கில் ஒழுக்கம் கெட்டு வாழ்வதே இதற்குரிய காரணமாகும்.

அத்தோடு, பெண்கள் இளம் வயதில் திருமணம் செய்வதாலும் பல ஆண்கள் இளம் வயதிலேயே நோயாளிகளாக இறக்கநேரிடுவதாக ஒரு குடும்பஸ்தர் தெரிவித்தார். ஆகவே, எதிர்காலச் சந்ததியினர் மனக்கட்டுப்பாடுடன் ஒழுக்கசீலர்களாக வாழ்ந்தால் தங்கள் ஆயுளை நீடிக்கமுடியும். அளவோடு பிள்ளைகளைப் பெற்று வளர்த்து அவர்களை சமூகத்திற்கு ஏற்ற நற்பிரஜைக்காக உருவாக்கும் பாரிய பொறுப்பு ஒவ்வொரு குடும்பப் பெண்ணினதும் கைகளிலேயே தங்கியுள்ளது. குடும்பப்பெண்கள் தங்கள் குடும்பங்களிலுள்ள வயதில் முதிர்ந்தவர்களின் அறிவுரைகளைக் கேட்டு முன்மாதிரியாக வாழப் பழகிக்கொள்ளவேண்டும்.



# பாப்பா முரசு

**இப்பகுதிக்கு சிறுவர்களிடம், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.**



பரமண்ணா

# "விளையும் பயிரின் முளை!"

பெற்றோரின் செய்கை மூட்டி விட்ட எரிச்சலுடன் சகோதரியின் குரங்குச்சேட்டைகளும் சேகரனின் பொறுமையைச் சோதித்துக் கொண்டிருந்தன. ஒருவாறு சமாளித்துக்கொண்டான் அவன்.

காலைக்கடன்களை முடித்துக் கொண்ட அவர்கள் தனியார்துறை விடுதி டாக்டரிடம் வந்தபோது பகலவனும் சுள்ளாப்பாக பொற்கரங்களை பூமிக்கு அனுப்பத் தொடங்கி இருந்தான்.

"மிஸ்டர் சோமசுந்தரம்... சேகரனைச் சோதித்துப் பார்த்ததில் எவ்வித நோயும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எதையோ தன்னுடைய மூளையின் சக்திக்கப்பாற்பட்ட விசயத்தைச் சிந்திப்பதாலே இப்படி இருக்கிறார். இருப்பினும் உங்கடை திருப்திக்காக இத்தடவை மருந்து எடுத்துப் போங்கோ... அப்படியும் இல்லேண்டால் மீண்டும் என்னை வந்து சந்தியுங்கள்..."

டாக்டரின் கூற்றை நன்றாகக் காதுகளில் விழுத்திக் கொண்டவர்களாக எழுதிக் கொடுத்த மருந்தையும் வாங்கி வீடு திரும்பியிருந்தனர்.

சேகரனுக்கு இவையெல்லாம் எவ்வித அர்த்தத்தையும் புரிய வைக்கவில்லை. அது வெறும் பைத்தியக்காரச் செயலாகவே அவனுக்குப்பட்டது. டாக்டரால் வழங்கப்பட்டிருந்த மருந்தைப் பருகி முடிப்பதில் சேகரனுக்குச் சொல்லொணாச் சலிப்பே ஏற்பட்டு இருந்தது. எப்பொழுதுதான் இந்தத் தலைவிதி விட்டுப் போகுமோ? இவ்விதம் தன்னுள் ஏங்கிக் கொண்டிருந்தான் அவன்.

நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாகப் போத்தலில் இருந்த மருந்து வயிற்றுள்ள மாறி இடம்பிடித்துக்கொண்டதால் குறைந்துவருவதைப் பார்க்கப் பார்க்க நெஞ்சில் ஏற்பட்டிருந்த சுமைகளும் வெயிலைக் கண்ட பனிபோல் கொஞ்சம் கொஞ்சமாக அகன்று கொண்டிருந்தது.

எனினும் அவனுடைய நிலைமையில் சிறிதேனும் மாற்றம் தென்படவில்லை. இன்னமும் கூடுதலான பிடிப்பே சிந்தனைப் போக்கில் வளர்ந்துவந்தது.

சேகரனுக்கு இப்பொழுது தன்னைப் பற்றிச் சிந்திக்க முடிவதில்லை. அந்தளவுக்கு அவனுடைய சிந்தனைகள் மண்டையுள் நிரம்பிக் கிடந்தன. அணிந்துள்ள உடைகள் அழுக்கடைந்து விட்டாலும் அதை அவன் கவனிப்பதில்லை. இல்லாமலும் தன்னை அலங்கரித்துக்கொள்ள வேண்டுமென்பதில் நாட்டம் இல்லாமல் போயே நாட்களாகிவிட்டன.


இக்கோலங்களில் தற்செயலாக அவனைக் காண்பவர் எல்லாரும், ஒரு மாதிரியாகவே நோக்குவதையும் அவன் புலனுக்கு எடுத்துக் கொள்வதும் இல்லை.

டாக்டர் கொடுத்து அனுப்பி இருந்த மருந்தின் பின்பும் மகனது நிலைமையில் எவ்வித மாற்றங்களையும் அனுபவித்து இருக்காத தாயார் விசயத்தைக் கணவரது காதுகளிலும் போட்டு வைத்தாள். "அப்படியெண்டால்... டாக்டர் சொன்னதுபோலை அவரை மீண்டும் சந்தித்துத்தான் விசயத்தைத் தெளிவுபடுத்த வேண்டும்.

மனைவியின் முறைப்பாட்டைக் கேட்டுக்கொண்ட சோமசுந்தரம் சொன்னதுந்தான் அன்னத்துக்கும் நெஞ்சில் தென்பே பிறந்தது.

டாக்டரைச் சந்திக்கமுன்னர், வேறு சிலர் சொன்ன வைத்தியமுறைகளையும் பரீட்சித்துப் பார்த்தாகிவிட்டது. முற்கெம்பாகத்தான் அவை முடியுமென்பதையும் அவர்களால் ஏற்கனவே அறிந்திருக்கமுடியாமல் போய்விட்டது. சேகரனை முன்பெல்லாம் வந்து சந்திக்கும் நண்பர்களும், இப்வெல்லாம் வந்து சந்தித்துச்செல்கின்ற வழமையை மாற்றம் செய்தும்விட்டனர். அவனுடைய தற்போதைய நிலையை அவர்களும் ஏதோ விதமாகக் கற்பித்துக் கொண்டிருப்பதுதான் காரணமோ?

சிந்தனைகளால் சேகரனுக்கு மண்டை நிறைந்த வேலை இருந்ததால், அவனால் அவற்றைச் சீர்தூக்கிப் பார்க்கவும் இயலவில்லை. இல்லாமலும் அவர்களது இடையூறுகள் தவிர்க்கப்பட்டிருந்ததும் ஒருவகையில் அவனுக்குப் பிடித்துத்தான் இருந்தது. அவனில் ஏற்பட்டிருக்கும் மாறுதலை வைத்து பெற்றோர் மேற்கொண்ட பரிகார முறைகளை அறிந்த அயலவரும் அவனைச் சந்தேகக் கண்களினால் பார்ப்பதையும் அவனால் புரியமுடியவில்லை.



(தொடரும்)

## வாரம் ஒரு திருக்குறள்



### அன்புடைமை

**புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும்**
**யாக்கை அகத்துறுப்பு அன்பி லவர்க்கு.**

உடம்பின் அகத்து உறுப்பாகிய அன்பு இல்லாதவர்க்கு உடம்பின் புறத்து உறுப்புக்கள் எல்லாம் என்ன பயன் செய்யும்.

குறள் : 79

## விசித்திர மணிகள்

ஆலய வழிபாடுகளிலும் அரண்மனைகளிலும், கால்நடைகளின் கழுத்திலும் மணிகள் ஒலித்தன, ஒலிக்கின்றன. பண்டைய காலத்தில் மணிகள் சிறிய வடிவிலும் மிகப் பிரம்மாண்டமான வடிவிலும் உருவாக்கப்பட்டன. அவற்றில் சில விசித்திர மணியைப் பற்றி அறிந்த கொள்வோம்.




உலகிலேயே மிகப்பெரிய மணி மாஸ்கோவில் இருக்கிறது. 1733 ஆம் ஆண்டில் இது உருவாக்கப்பட்டது. 193 டன்கள் எடையும் 6.38 மீற்றர் உயரமும் கொண்டிருக்கும். கிரெம்லின் சதுக்கத்தில் இது வார்க்கப்பட்டு 97 ஆண்டுகள் தொங்கவிடப்படாமல் தரையில் இருந்தது. 1836 இல் தான் ஒருகட்டத்தில் தொங்கவிடப்பட்டது. சில ஆண்டுகளுக்குப் பிறகு அந்தக் கட்டடம் தீப்பிடித்துக் கொண்டதால் மணி கீழே விழுந்து உடைந்துவிட்டது. அதோடு, இந்த மணி ஒலிப்பதில்லை.


## நீலக்கிளி மீன்



நீலக்கிளி மீன் எனும் இந்த வகை மீனின் புகலிடம் அத்திலாந்திக் பெருங்கடலாகும். மிக வித்தியாசமான முக அமைப்பைப் கொண்டிருக்கும் இந்த மீனின் சராசரி எடை 75 கிலோகிராம் ஆகும். சில மீன்கள் 1.2 மீற்றர் வரை வளரக்கூடியவை. இந்த மீன்கள் உணவு தேடுவதற்காகவே தம் பெரும்பான்மை நேரத்தைச் செலவிடுகின்றன.



**உலகப் புகழ்பெற்ற மோனாலிசா ஓவியம் இடது கையால் வரையப்பட்டது.**



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிடவேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 26.10.2015

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 1117**
**தினமுரசு வாரமலர்**
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1117**

என்.செந்தூரன்,
கண்டி வீதி, கொடிகாமம்.

**பரிசுக்குரியவர்: 1115**

**பாராட்டுக்குரியவர்கள்**

01. எம்.கயானன், முள்ளியவளை, முல்லைத்தீவு.
02. ப.காவியா, அராலி மேற்கு, அராலி.
03. க.வர்சாந்த், தும்பளை, பருத்தித்துறை.
04. இ.நேசன், கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
05. எம்.முகுந்தினி, பேராதனை, கண்டி.
06. ந.சாவிதா, ஏறாவூர், மட்டக்களப்பு.
07. அ.நவீன், பிரதான வீதி, வவுனியா.
08. எம்.ஹிமாயா, ரெப்பானா, விசுவமடு.



**எப்போதும் காற்றுவீசும் திசையிலேயே தலை வைத்துப் படுக்கும் மிருகம் நாய்.**



# வெளியீடுகளைப் பாதித்து வரும்

# பாடசாலை நிர்வாக முரண்பாடுகள்

பொதுவாக இன்றைய சமூக நிறுவனங்கள் பலவற்றில் முரண்பாடுகள் முற்றியநிலையில் பல பிரச்சினைகள் உருவாகிவருகின்றன. இருப்பினும் இதன் வெளியீடுகள் பொருள் அளவில் இருப்பதனால் மதிப்பீட்டின்மூலம் முரண்பாடுகள் வெளியீட்டைப் பாதிக்காதவகையில் பார்த்துக்கொள்ளலாம். ஆனால் சில சமூக நிறுவனங்களில் இம் முரண்பாடுகள் வெளியீட்டைப் பாதிக்கின்றன. அதில் ஒன்றுதான் பாடசாலை தப்டிவிட்டால் உடைந்து விடும் முட்டைக்கருக்களைத் தத்தெடுக்கும் களமிது, வெளியீட்டை வெறும் பரீட்சையில் மாத்திரம் அளக்க முடியாத ஆளணி விருத்தியிது. பண்புசார் விருத்திகளை படிப்படியாக உருவாக்கவேண்டிய பக்குவமான இடமிது. இப்பாடசாலை நிர்வாகங்களில் முரண்பாடுகள் ஏற்படும்போது எதிர்கால சந்ததிகளைப் பெருமளவு பாதிக்கும். வெளியீடுகள் வெற்றிகரமாக இல்லை என்பது கூடத் தெரியாமல் தோல்விநிலை உருவா-கும். ஆகவே இப்பாடசாலைகளில் ஏற்படும் முரண்பாடுகளைத்தீர்க்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

அதிகாரப் போர்வைகளைக் கையில் எடுத்து யார் பெரிது...? எனும் நிலைப்பாடுகள்தான் பாடசாலை முரண்பாடுகளிற்கு அடிப்படைக்காரணமாக அமைகின்றது. இது பெண் பெரும்பான்மை நிர்வாகங்களில் அதிகமாகக் காணப்படுகின்றது. தாம் அப்பாடசாலை சமூகமட்டத்தில் தாமாக நிர்ணயித்த ஓர் நிலைக்களத்தில் இருக்கவேண்டும் என்பதற்காக தாமே தமக்குள் போடும் ஓர் அர்த்தமற்ற அந்தஸ்து அது.

இது தமது தராதரம் தமக்கே போதாது எனும் அடிப்படையில் உருவாகும் அர்த்தமற்ற ஆதங்க மாகும். தம்மை இந்த சமூகம் புறக்கணித்துவிடுவார்களோ என்கின்ற உள்ளுணர்வால் உருவாகும் வெளிப்பாட்டு மேலோங்கலாகும். இதை தவிர்த்துக் கொள்ள நாம் முனையவேண்டும். உண்மை மானிட அந்தஸ்து என்பது வேறு நாம் எதிர்பார்க்கின்ற அந்தஸ்து என்பது வேறு. எமது செயற்பாட்டால் எமக்கு சேரும் சமூகக் கணிப்பீடே உண்மையான அந்தஸ்து. அது நிலையானதாகவும் இருக்கும். ஆனால் நாமே அதற்கப்பால் நாமாக சில வேலிகளைப்போட முனைகின்றோம். இதுவே இன்று வெளியீட்டைப் பாதிக்கும் பிரதான காரணியாக மிளிர்கின்றது.

மாணவர்களிற்கிடையில் ஆசிரியர்கள் ஒரு வேலியைப் போடுகின்றனர். இதனால் உறவு நிலை இடைவெளியேற்பட கற்றல் வெளியீடு பாதிப்படைகின்றது.

மறுதுருவத்தில் ஆசிரியர்கள் போடும் வரம்பை மாணவர்கள் மீறும்போது இருவருக்கிடையிலும் முரண்பாடுகள் முற்றுகின்றன. கல்லூரியில் நடக்கின்ற கற்றல் செயலொழுங்கு யாருக்காக என்பதை ஆசிரியர்கள் புரிந்து கொள்ளவேண்டும். யாரிற்காக ஆசிரியர்களிற்கு ஊதியம் கொடுக்கப்படுகின்றது. கற்றல் செயலொழுங்கின் இறுதி இலக்கு என்ன? அதை அடைவதை மாத்திரமே குறிக்கோளாகக் கொண்டுள்ள எந்த ஓர் ஆசிரியரும் தன்நிலைக்கப்பால் நின்று மாண-வனைக் கனம் பண்ணுவராயின் வெளியீடு நிச்சயம் வெற்றியளிக்கும். இது காலஓட்டத்தில் மாணவர்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படும் என சிலர் வாதிடமுடியும். கட்டுப்படுத்தல் என்பது வெளியீட்டின் வெற்றிக்கு என நினைத்து செயற்பட்டால் நிச்சயம் அக்கட்டுப்படுத்தலால் முரண்பாடுகள் உருவாகாது. உங்கள் செயற்பாட்டின் கருப்பொருளை நிச்சயம் ஏதே ஒரு கட்டத்தில் எதிரே நிற்பவர்கள் புரிந்துகொள்வார்கள். சுயத்தைக்காக்க சில வரம்புகளை நீங்கள் போடும்போதுதான் முரண்பாடுகள் முற்றிப் பிரச்சினைகளாக உருவெடுக்கின்றது. அதிபர் வெளியீட்டுக்கப்பால் தன்நிலையைத் தக்கவைக்க முயற்சிக்கின்றார். ஆசிரியர் அதற்குமேல் ஒரு படியேற ஆரம்பிக்கின்றார். இருவரது முரண்பாட்டையும் தனக்கு சாதகமாகப் பயன்படுத்த மாணவன் முயற்சிக்கின்றான். வெளியீட்டிற் கப்பால் வெறும் வாய்த்தர்க்கங்கள் தான் அங்கு மிச்சமாகும்.

**ஆர்.கே.மேனன்**

பெரும் பெரும் விழாக்களெல்லரம் கொண்டாடுகின்றோம். ஒன்றுபட்டு பெருமையை வெளியில் சொல்லவேண்டுமென்றெல்லாம் ஆசைப்படுகின்றோம். ஆனால் பாடசாலைக்குள் பெருமைக்குரியதாக பெரும்பாலானவை இருக்கின்றனவா என்று என்றாவது சிந்திக்கின்றோமா...? அதிபர் தற்பெருமைக்காக பாடசாலையை பெருமைப்படுத்துகின்றார். ஆசிரியர்கள் அவரிடம் அல்லது அந்த சமூகத்திடம் தன்நிலை பெருமைப்படவேண்டும் என்பதற்காக செயற்படுகின்றனர்.

உண்மை வெளியீட்டை உளமார சிந்திப்பவர்கள் மிகக் குறைவு. மனிதர்கள்தானே நாமெல்லாம் என வாதிடமுடியும். ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் மிருகங்களாக மாணவர்கள் மாறிவருகின்றனர் என்பதையும் நீங்களும் ஏற்றுக் கொள்ளவேண்டும். இதை கூறவருகின்ற எனக்கும் உங்களிற்குமான போட்டியல்ல. ஒன்றுபட்டு செயற்படவேண்டும் எம் சந்ததி உயர என்பதே இதன் அடிப்படையாகும்.

---

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

### குறுக்கெழுத்துப் போட்டி - 647

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | ■ | 11 | 12 |
| 13 | 14 | 15 | ■ | 17 | 18 |
| 19 | 20 | ■ | 22 | 23 | 24 |
| 25 | ■ | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

### குறுக்கெழுத்துப் போட்டி 645 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 தே | 2 மா | 3 ந | 4 று | 5 ம் | 6 பூ |
| 7 ச | 8 ந | 9 ல் | ■ | 11 கா | 12 சா |
| 13 ச | 14 ல | 15 மா | 16 ம் | ■ | 18 ந் |
| 19 ஞ் | ■ | 21 த் | 22 ரு | 23 ம் | 24 தி |
| 25 சா | 26 ம் | 27 வ | 28 த | 29 தா | 30 ர |
| 31 ரி | ■ | 33 ம் | 34 ம | 35 க | 36 ம் |

**மேலிருந்து கீழ்**

1. சிவந்த நிறமுடைய மலர் வகையொன்று.
2. மனிதர்களுக்கு நோய் உண்டாகும் பறப்பன வகையொன்று. (குழம்பியுள்ளது)
3. குரங்கு இனத்தைச் சேர்ந்த ஒரு விலங்கு.
5. இவரின் நிலை உயர்த்தப்பட்டால் தேசமும் அதன் நிறுவனங்களும் உயர்வடைந்தே தீரும். என்றார் விவேகானந்தர்.
6. மானிடவர்க்கம். (குழம்பியுள்ளது)
22. அகழி, குளம், யானை. (குழம்பியுள்ளது)
27. முனிவர்.

**இடமிருந்து வலம்**

1. பத்திரிகைகளுடன் வரும் இணைப்பு ; ஒன்றிப்பு.
7. இரசகருப்பூரம். (குழம்பியுள்ளது)
11. மானமுடையோன். (திரும்பியுள்ளது)
13. கௌதம முனி. (மூன்றாம் எழுத்துவிடுபட்டு குழம்பியுள்ளது)
17. விண்ணப்பம்.
19. உப்பரிகை. (கடைசி எழுத்து விடுபட்டுள்ளது)
22. இந்த தொழில் நுட்பம் கண்டறிந்த பின் காரியாலய வேலைகள் இலகு வானது. (குழம்பியுள்ளது)
31. சீனதேசத்து தத்துவ மேதை(குழம்பியுள்ளது)

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 02.11.2015 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 647
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.645 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

ம.சிந்துஜன்,
வாகரை, மட்டக்களப்பு.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. என்.கனகசாந்தி, வட்டுக்கோட்டை மத்தி, வட்டுக்கோட்டை.
02. ஆர்.நிசானி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
03. ப.அரவிந்தன், பிரதான வீதி, காலி.
04. என்.சுப்பிரமணியம், கடற்கரை வீதி, நீர்கொழும்பு.
05. ம.பாவனா, திருநாவற்குளம், வவுனியா.
06. சா.திகானா, நிந்தவூர், மட்டக்களப்பு.
07. ம.தாரணி, பிரதான வீதி, நுவரெலியா.
08. திருமதி து.மகேஸ்வரி, கொட்டாஞ்சேனை.
09. எஸ்.கணேஸ்வரன், பூநகரி, கிளிநொச்சி.
10. எம்.எவ்.நுஃமான், உடப்பு, புத்தளம்.

# நடிகர்களின் கிசுகிசு பெயர்கள்

சினிமா சம்பந்தப்பட்ட கிசுகிசுக்களைப் படிப்பதில் பெரும்பாலானோருக்கு அதிக ஆர்வம் உண்டு. ஆனால், சிலநேரங்களில் கிசுகிசுவில் குறிப்பிடப்பட்டிருக்கும் நடிகர், நடிகை யார் என்பது குழப்பமாகவே இருக்கும். நடிகர், நடிகைகளின் கிசுகிசு பெயர்களை தொகுத்து தந்துள்ளோம்.

ரஜினி - உச்ச நட்சத்திர நடிகர், உச்ச நடிகர், நட்சத்திர நடிகர், ஸ்டைல் நடிகர்.

கமல் - முத்த நடிகர், அவதார நடிகர், சூப்பர் அக்டர், யுனிவர்சல் ஹீரோ.

அஜித் - தல நடிகர், கோட் நடிகர்.

விஜய் - பன்ச் நடிகர், தளபதி நடிகர், கில்லி நடிகர், கன் நடிகர், அணில் நடிகர்.

விக்ரம் - சீயான் நடிகர்

சூர்யா - ஒளி நடிகர், சன் நடிகர்.

ஆர்யா - பிளே-பாய் நடிகர், கடவுள் நடிகர், ஓட்டல் நடிகர், பிக்கப் நடிகர்.

விஷால்- உயர நடிகர், திமிரு நடிகர், கறுப்பு நாயகன்.

தனுஷ் - ஒல்லிப் பிச்சான் நடிகர், கொலவெறி நடிகர், சூப்பர் மருமகன்,

சிம்பு - விரல் நடிகர், சர்ச்சை நடிகர், வம்பு நடிகர், மன்மத நடிகர்.

சிவகார்த்திகேயன் - டிவி நடிகர், மிமிக்ரி நடிகர், சிவ நடிகர், வருத்தப்படாத நடிகர், சிவமுருகன்.

சந்தானம் - சாண்டல்வுட் நடிகர், மணக்கும் காமெடி நடிகர்.

விஜய் சேதுபதி - பதி நடிகர், சூது நடிகர்.

நமீதா - மச்சான் நடிகை.

அனுஷ்கா - குதிரை நடிகை, உயர நடிகை, யோகா நடிகை, அருந்ததி நடிகை.

டாப்ஸி - டாப் நடிகை, வெள்ளாவி நடிகை.

த்ரிஷா -நம்பர் நடிகை, மூணுஷா, மாமி நடிகை, மூணாம் நம்பர் நடிகை.

நயன்தாரா - நம்பர் நாயகி, நயன நடிகை, சர்ச்சை நாயகி.

சமந்தா - சமத்து நடிகை, காத்தாடி நடிகை, ஈ நடிகை.

அமலா பால் - பறவை நடிகை, மில்க் நடிகை.

ஹன்சிகா - கொழுகொழு நடிகை, மொத் நடிகை, சின்னப்பூ நடிகை, குட்டிப்பூ நடிகை, கல் நடிகை.

பிரியா ஆனந்த் - அமெரிக்க ரிட்டர்ன், பிரியமான நடிகை, ஆனந்த நடிகை.

லட்சுமி மேனன் - மங்களகரமான நடிகை, முத்த நடிகை, ஆனை நாயகி, ஸ்கூல் நடிகை, லட்சுமி கரமான நடிகை.



# மீண்டும் தள்ளிப்போகும் அனுஷ்க

அனுஷ்கா நடிப்பில் தற்போது வெளியாகியிருக்கும் படம் ருத்ரமாதேவி. இப்படம் வெளியாகி திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. இப்படத்தை தவிர அனுஷ்கா நடிப்பில் இஞ்சி இடுப்பழகி படமும் உருவாகியிருக்கிறது. இப்படம் முதலில் ஒக்டோபர் 1ம் திகதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டது. பின்னர் தள்ளிப்போய் ஒக்டோபர் 9ம் திகதி வெளியாகும் என்று உறுதிசெய்யப்பட்டது. இறுதியாக ருத்ரமாதேவி படத்துடன் இணைந்து ஒரேநாளில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சில காரணங்களால் அதுவும் தள்ளிப் போனது.

இந்நிலையில், தற்போது நவம்பர் 27ம் திகதி வெளியாகும் என்று அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கின்றனர். இஞ்சி இடுப்பழகி படத்தில் ஆர்யாவிற்கு ஜோடியாக அனு
நடித்திருக்கிறார். இரண்டாம் உ
படத்திற்குப் பிறகு ஆர்யா - அனு
இணைந்து நடித்திருக்கும் படம்

இப்படத்தை கே.எஸ்.பிரகா
இயக்கியிருக்கிறார். பி.வி.பி
நிறுவனம் இப்படத்தை பிரம்மா
தயாரித்திருக்கிறது. மரகதமணி
இசையமைத்துள்ள இப்படத்திற்
நீரவ்ஷா ஒளிப்பதிவு செய்துள்ள
இப்படம் தெலுங்கில் சைஸ் ஜீரோ என்னும் பெயரில் உருவாகிறது.

இப்படம் எடை குறைப்பு பற்றிய கதையாக உருவாகி இருக்கிறது. இதில் அனுஷ்கா இரண்டு
தோற்றத்தில் நடித்திருக்கி
இந்தப் படத்துக்காக அனு
கிலோ எடை கூட்டி நடி
இதனால் இப்படம்
ரசிகர்கள் மத்தி
எதிர்பார்ப்பு இ




## குழந்தைகளைக் கவரும் ஜீவிப்பிரகாஸ்

டார்லிங் படத்தின்மூலம் ஹீரோவாக அறிமுகமானவர் இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் குமார். அடுத்து த்ரிஷா இல்லனா நயன்தாரா படத்தின் வெற்றியைத் தொடர்ந்து அடுத்த கட்டத்திற்கு நகர்ந்துவிட்டார். இவரின் அடுத்த படத்தின் பெயர் புரூஸ் லீ. இப்படத்தில் ஜி.வி.பிரகாஷ்குமார் நாயகனாகவும், கீர்த்தி கர்பந்தனா நயாகியாகவும் நடிக்கிறார்கள். அறிமுக இயக்குநர் பிரஷாந்த் பாண்டிராஜ் இப்படத்தை இயக்குகிறார். அக்ஷன் காமெடி படமாக உருவாகிவரும் இந்த படத்தில் பால சரவணன், முனிஸ்காந்த் ஜராமதாஸ் மற்றும் பலர் நடிக்கவுள்ளனர்.

இப்படத்திற்கான படப்பிடிப்பு வருகிற நவம்பர் மாதம் முதல் துவங்கவிருக்கிறது. ஹாரர், அடல்ட் என்று வெவ்வேறு வகையிலான களங்களில் நடித்துவந்த ஜி.வி.பிரகாஷின் இந்தப் படத்தின் மூலம் குழந்தைகளை கவரவிருக்கிறார். குழந்தைகளை மையமாக கொண்டு படங்களை இயக்கும் பாண்டிராஜிடம் உதவியாளராக இருந்த பிரஷாந்த் பாண்டிராஜ், இப்படத்தை இயக்குவதால் குழந்தைகளை கவரும் அக்ஷன் படமாக இருக்கும் என்கிறார்கள்.

## சினிவிசிட்




# ருத்

நடிகர் : அல்
இசை : இளையராஜா
காகத்திய ஆட்சி
குழந்தை பிறக்கிறது.
உட்பட அனைவரும் வ
பக்கத்து நாட்டு பகையாளியான தேவகிரி அர
ஆனால், இதை அரசனின் தம்பிகளான ச
பிறந்தால், அதையே காரணம் காட்டி நாட்டை
நயவஞ்சகர்கள். இவர்கள் நினைத்ததுபோல்
நாட்டு மக்களுக்கு தெரிந்தால், நம்பிக்கை
பிறந்தது ஆண்தான் என்று கூறச்சொல்கிறார்
அறிவிக்கின்றனர்.

அதன்படி, குழந்தை பிறந்ததும் அந்த
ஆணாகவே வளர்க்கிறார்கள். வாள்சண்டை
வல்லவராக திகழ்கிறார். 14 வருடங்களுக்
வந்தபிறகு அவர் தான் பெண் என்பதை
யே தெரிந்தால் நமது நாட்டு மக்க
அனுக்ஷ்காவும் நாட்டு மக்களி
ஆண் என்று பொய்கூறியே வா
ஆனால், சுமனும், ஆதித்ய
மக்களுக்கு தெரியப்படுத்துகி
கூறிய அனுக்ஷ்கான
காகித்ய ஆட்சியி
சிற்ற

## …னுஷ்கா படம்


தங்கமகன்

…ஜாடியாக அனுஷ்கா …. இரண்டாம் உலகம் …ருகு ஆர்யா - அனுஷ்கா …த்திருக்கும் படம் இது. … கே.எஸ்.பிரகாஷ் …றார். பி.வி.பி …டத்தை பிரம்மாண்டமாக …றது. மரகதமணி …ள்ள இப்படத்திற்கு …பதிவு செய்துள்ளார். …ங்கில் சைஸ் … பெயரில்

…டை குறைப்பு …யாக உரு …கிறது. இதில் … இரண்டு …ல் நடித்திருக்கிறார். …டத்துக்காக அனுஷ்கா 20 …எடை கூட்டி நடித்திருக்கிறார். …னால் இப்படம்மீது …ரசிகர்கள் மத்தியில் பெரும் … எதிர்பார்ப்பு இருக்கிறது.


திருநாள்


# தங்க மகன் தனுஷ்

தனுஷ், அமலாபால் நடிப்பில் ஒளிப்பதிவாளர் வேல்ராஜ் இயக்கிய வேலையில்லா பட்டதாரி படம் மிகப்பெரிய வெற்றியடைந்தது. இதனை தொடர்ந்து இந்த வெற்றி கூட்டணி மீண்டும் ஒரு புதிய படத்தில் இணைந்தது. வி.ஐ.பி 2 என்ற பெயரிலேயே ஆரம்பிக்கப்பட்ட இப்படம் விரைவில் வெளியாக இருக்கிறது. இந்நிலையில் இப்படத்திற்கு தற்போது தங்க மகன் என்று தலைப்பு வைத்துள்ளனர்.

அண்மையில் படக்குழுவினர் பஸ்ட் லுக் போஸ்டரையும் வெளியிட்டிருந்தனர். இப்படத்தில் தனுஸுக்கு ஜோடியாக சமந்தா, எமி ஜாக்சன் ஆகியோர் நடிக்க கே.எஸ்.ரவிக்குமார், ராதிகா சரத்குமார் ஆகியோரும் முக்கிய வேடத்தில் நடித்துவருகின்றனர். இப்படத்திற்கும் அனிருத்தே இசையமைத்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.







## அஜித்திற்கே நான்தான் கற்றுக்கொடுத்தேன் பிரபல கலைஞர்

அஜித் சினிமாவில் நாளுக்கு நாள் புதிதாக ஏதும் கற்றுக்கொண்டே இருப்பவர்.

இந்நிலையில் சமீபத்தில் அஜித் புகைப்படம் எடுப்பதில் மிகவும் ஆர்வமாக இருந்தது அனைவரும் அறிந்ததே. தற்போது கிதார் வாசிப்பதில் அஜித்திற்கு மிகுந்த ஆர்வம் வந்து விட்டதாம். இதற்காக காலை 5 மணிக்கே எழுந்து கிதார் பயின்று வருகிறாராம். அஜித்திற்கு கிதார் பயிற்சி அளிப்பது இளையராஜா, ரகுமான் போன்ற முன்னணி இசையமைப்பாளர்களிடம் பணியாற்றிய ஸ்டீவ் வாட்ஸ் என்பவர் தானாம். இவர் சமீபத்தில் ஒரு பேட்டியில் அஜித்திற்கே நான்தான் கிதார் கற்றுத் தருகிறேன் என பெருமையாக கூறியுள்ளார். அது மட்டுமின்றி அஜித்கூடிய விரைவில் நன்றாக கற்றுக்கொள்வார் என நம்பிக்கையும் அளித்துள்ளார்.

# ருத்ரமாதேவி

…நடிகர் : அல்லு அர்ஜவூன்நடிகை : அனுஷ்காஇயக்குனர் : குணசேகரன்
…ச : இளையராஜா ஒளிப்பதிவு : அஜய் வின்சென்ட்

…காகத்திய ஆட்சி பல சிற்றரசுகளை உள்ளடக்கியுள்ளது. இந்த ஆட்சியின் அரசனுக்கு …தை பிறக்கிறது. அந்த குழந்தை ஆணாக இருக்கவேண்டும் என்று அந்த நாட்டு மக்கள் … அனைவரும் விரும்புகின்றனர். ஏனென்றால், அந்த குழந்தை ஆணாக இருந்தால், …ன தேவகிரி அரசனிடம் இருந்து நம் மக்களை காப்பாற்றும் என நம்புகின்றனர். … தம்பிகளான சுமனும், ஆதித்யாவும் விரும்பவில்லை. ஏனென்றால், பெண் குழந்தை … காட்டி நாட்டை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிடலாம் என்று நினைக்கும் …நினைத்ததுபோல் அரசனுக்கு பெண் குழந்தைதான் பிறக்கிறது. இந்த செய்தியை …ல், நம்பிக்கையை இழந்துவிடுவார்கள் என்று பயந்து, ராஜகுருவான பிரகாக்ஷ்ராஜ் …கூறச்சொல்கிறார். அதன்படி, அரசனுக்கு ஆண் குழந்தை பிறந்ததாக நாடுமுழுவதும்

…ந்ததும் அந்த குழந்தையை 14 வருடங்கள் காட்டுக்கு அனுப்பிவைத்து, அங்கு ஒரு …ர். வாள்சண்டை, கத்தி சண்டை என ஒரு ஆணுக்கு நிகராக அனைத்து கலை களிலும் …4 வருடங்களுக்கு பிறகு தனது சொந்தநாட்டுக்கு திரும்புகிறார் அனுக்ஷ்கா. அங்கு … பெண் என்பதை அறிகிறார். ஆனால், ராஜகுருவோ இப்போது நீ பெண் என்பது வெளிஉ …நமது நாட்டு மக்களின் நிலை பரிதாபமாகி விடும். எனவே, அதை மறைக்க சொல்கிறார். … நாட்டு மக்களின் நலனுக்காக …பொய்கூறியே வாழ்கிறார்.

…சுமனும், ஆதித்யாவும் மோப்பம் பிடித்து, அனுக்ஷ்கா ஒரு பெண்தான் என்பதை நாட்டு …தெரியப்படுத்துகிறார்கள். இவர்களுடன் சில சிற்றரசர்களும் சேர்ந்துகொண்டு, பொய் … அனுக்ஷ்காவை நாட்டை விட்டே துரத்துகின்றனர். இதையறிந்த தேவகிரி நாட்டினர், … ஆட்சியின்மீது படையெடுக்கின்றனர். அதேநேரத்தில், சுமனும், ஆதித்யாவும் … சிற்றரசர்களுடன் இணைந்து நாட்டு மக்களை துன்புறுத்துகின்றனர். இதனால், பாதிப்படைந்த மக்கள் நாட்டை விட்டு ஒதுக்கிய அனுக்ஷ்காவை நாடிச் செல்கின்றனர்.

இறுதியில், அனுக்ஷ்கா நாட்டு மக்களை எதிரிகளிடமிருந்து, சு'ழ்ச்சியாளர்களிடமிருந்தும் எப்படி நாட்டை மீட்கிறார் என்பதே மீதிக்கதை.

படத்திற்கு பெரிய பலம் பா.விஜய்யின் வசனங்கள்தான். பெண்மையை போற்றும் வசனங்கள் படம் முழுக்க இடம்பெற்றிருப்பது சிறப்பு. அனுக்ஷ்கா படத்தை ஒரு பக்கம் தாங்கி நின்றாலும், அவரையும் தாண்டி இளையராஜா தன்னுடைய இசையால் மேலும் தாங்கி பிடித்திருக்கிறார். அஜயன் ஒளிப்பதிவு பிரமிக்கவைக்கிறது.

மொத்தத்தில் ருத்ரமாதேவி சிம்மாசனம்.

## தேன் கிண்ணம்

### கனவில் தழுவிய கலை நிலாவே...



இரு விழிகள் புது மொழிகள் பேச
இமைகள் அசைக்கும் மங்கையே
உந்தன் இதயவானில் நான் நுழைய
இணங்கவேண்டும் இன்பவல்லியே

உந்தன் சுவாசம் பட்ட வாசமலர்கள் – எந்தன்
வாசல் தேடி வந்ததே
உன் வதன ஒளி அழகினையே – அவை
சங்கக் கவி வரியாய் தந்ததே

கம்பன் கைகளில் நழுவிவந்த
காவியத்தின் நங்கையே – இன்று
என் மனதில் புகுந்து கொண்ட
ஓவியத்தின் வண்ணமே

இமய மலைச்சாரலாக எந்தன்
இதயம் நனைந்து நுழைந்தவளே
இன்று என் கனவினிலே கதைகள் பேசி
இரவை இன்பமாக்கி சென்றவளே.

வன்னியூர் எஸ்.ஆர்.ராம்கி,
கிளிநொச்சி.

### அவளும் நானும்



பொன்னுக்கும் பொருளுக்கும்
வீங்காதவள் – என்
அன்புக்கும் அனுசரணைக்கும்
ஏங்குபவள் – என்
கண்ணுக்கு ஒளியாக
இருக்கின்றவள் – என்
கனவிலும் நினைவிலும்
வருகின்றவள், பெண்
பண்பாடு தவறாத தர்ம
பத்தினி என்னை
தன்னெஞ்சில் தினம் வைத்து
சுவாசிப்பவள் – அதனால்
நானின்றேல் அவளில்லை
அன்புள்ள அவனைவிட்டால்
நான் வாழ வழியில்லை.

கவிக்குயிலன், சேனையூர்.

### மத்தியரைக் கடலும்

அயலானும் அயலானிகளும்..



மத்தியதரைக் கடல்
மணல் கரைகள்...
முந்திய கிரேக்கரின்
படைக்கலத் துறை
பழைய ரோமானியனின்
நீச்சல் தடாகம்!

எத்தனையோ சாகசங்கள்
சொந்தமாகின உனக்கு
மாவீரன் □கெக்டர்□
□ட்ரோய்□ நகரத்தின்
பட்டத்து இளவரசன்
தம்பியின் காதலுக்காக
செத்துப் போன கடற்கரை
உந்தனது...

இளவரசி ஹெலனும்
மரக்குதிரையும் எரிந்த
நகரமும் நீ பார்த்திருந்தவை
அழகி கிளியோ பத்திராவும்
மகன் அலக்ஸாண்டரும்
சீசரும் மார்க் அன்ரனியும்
நெப்போலியனும் வேறு
படை நடத்த இடம்
தந்தவள்

சொல்ல வொண்ணா
கடலோடிகள் மடிதவள
அனுமதித்தவன்; ஆர்ப்பரித்து
எப்படி நீ இப்படி ஆனாய்?

கொலை வெறியனாகி
மூன்றே வயதும் நிரம்பா
பாலகன் அய்லானை
அலைக்கரம் கொண்டு
சுருட்டி விழுங்கி
துப்பினாய் மண் மேட்டில்!
அகதிச்சிறுவன் அவன்...!

துருக்கிய கடற்கரையில்
உருக்குலைந்து போய்
பாதிமுகம் புதைத்து படுத்து
இருந்தவன் செய்த பாவமென்ன?

உயிரைப் பறித்து சில
பயிரை ஏன் மேய்ந்தாய்!

ஏகாதிபத்திய திமிரும்
பேரின வாதமும் மண்
பிடிக்கு மாசையும்
கறுப்பு தங்கமும் காலம்
காலமாக கொண்ட இனக்
குரோதமும் உனக்கும் சொந்தமா?
யுத்த பிரபுக்களே
நீங்கள் உள்ளவரை
அய்லான்களும், அய்லானிகளும்
புதையுண்டுதான் போவர்...
எய் கணைகளும்...
எல்லை தாண்டும் அகதியும்
□பூமரமாய்□
ஆகார் என்பதற்கு... ஓ...ஓ...
மத்தியரைக் கடலே
நீயே சாட்சியமாவாய்!

– மண்டைதீவு மகிழ்நன் –



## மனைவியை நேசியுங்கள்!

மனைவிக்குப் பல பொருளாம்
காதல் திருமணமாகினும்...
நிச்சய திருமணமாகினும்...
இன்னோர் உயிரை
உருவாக்கிக் கொள்ள
உளமார உட்புகுபவள்தான்
“மனைவி”.

அவள் அழகாய் பேசிச் சிரிக்கையில்...
நெருக்கமாய் முத்தமிட்டு அணைத்துக் கொள்ளுங்கள்.
காமத்தை மூட்டை கட்டி வையுங்கள்
காதலை அவளிடம் கட்டவிழ்த்துவிடுங்கள்
தினமும் உங்களுக்காய் சமைக்கும் அவள் விரல்களை
அன்பாய் மெதுவாய் தடவி கொடுங்கள்.
உணவில் உப்பில்லாமல் விட்டாலும் உளமார
உண்ணுங்கள்
முறைப்பை அதற்காய் பரிசாய் கொடுக்காதீர்கள்.

எங்கோ யாருக்கெல்லாம் மரியாதை செய்யுறிங்கள்
உங்களுக்காய் வாழும்...
அவளுக்கு மரியாதை செய்ய
கற்றுக்கொள்ளுங்கள்.
அவள் விரும்பும் இடங்களுக்கெல்லாம்
அவளன்பை களவாடச் கற்றுக் கொள்ளுங்கள்.
அழகு, கார், பணம், பங்களா, கற்பனையை...
கழற்றி வீசுங்கள்.
கடனில்லாமல் கிடைப்பதைக் கொண்டு
அவளுடன் வாழப் பழகுங்கள்.

கட்டிய மனைவியை...
உறவினர்களுக்குள்ளும்... கண்டவர்களுக்கும்...
‘என்னடி’... ‘வாடி’... ‘போடி’ எனத் திட்டாதீர்கள்.
“என் மனைவி” இவள் என எல்லோருக்கும்
அறிமுகம் செய்வதில் பெருமைப்பட்டுக் கொள்ளுங்கள்.



தூரத்தே தெரியும் நிலவை
தொடக் கேட்பதில்லை அவள்...
துரத்தும் உங்கள் தொந்தரவையும் கேட்பதில்லை
அவள்... தூரமாய் இருந்தாலும்
தொலைபேசிக் குரல் கேட்க நினைப்பாள் அவள்
தொண்ணூறில் கூட அவளை நேசியுங்கள்
90.... 180.... நாட்கணக்கு போடாதீர்கள்.

ஆணின் தாடிக்குள்
அகங்காரமாய் சிரிப்பவளல்ல மனைவி.
அதையே.... வருடிவிட்டு
அளவாய் வெட்டி விடுங்கள்
என கட்டளை இடுபவள்தான் மனைவி.

அம்மா
உலகின் உருவாக்கம் அவள்...
அவளும் ஓர் மனைவிதான்.
அக்கா, தங்கை... இவர்களும்
ஓர் மனைவிதான்
அதோ... அங்கே தெரியும்
அப்பெண்ணும் ஓர் மனைவிதான்.
இதோ இதை முணுமுணுக்கும்
இவர்களும் நாளை மனைவிதான்.

மனைவியையும் நேசியுங்கள்
உலகம் உங்களுக்காய்
உயிர்ப்பித்தாய் தோன்றும்!

எந்திரி.பா.விகர்ணன்,
வவுனிக்குளம்.



# காலம் மாற்றியது

இந்திய வேகப் பந்துவீச்சாளர்களை எடுத்துக்கொண்டால் கபில் தேவின் பின்னர், இவர் பெயர்தான் உச்சரிக்கப்படும். அதுமட்டுமன்றி 2011இல் ஒரு நாள் கிரிக்கெட் உலகக் கிண்ணம் வென்ற அணியின் ஒரு வீரர். அதோடு இந்தச் சுற்றுப்போட்டியில் சாஹிட் அப்ரிடியுடன் சமமாக 21 விக்கெட்டுகள் சாய்த்து அதிக விக்கெட் பெற்ற வரிசையில் வந்தவர். மேலும் 2003, 2007 உலகக் கிண்ணப் போட்டிகளிலும் இந்திய அணியில் விளையாடியவர். தற்போது இவர் சகலவிதமான சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலும் இருந்தும் ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

இவர் வேறு யாருமல்ல. சாகீரகான்தான். அவர் என்று சொல்லிப் புரியவைக்கவேண்டும் என்பதும் அல்ல. மீண்டும் மீண்டும் உபாதைக்குள்ளாக்கிய இவர் பழைய எழுச்சியுடன் மீளவருவார் என்று நம்பியபோதும், அப்படி எழுச்சிபெற அவரால் முடியவில்லை என்பது துரதிர்ஸ்டம்தான். இவர் 2006ஆம் ஆண்டில்தான் சர்வதேச கிரிக்கெட் ஆரம்பத்தை ஏற்படுத்தியவர். 311 டெஸ்ட் விக்கெட்டுகள் எடுத்து, கபில் தேவிற்கு அடுத்ததாக இரண்டாவது இடத்தில் இந்திய வேகப் பந்துவீச்சாளர்களில் இருப்பவர். 200 ஒரு நாள் போட்டிகளில் விளையாடியுள்ள இவர் 282 விக்கெட்டுகளைத் தன்கணக்கில் வைத்திருப்பார்.

கடந்த வருடம் பெப்ரவரியில் நியு'சிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியின்பின், தொடர் உபாதைகளால் இவரால் டெஸ்ட் அணியில் இடம்பிடிக்க முடியாமற்போயிற்று, அதன்பின் தெரிவாளர்களும் வேறு புதிய வேகப் பந்துவீச்சாளர்களைத் தேடவேண்டியதாயிற்று. மற்றும் பல புதிய இளம் வீரர்களும் வரிசையாக இந்திய அணிக்குள் உள்நுழைந்து கொண்டிருந்தார்கள். ஆகவே மொத்தத்தில் சாகீரகான் வேறுபல கிரிக்கெட் போலன்றி கௌரவமாகவே தன் கிரிக்கெட் வாழ்க்கையை முடித்துக்கொள்வதைக் குறிப்பிட்டாக வேண்டும். எல்லோரையும் போலவே பல உணர்வுபு'ர்வமான வார்த்தைகளைக்கூறி விடைபெறுகிறார் சாகீர.

மிகப்பொருத்தமாகவே 2011இல் உலகக் கிண்ணம் வென்றமை தன் கிரிக்கெட் வாழ்வின் முதன்மைச் சம்பவம் என்று கூறுகிறார். அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்தில் நடைபெறவுள்ள ஐ.பி.எல் போட்டிகளின் பின்னர் சகலவிதமான கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் விலகிக்கொள்வதாக கோடி காட்டியுள்ளார். அற்புதமானதொரு வீரா் சாகிர்கான். அவருக்கு வாழ்த்துக்கள்.



- ஜோசப் கிருஷ்ணா -

# இனியும் வேண்டாம்



தவறு செய்த ஒருவன் திருந்தி வாழ விரும்பினாலும் அநாவசியமாக இந்த சமூகம் அவனைச் சீண்டிக்கொண்டே இருக்கும் போலத்தெரிகின்றது. பாகிஸ்தானின் மூன்று வீரர்கள் ஆட்டநிர்ணயச்சதியில் ஈடுபட்டு, தண்டனை அனுபவித்து அவர்கள் வெளியே வந்து சாதாரண வாழ்வு வாழவிரும்புகிறார்கள். இதில் ஒருவர்தான் மிக இளம்வயது மொகமட் ஆமிர். தற்போது நடைபெறும் உள்ளூர்ப் போட்டியொன்றில் விளையாடிக் கொண்டிருந்த இவரை, முன்னாள் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரரான பெய்சால் இக்பால் திருடன் என்று திட்டியுள்ளார்.

முன்னதாகவே ஆமிர் இவரை ஏதோ சொல்லித் திட்ட அதன் தொடர்ச்சியாகவே திருடன் சென்ற வார்த்தையை இக்பால் பயன்படுத்தியுள்ளார். இதில் இரண்டு பேருக்குமே தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆமிர்தான் முதலில் வார்த்தைகளைக் கைவிட்டிருக்கிறார். ஆனால் திருடன் என்ற வார்த்தைப் பிரயோகம் ஐந்து வருடங்களுக்குமுன் நடைபெற்ற ஆமீரின் அவமானத்துக்குள்ளான செயற்பாடுகளைத்தான் சுட்டிக்காட்டியிருக்கும்.

மைதானத்தில் எதிரெதிர் வீரர்கள் பல்வேறு வார்த்தையாடல்களைச் செய்துகொள்வது சகஜம்தான். அது அந்தந்தக் கணத்திலேயே மறக்கப்பட்டுவிடும். அதோடு உள்ளார்ந்து காயப்படுத்தும் நோக்கமும் இராது. ஆனால் ஆமிர் விடயத்தில் பழைய அவமானங்களை மீளவும் கிளறிவிடுவது போன்ற செயல்தான் கண்டித்தக்கது. எதிர்காலத்தில் மீண்டும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்குள் வரும் வாய்ப்பையும் திறமைகளையும் கொண்டவர். மொகமட் ஆமிர். எனவே அவரும் மைதானத்தில், தன் எதிர்காலம் கருதி தன்னைக் கட்டுப்படுத்தி அவதானமாக இருக்கப் பழகவேண்டும்.

அதேவளை ஏனையவர்கள் ஆமிர்மீது மீண்டும் மீண்டும் பழைய சம்பவங்களை நினைவுபடுத்தி மனத்துன்பத்தைக் கொடுக்கக்கூடாது. எல்லோரும் ஏதோ ஒருவகையில், ஏதோவொரு சந்தர்ப்பத்தில் குற்றமிழைப்பவர்கள்தான். எனவே சகித்துப்போவோம். சமாதானமாகப் போவோம்.

# அபிப்பிராயம் சரி



ஒவ்வொரு கிரிக்கெட் வீரனின் வாழ்க்கையும் ஏற்றம், இறக்கம் இரண்டுமே இருக்கும். இந்தியா பல்வேறு வெற்றிகளை மகேந்திரசிங் டோனி தலைமையில் பெற்றுக்கொண்டதை மறந்துவிடவேண்டாம் இவ்வாறு கூறியிருப்பவர். வேறு யாரும் அல்ல. தற்போது 46 வயதாகும் முன்னாள் மேற்கிந்திய கிரிக்கெட் ஜாம்பவான் பிறைன் லாறா.

டோனி பல்வேறு பக்கங்களில் இருந்தும் கூர்அம்புகளை எதிர்நோக்கும் இச்சந்தர்ப்பத்தில் லாறாவின் வார்த்தைகள் அவருக்கு மிகவும் ஆறுதலாக இருக்கும் என்பதைக் கூறலாம். டோனியின் தலைமையில் அணி சிறிது பின்னடைவு கண்டுள்ள இவ்வேளையில் அதுவும் அணிக்குள்ளே சிலதரப்பின் ஆதரவை இழந்துகொண்டு வரும் இவ்வேளையில் ஒரு விமர்சகராவன்றி ஒரு கிரிக்கெட் ஜாம்பவானாக லாறா மேற்படி கருத்துக்களைக் கூறியுள்ளார்.

மேலும் இந்திய அணி பற்றியும் தன் அவதானத்தை அவர் முன்வைத்துள்ளார். தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் தென்னாபிரிக்கத் தொடர் பொறுத்துக் கருத்துக் கூறுகையில், சொந்தமண்ணில் விளையாடும் சாதகத் தன்மை இந்திய அணிக்கு அதிகமாகவே இருக்கிறது. மேலும் அவர்கள்மீதான மிதமிஞ்சிய எதிர்பார்ப்பே அவர்களுக்குக் கூடுதலான அழுத்தத்தைக் கொடுக்கிறது என்பதே உண்மை. அதுவும் அடுத்த வருடம் உலகக்கிண்ண இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவில் நடைபெறவுள்ள நிலையில் எதிர்பார்க்கைகள் அதிகம் இருப்பது ஆச்சரியம் இல்லை. தற்போதைய அணியில் சிறந்த வீரர்கள் பலர் இருக்கிறார்கள்.

இவர்கள் 2011இல் உலகக் கிண்ணத்தை(50 ஓவர்) தமது மண்ணில் வைத்து வென்றெடுத்தவர்கள். எனவே எதிர்வரும் இருபதுக்கு இருபது உலகக் கிண்ணப் போட்டிகளும் எதிர் அணிகளுக்கு அச்சுறுத்தலாகவே இருக்கும்.

இதைவிட மே. இந்தியத் தீவுகளின் தற்போதைய கடினநிலை பற்றிக் கூறும்போது, இங்குள்ள பிரச்சினை நிர்வாகரீதியானதும் பிரச்சினைகள் ஆழவேரூன்றியுள்ளன. ஒருவரோ, ஒரு சிலரோ மட்டும் ஒன்றுகூடி இப்பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாதென்றே நான் நினைக்கின்றேன். நான் மே. இந்திய அணியில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்க்க ஆர்வமாக உள்ளேன். ஆனால் அதில் பல சிக்கல்கள் உள்ளன. நிர்வாகக் கட்டமைப்பில் பாரிய பிரச்சினைகள் உள்ளன.

எனவே என்னால் தனித்து எதுவும் செய்ய இயலாது. எல்லோரும் சேர்ந்து கடினமாக உழைப்பதன்மூலம் மட்டுமே மே. இந்தியத் தீவுகள் அணியை உலகத் தரம்வாய்ந்த நிலைக்குக் கொண்டுவரமுடியும் என்றும் கூறியுள்ளார்.

# மிக நல்ல விடயம்

இலங்கைக் கிரிக்கெட் சபை எமது கிரிக்கெட் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு பல்வேறு நடவடிக்கைளை எடுத்து வருகின்றது. அது இரண்டு வகைப்படும். ஒன்று நேரடியாக கிரிக்கெட் சார்ந்தது. இன்னொன்று பல்வேறு வளங்களை (ஊும் பௌதீக) அதிகரிப்பது. அந்தவகையில் உள்ளூர் போட்டிகளில் இனிவரும் காலங்களில் விளையாடப்போகும் வீரர்களின் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு பற்றிய விபரங்கள் வெளிவந்துள்ளன.

எதிர்வரும் உள்ளூர் பிரிமியர் லீக், பிராந்திய கிரிக்கெட் போட்டிகளில் புதிய கொடுப்பனவு அறிமுகப்படுத்தப்படும். இப்படியான நடவடிக்கை கிரிக்கெட்மீதான தொடர் ஆர்வத்துக்கு வழிவகுக்கும் என்பதும், வசதிவாய்ப்புள்ள கிரிக்கெட் வீரர்கள் வெளிநாடுகளுக்கு ஓடுவதைத் தடுக்கும் என்றும் இதுவொரு தொழில்சார் முறையாக இருப்பதால் நிரந்த வாழ்வாதாரத்துக்கான அம்சமாக அமையும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. அது உண்மையும்கூட.

மேலும் இந்தப் புதிய கொடுப்பனவு முறையில் இதில் உள்வாங்கப்படவுள்ள 154 விக்கெட்டும் மூன்று வகைக் கிரிக்கெட் போட்டிகளிலும் கழகநிலையில் கலந்து கொள்ளும்போது ஒரு பருவகாலத்தில் மட்டும் இரண்டரை இலட்சம் ரூபா சம்பாதித்துக் கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கும். இதேவேளை அடுத்தகட்டமான பிரிமியர் லீக், பிராந்திய மட்ட கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொள்ளும் வீரர்கள் ஒரு பருவகாலத்தில் ஏழரை இலட்சம் ரூபாவைப் பெறமுடியும் என்றும் தெரியவருகிறது. இலங்கைக் கிரிக்கெட் சபைத் தலைவர் சிதாத் வெத்த முனி இதுபற்றி மிக மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளார்.

நீண்ட்காலமாக எதிர்பார்த்திருந்த ஒரு விடயம் இப்போது நடைபெற்றுள்ளது. எல்லோருக்கும் அடிப்படைத் தேவையானது வாழ்வாதாரமே. அதற்கான உத்தரவாதம் இருந்தால்தானே கிரிக்கெட்டில் ஆர்வத்துடன் ஈடுபடமுடியும் என்று கூறியுள்ளார்.

## புதிய கொடுப்பனவுத் திட்டம்

| | | |
|---|---|---|
| பிரிமியர் ஒரு நாள் போட்டி | - நாளுக்கு | - 7500.00 |
| பிரிமியர் 3 நாள் போட்டி | - நாளுக்கு | - 7500.00 |
| பிரிமியர் வு-20 போட்டி | - நாளுக்கு | - 7500.00 |
| பிராந்திய ஒரு நாள் போட்டி | - நாளுக்கு | - 25000.00 |
| பிராந்திய 4 நாள் போட்டி | - நாளுக்கு | - 20000.00 |
| பிராந்திய வு-20 போட்டி | - நாளுக்கு | - 15000.00 |






# முதுமையைத் தள்ளிப்போடும் மசாஜ்

தேங்காய் எண்ணெயை, சருமத்திற்கு பயன்படுத்துவது நல்லதா என்ற கேள்வி பலரது மனதில் இருக்கும். உண்மையிலேயே தேங்காய் எண்ணெய் சருமத்திற்கு ஏற்ற மிகவும் சிறப்பான ஓர் அழகுப் பராமரிப்பு பொருள். இதற்கு காரணம் அதில் உள்ள சத்துக்கள்தான்.

தேங்காய் எண்ணெயில் உள்ள சாச்சுரேட்டட் கொழுப்புக்கள் சருமத்திற்கு அடியில் தங்கி, சருமத்தை மென்மையாகவும், வறட்சியின்றியும் வைத்துக்கொள்ள உதவும். மேலும் இதில் காப்ரிக், காப்ரிலிக் மற்றும் லாரிக் அசிட் உள்ளது. இவை சருமத்தில் எந்தவொரு கிருமிகளும் தாக்காமல் தடுக்கும். அதுமட்டுமின்றி, தேங்காய் எண்ணெயில் சருமத்திற்கு தேவையான விற்றமின் ஈ மற்றும் புரோட்டீன் வளமாக நிறைந்துள்ளது. தேங்காய் எண்ணெய்யை சருத்தை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்பதை பார்க்கலாம்.

இரவில் தூங்கும்முன் முகத்தில் உள்ள மேக்கப்பை நீக்க தேங்காய் எண்ணெயைப் பயன்படுத்தலாம். இதனால் மேக்கப் முழுவதும் நீங்குவதோடு, சருமத்தின் ஆரோக்கியமும் மேம்படும். உங்களுக்கு சருமத்தில் வறட்சி அதிகம் ஏற்படுமாயின், தேங்காய் எண்ணெயை கைகளுக்கு தடவலாம். மேலும் தேங்காய் எண்ணெயை கைகளுக்குத் தடவினால், நீண்டநேரம் சருமத்தில் ஈரப்பசை தங்கியிருக்கும். தேங்காய் எண்ணெயில் அன்டிஉபக்ரீரியல் மற்றும் பு'ஞ்சையெதிர்ப்பு பொருள் உள்ளது.

எனவே தேங்காய் எண்ணெயை சருமத்திற்கு தடவிவந்தால், சருமத்தில் நோய்த்தொற்றுகள் ஏற்படுவதைத் தடுக்கலாம். கால்களில் உள்ள முடியை நீக்கும்முன், தேங்காய் எண்ணெய் சருமத்தில் தடவிக் கொண்டு சேஷவிங் செய்தால், சேஷவிங் செய்த இடம் மென்மையாக இருப்பதோடு, முடியும் எளிவதில் வெளிவரும். தினமும் தேங்காய் எண்ணெயைக் கொண்டு சருமத்தை மசாஜ் செய்துவந்தால், சருமத்தில் சுருக்கம் ஏற்படுவது தடுக்கப்பட்டு, முதுமைத் தோற்றம் தள்ளிப் போடப்படும்.



# பேஷியல்அவசியமா?

பேஷியல் எனப்படும் முகப்பூச்சு சரும பாதுகாப்பிற்கு வரப்பிரசாதமாக விளங்குகிறது. நம் சருமத்தின் துவாரங்களை சுத்தப்படுத்தி, சருமத்திற்கு தேவையான சத்துக்களை சேர்க்க இது வெகுவாக உதவுகின்றது. பேசூஷியல்மூலம் சருமத் துவாரங்கள் சுத்தமாகி, அசுத்த அணுக்கள் நீங்கி தூய்மையான தோற்றத்திற்கு வழிவகுத்து, நம் பொலிவை கூட்டுகிறது.

ஆதலால்தான் உடல் மசாஜ்க்கு பிறகு பேசூஷியல் சருமத்திற்கான ஒரு சிகிச்சையாக கருதப்படுகின்றது. அசுத்தங்களை நீக்குவதால் இது டீப் க்ளென்ஸிங் பேசூஷியல் மற்றும் டீப் போர் க்ளென்ஸிங் என்று இருவகையாகவும் கூறப்படுகின்றது. உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் பேசூஷியல் மிகவும் பயனுள்ளது என்று ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. வெயிலினால் ஏற்படும் சருமப் பாதிப்புகள், சருமத்தின் அழுகிய அணுக்கள், முகச்சுருக்கங்கள், சருமத்தில் மூப்பின் சுவடுகள், முகத்தில் தோன்றும். தேமல்கள் இவை அனைத்தையும் போக்க பேசூஷியல் ஒரு சிறந்த சிகிச்சை ஆகும் எனக்கூறினாலும் மிகையாகாது. 25 வயது தொடங்கும் பொழுது சருமத்தில் வயதின் பாதிப்புக்கள் தோன்ற தொடங்குகின்றன.

ஆக இதுவே பேசூஷியலை தொடங்க சரியான வயது எனலாம். க்ளென்ஸிங் என்ற சுத்தப்படுத்தும் திரவத்தால், முகத்தை சுத்தப்படுத்தும் பொழுது, உடனே முகம் அழுக்குகள் நீங்கி, புத்துணர்ச்சி பெறுகின்றது. இது நன்றாக சருமத்தின் ஆழத்தில் ஊடுருவதால் சருமத்தின் இரத்தஓட்டம் சீராக்கப்பட்டு, மாசுக்களையும், அழுக்குகளையும் உடனே நீங்க செய்கிறது. சருமம் நன்றாக சுவாசிக்கவேண்டி, அன்ரி ஒஷக்ஸி டண்ட் என்ற பொருளால், அழுக்குகள், அழுகிய சரும அணுக்கள் ஆகியவை நீக்கப்படுகின்றன. இவ்வாறு செய்கையில், பழைய அழுக்குகள் நீங்கி புதுப்பொலிவும், புத்துணர்வும் சருமத்திற்கு கிடைக்கிறது. இந்த முறையால் அடைபட்ட துவாரங்களை சுத்தப் படுத்தி, சருமம் எந்த பாதிப்புக்கும் ஆளாகாமல், பொலிவுபெற ஏதுவாகிறது. பேசூஷியலின் சுகமான ஒரு பகுதி மசாஜ் ஆகும். ஒரு லயத்திற்குட்பட்டு முகத்தில் புரியும் அழுத்தங்களினால் முகத்தசைகள் இறுக்கம் தளர்ந்து லேசாகின்றன.

இதனால் இரத்த ஓட்டம் அதிகரித்து, சருமத்தில் இருந்து கழிவுகளை வெளியேற்றி, முகத்தில் சுருக்கங்கள் தோன்றாமல் பேணப்படுகின்றது. வெள்ளை யாக்க, உறுதியாக்க, விற்றமின் ஒசி நிறைந்த பல மாஸ்குகள் கிடைக்கின்றன. முகத்தின் உபரி எண்ணெய் நீங்க, துவாரங்கள் இறுக்கமாக, சருமத்தில் ஈரப்பதம் சேர்க்க என மாஸ்குகள் பலவிதத்தில் பயன்படுகின்றன. மூலிகை மாஸ்குகளும் புதிய சரும அணுக்கள், உற்பத்திக்கு பெரும் உதவி செய்கின்றன.



# மகளை மணம் முடித்து கொடுக்கும் தந்தையின் உணர்வுப் போராட்டம்

என் வீட்டின் மகிழ்ச்சி பேழை உங்கள் வீட்டில் ஒளிவீச வருகிறது

பட்டாம்பு'ச்சியாய் பறந்துகொண்டிருந்த அன்பு மகள் பட்டுச்சேலை அணிந்து மணமேடையில் மணப்பெண்ணாய் வீற்றிருக்கும் காட்சியை பார்த்ததும் அட என் பொண்ணா.... என் கண்ணே பட்டுவிடும் போலிருக்கே... என்று தாய் பெருமையுடன் திருசூஷ்டி போட்டுக் கொள்வாள்.

எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கும் தந்தையின் கண்ணில் கண்ணீர பெருக்கெடுக்கும். அது ஆனந்தக்கண்ணீர என்று சொந்த பந்தங்கள் நினைக்கும். ஆனால் அந்த கண்ணீருக்கான அர்த்தம் அவருக்கு மட்டும்தான் புரியும். மகள் பிறந்து இருக்கிறாள் என்று நேர்ஸ் ஓடிவந்து சொன்னதும்... அடுத்த சில விநாடிகளில் மகாலட்சுமியாய் கைகளில் தூக்கிக்கொஞ்சியதும்... பிஞ்சுக்கையை பற்றிக்கொண்டு நடந்ததும்... பள்ளிக்கு அழைத்து சென்று மகிழ்ந்ததும்... கேட்டதையெல்லாம் வாங்கிக்கொடுத்து அவள் முகத்தில் ஏற்படும் சிரிப்பையே தன் வாழ்க்கையின் இலட்சியமாகக்கொண்டு வாழ்ந்த காலம் என்றும் பசுமையான வசந்த காலம்.

இனி அவள் என்னோடு இருக்கப்போவதில்லை. புதிய உறவை ஏற்படுத்தி குலம்தழைக்க குடும்ப பெண்ணாய் பொறுப்பு ஏற்கப்போகிறாள். பெண்களுக்கு மட்டுமே இது நடக்கிறது. பிறப்பதற்கு ஒரு வீடு, திருமணத்துக்கு பின் புகுந்துகொள்ள ஒரு வீடு. ஒவ்வொரு பெண்ணுக்கும் அத்தகைய இடம்பெயரும் தருணம் உணர்வுபு'ர்வமானது. அந்தவேளையில், பெண்ணைவிட பெண்ணைப் பெற்றவர்களுக்கு குறிப்பாக தந்தைக்கு நேரும் உணர்வுப் போராட்டம் சொற்களில் அடங்காதது. அவ்வாறாக உணர்ச்சி வசப்பட்ட ஒரு தந்தை தனது மகளின் திருமண விழாவில் ஆற்றிய உரைதான் இது.

இந்த உரையை எனது மகளின் புதிய குடும்பத்தினரே என்று உங்களை வரவேற்று ஆரம்பிக்கவேண்டும் என்றே நினைத்தேன். ஆனால், அது பொருத்தமாக இருக்காது என்பதால் கடைசி நிமிடத்தில் அதை தவிர்த்துவிட்டேன். அவள் எப்போது திருமணபந்தத்தில் இணைந்தாளோ அப்பொழுதே உங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவளாகி விட்டாள். அதில் எனக்கு எவ்வித வருத்தமும் இல்லை. இன்னும் சொல்லவேண்டும் என்றால் அவள் உங்கள் குடும்பத்தினருக்கே எப்போதும், எதிலும் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றே நான் விரும்புகிறேன்.

எங்கள் மகளை திருமணம் செய்து கொடுத்துவிட்டோம். இனி, இளைப்பாற விரும்புகிறோம். அதை அனுபவிக்க தயாராகிவிட்டோம். ஆனால், அதற்கு நீங்கள் அவளை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள வேண்டும். இருந்தாலும், எல்லா சராசரி தந்தையைப் போலவும் நான் இதை திரும்பத் திரும்ப சொல்கிறேன், தயவுசெய்து அவள் மகிழ்ச்சிக்கு குறை ஏதும் இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

அவள் எப்போதுமே எனக்குப் பாரமாக இருந்த தில்லை. இனியும் ஒருபோதும் பாரமாக கருத மாட்டேன். ஏனெனில், என் சுவாசம் இயல்பாக இருப்பதற்கும், என் இதழ்களில் புன்னகை பு'ப்பதற்கும் காரணம் அவளே. இருந்தும் அவளை நான் திருமணம் செய்து கொடுக்கிறேன். ஏனென்றால் அது ஓர் இயற்கை நியதியாக இருக்கிறது. கலாசாரத்துக்கு கட்டுப்பட்டு மட்டுமே அவளை உங்கள் வீட்டுக்கு அனுப்பிவைக்கிறேன், என் வீட்டின் மகிழ்ச்சிப் பேழை உங்கள் வீட்டில் ஒளி வீசவருகிறது. எனது உலகத்தை உங்களுக்கு தாரை வார்த்துத்தருகிறேன்.

அந்த உலகம் என்றென்றைக்கும் அழகாக இருப்பதை நீங்களே உறுதி செய்யவேண்டும். எனது இளவரசியை உங்களிடம் அனுப்புகிறேன். அவள் உங்கள் வீட்டின் ராணியாக திகழ் வழிவகை செய்யுங்கள். எனது இரத்தமும், வியர்வையும் அவளை ஆளாக்கியிருக்கிறது. இப்போது அவள் மாசறு பொன்னாக இருக்கிறாள். அவள் உங்கள் வீட்டுக்கு கொண்டுவரும் அன்பு, அக்கறை, அரவணைப்பு, அழகு, இதம் என எல்லாப் பண்புகளுக்கும் பரிசாக அவளுக்கு மகிழ்ச்சியைத் தாருங்கள்.

ஆம், அவளை தயவுசெய்து மகிழ்ச்சியுடன் வைத்துக் கொள்ளுங்கள். எப்போதாவது அவள் சிறு தவறு செய்துவிட்டாள் என நினைத்தால் அவளை தாராளமாக திட்டுங்கள். ஆனால் அதேவேளையில், அவள்மேல் செலுத்தும் அன்பில் குறைவைக்காதீர்கள். அவள் மிகவும் நளினமானவள். அவள் எப்போதாவது துவண்டு போய் இருந்தால் அவளுடன் இருங்கள். உங்களது சிறுகவனம் அவளுக்குப்போதும், ஆறுதல்தர. அவள் உடல்நலன் பாதிக்கப்பட்டால் அவள்மீது அக்கறை காட்டுங்கள். அதுவே அவளுக்கு அருமருந்து.

அவளது பொறுப்புகளில் எப்போதாவது விலகி விட்டால் அதைச் சுட்டிக்காட்டுங்கள். அதேவேளையில், நீ இன்னும் வாழ்க்கையை கற்றுக்கொண்டிருக்கிறாய் என நாங்கள் நம்புகிறோம் என அவள் உணரும்படி நடந்துகொள்ளுங்கள். அவளைப் புரிந்துகொள்ளுங்கள். தயவுசெய்து அவளை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளுங்கள். அவளை மாதக்கணக்கில் காண முடியவில்லை என்றாலும் பரவாயில்லை, அவள் குரலை தினம் தினம் கேட்கமுடியவில்லை என்றாலும் பரவாயில்லை.

உங்கள் வீட்டுக்கு வந்தபிறகு அவளுக்கு என் நினைவே வரவில்லை என்றால் நான் மிகுந்த மகிழ்ச்சியடைவேன். என் மகளின் மகிழ்ச்சி மட்டுமே என் வாழ்நாள் இலட்சியம்.

**250/= பரிசு** வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :- 492**

**கேள்வி: இந்தியாவின் முதல் பெண் புகைப்பட பத்திரிகையாளர் யார்?**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 02. 11. 2015**

விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 492
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

பரிசுப் போட்டி இல :- 490 இற்கான விடை:-
இரத்தக்குழாய் அடைப்பு நீங்கும்.

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி :-
என்.சுவேய்திகா,
வாகரை, மட்டக்களப்பு.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

492

பெயர் : ....................
முகவரி : ....................
....................
தே.அ. அட்டை இல : ....................
விடை : ....................
....................
கையொப்பம் : ....................




# கிராமங்களை நோக்கி...

தமிழர் சமூகத்தின் கடந்த இரண்டு நூற்றாண்டு கால வரலாற்றை நாம் பார்க்கும்போதுதான் ஆட்சி அதிகாரத்தைத் தொடர்ந்தும் தமது கைகளிலே வைத்திருக்கும் தமிழ் மேட்டுக்குடிச் சமூகம் ஏனைய மக்கள் சமூகத்தை எப்படி ஏமாற்றிவந்தனர் என்பதை, அதிகாரவெறி கொண்ட மேட்டுக்குடியினர் ஏனைய மக்கள் சமூகத்தினருக்குச் செய்த அநியாயங்களையும் கொடுமைகளையும் நாம் அறிந்துகொள்ளலாம். இந்த அறி-தலும் புரிதலும் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் விடுதலைக்காகவும், அவர்களது வாழ்வியல் சார்ந்த முன்னேற்றத்திற்காகவும் அர்ப்பணத்துடன் செயற்பட எத்தனிக்கும் அனைவருக்கும் மிகவும் அவசியமானது என்றே நான் கருதுகின்றேன். அந்தவகையில் 18ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலங்களில் தமிழர் சமூகத்தின் வாழ்நிலை எப்படி இருந்தது என்பதைப் பார்ப்போம்.

இது மன்னர் காலம், மன்னராட்சிமுறை நிலவிய காலம், இக்காலத்தில் யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் தனித்தனி இராச்சியங்கள் நடைபெற்றுவந்தன. அப்போது யாழ்ப்பாண இராச்சியத்தில் ஆண்டான் - அடிமை முறையே நடைமுறையில் இருந்தன. யாழ்ப்பாண இராச்சியத்தில் வாழ்ந்த அடிமைகளின் கடின உழைப்பால் யாழ்ப்பாண இராச்சியம் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்ற ஒரு இராச்சியமாய் விளங்கியதென வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால் பொருளாதாரத் தன்னிறைவு கண்ட யாழ்ப்பாண இராச்சியத்தில் வாழ்ந்த அடிமை - குடிமை மக்களின் வாழ்வு மிகவும் மோசமானநிலையிலேயே இருந்து வந்துள்ளது.

யாழ்ப்பாண இராச்சியத்தின் பொருளாதாரத்தின் நிறைவுக்காக உழைத்த அந்த அடிமை - குடிமை மக்களை கொய்யாமரப் பத்தைகளும், நாயுண்ணிப் பத்தைகளும், பனை வடலிகளும்...! நீண்டு உயர்ந்து நிற்கும் பனைமரங்களும் நிறைந்து காணப்படும் புறம்போக்கு நிலங்களில் அவர்களால் அமைக்கப்பட்ட சிறுசிறு குடிசைகளில் வாழும்படி அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். மழை, வெள்ளம் நிரம்பிநிற்கும் பள்ளக்காணிகளில், ஓட்டைகள் நிறைந்த ஓலைக்குடிசைகளில் இந்த மக்கள் வாழ்ந்தபோதும் வெளி உலகம் பற்றிய எந்தவொரு சிந்தனையும் இல்லாமல் தாம் வாழும் மண்ணையே பார்த்தபடி அந்த அடிமை - குடிமை மக்கள் வாழ்ந்துகொண்டிருந்தனர்.

மண்மீது பற்றுக்கொண்டு அந்த மண்ணில் உழைப்பது மட்டும்தான் தமது வாழ்க்கையென வாழ்ந்துகொண்டிருந்த மக்களுக்கு நல்ல உடை அணிவதற்குக்கூட அன்று சுதந்திரம் இருக்கவில்லை. அடிமை நிலையில் வாழ்ந்த ஆண்கள் மேலுக்குச் சேட்டோ, காலுக்குச் செருப்போ, தோளிலே சால்வையோ அணியமுடியாது. அரையிலே ஒரு சிறுவேட்டித் துண்டை மட்டுமே கட்டவேணும். அடிமைப்பெண்களோ மேல்சட்டை போடமுடியாது. சாதாரண நூல் சேலையை குறுக்குக்கட்டாய் கட்டிக்கொண்டு திரியவேண்டும். இது மேட்டுக்குடியினரின் கடுமையான நிபந்தனை. மீறுவோர் மிகமோசமான முறையில் தண்டிக்கப்பட்டனர்.



ஒரு தடவை அடிமைச் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் காலுக்குச் செருப்பணிந்து கொண்டுவந்ததைக் கண்ட மேட்டுக் குடியினர் அவரை அடித்து, உதைத்து செருப்பைக் கழட்டித் தலையில் காவும்படிசெய்து, ஊர்முழுவதும் "நான் இனிச் செருப்புப் போடமாட்டேன்" எனச் சொல்லியவாறு நடக்கவைத்தனர் என்றும், ஒரு அடிமைப்பெண் மேற் சட்டை அணிந்ததற்காக அப்பெண்ணின் மேற்சட்டையைக் கொக்கத்தடிக் கத்தியால் கிளித்தெறிந்துவிட்டு வெறும் மேலுடன் ஊருக்குள் போகவிட்டதாகவும் சொல்லப்படுகின்ற உண்மைக் கதைகள் கிராமங்களில் நிறைய உண்டு. அதுமட்டுமல்ல ஆட்சியதிகாரத்தில் அன்றிருந்த நிலப் பிரபுத்துவ மேட்டுக்குடியினரின் ஆடம்பர வாழ்விற்காக அல்லும் பகலும் இரத்தம் சிந்தி , உழைத்த அடிமைக் குடிமைகளிற்கு குடியிருப்பதற்கான நிலஉரிமை அன்று முற்றுமுழுதாக மறுக்கப்பட்டிருந்தது.

அன்றைய யாழ்ப்பாண இராச்சியத்தில் "ராஜகாரிய" முறையே யாழ்ப்பாணத்தில் தமிழ் மேட்டுக் குடியினரால் அமுல்படுத்தப் பட்டிருந்தது. இந்த "ராஜகாரிய" முறைப்படி யாழ்ப்பாண இராச்சியத்தின்கீழ் உள்ள நிலங்கள் யாவும் நிலப்பிரபுத்துவ மேட்டுக்குடியினருக்கே சொந்தமானது. அந்த நிலத்தில் உழைக்கும் உரிமையும் அந்த மேட்டுக்குடியினருக்குச் சேவை செய்யும் கடமையும் மட்டுமே அடிமைக் குடிமைகளிற்கு வழங்கப்பட்டது.



இவ்வாறு உழைக்கும் அடிமை - குடிமை மக்களுக்கு மேட்டுக்குடியினர் தமது புறம் போக்கு நிலங்களில் குடியிருக்கும் உரிமையை மட்டுமே வழங்கினர். குடியிருக்கச் சொந்த நிலமில்லாத அடிமைகள் யாராவது மேட்டுக்குடியினரோடு நியாயம்கேட்டு முரண்பட்டால் அவர்களது குடிசைக்கு நெருப்புவைத்துக் கொழுத்தி எரித்து, அவர்களையும் கொன்று விடுவார்கள்.

இவ்வாறு மேட்டுக்குடியினருடன் நியாயத்திற்காக முரண்பட்டுக் கொண்ட ஒரு குடும்பத்தை இரவுநேரம் அந்தக் குடும்பம் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது வீட்டுப் படலையை இழுத்துப் பூட்டிவிட்டு அவர்களது ஓலைக்குடிசையை மண்ணெண்ணெய் ஊற்றிக் கொழுத்தினார்கள். அந்த வீட்டில் உறங்கிக்கொண்டிருந்தவர்களும், அந்த வீட்டுப்பூனையும் சாகடிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் புன்னாலைக்கட்டுவனில் 1970களின் பிற்பகுதியில் நடந்த்தாக கூறப்படுகின்றது. கடந்த 20ஆம் நூற்றாண்டு ஜனநாயக ஆட்சியிலேயே இப்படி நடந்ததென்றால்...யூ அன்றைய மன்னராட்சிக் காலத்தில் எப்படி நடந்திருக்கும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்யூ

அன்றைய யாழ்ப்பாண இராச்சியத்தில் வாழ்ந்த அடிமை - குடிமை வாய்திறந்து பேசும் உரிமை அற்றவர்களாய்.... மனித உரிமைகள் யாவும் மறுக்கப்பட்டவர்களாய்... வாழ்ந்துகொண்டிருந்தார்கள்... உலகத்தை அறியாமல்... தங்கள் உரிமை வாழ்வைப் புரியாமல்... தம்மை ஆழும் மேட்டுக்குடியினரின் உல்லாசமான ஆடம்பர வாழ்வுக்காக... செம்மண் புழுதியிலும்... வயல்நிலங்களிலும் தமது இரத்தத்தைச் சிந்தி உழைத்த அந்த மக்களுக்கு மேட்டுக்குடியினரால் அன்று ஒழுங்கான ஊதியம்கூட அவர்களிற்கு வழங்கப்படவில்லை.

தமது உல்லாச வாழ்விற்காக உழைக்கும் அந்த அடிமை - குடிமை மக்கள் உயிரோடு இருந்தால்தான் நாளை தமக்காக உழைப்பார்கள் என்பதற்காக. அவர்களது உழைப்பிலே உற்பத்திசெய்யப்பட்ட உணவுத் தானியங்களிலிருந்து... அவர்களின் உணவுக்கு மட்டும் தேவையானவற்றை மேட்டுக்குடியினர் அளவாக அவர்களிற்கு வழங்கினர். அவர்கள் உடுத்துவதற்காக தமது கிழிந்த பழைய வேட்டித் துண்டையும், மேட்டுக்குடிப் பெண்கள் உடுத்துக் கழித்த பழைய நூல் சேலைகளையும் அவர்களிற்கு வழங்கினார்கள். அன்றைய காலத்தில் பணப்புழக்கம் நடைமுறையில் இருந்த போதும்... அந்த அடிமை - குடிமைகள் பணத்தை கண்ணாலும் கண்டறியாதவர்களாகவே வாழ்ந்தார்கள். இதற்கு உதாரணஉமாக: பிரித்தானியாவின் ஆட்சிக் காலத்தில் நடந்த ஓர் உண்மைச் சம்பவத்தை இங்கு குறிப்பிடுவது பொருத்தமுடையதாக இருக்கும் என்பதால் அந்தச் சம்பவத்தை இங்கு நான் குறிப்பிடுகின்றேன்.

**தங்கன்**

## அதிரடி ஐயாத்துரை




● 60 வயதோடை அரசாங்கம் ஓய்வு குடுத்தாலும் நம்மட கல்வி அதிகாரிகளுக்கு இன்னும் ஆசை விடேல்ல கண்டியளோ. சுழல் கதிரையில இருந்து புட்டி. குட்டி. பெட்டி என சுழற்றிய அனுபவம்விடுமா? கேதீஸ்வரநாதர் குடியிருக்கிற இடத்திலை இருக்கிற கல்வி அதிகாரிக்கு வயது வந்து வீட்டை போக விருப்பமில்லாம இனபேதம் பாக்காம எல்லா அரசியல்வாதிகளின்ர காலலை விழுறார். 60 வயதுக்குப் பிறகும் ஒருக்கா பிக்கப்பையும் அடிபட விடத்தான். அண்ணன் சீயான் விக்கரமுல்ல.

● நவம்பர் 7 ஆம் திகதியை நினைக்க எங்கட கூத்தமைப்புக்காரருக்கு குலப்பன் அடிக்குது. இலங்கை ராசாதான் வாக்குக் கொடுத்தவர் மகாமந்திரி இந்த விசயத்திலை கப்சிப். மகாமந்திரி கபடவேடதாசி. அவர் காட்டிலதான் இப்ப மழை. விசயம் பிழைச்சுப்போச்சுது எண்டால் கூத்தமைப்புக்காரரும் யானை அம்மணியும் தப்பமுடியாது. கனபேருக்கு ஹைபிறசுராம். சுகரும் தொங்கலிலைதானாம். டாக்குத்தர்மார் சொன்னவங்களாம் ரிலாக்ஸ் பிளீஸ் எண்டு. சிறைச்சாலை படம் பார்த்தால் கொஞ்சம் டென்சன் குறையுமெண்டு நினைக்கிறன்.

● எங்கட தமிழ்ப்பட்டதாரிகளுக்கு அடிமேல் அடிதான் போங்கோ. பாவம் கொழும்பில இன்டர்வியூ எண்டு கூப்பிட்டு அவங்கள் கேட்ட கேள்வியும் போட்ட கண்டிசன்களையும் கேட்டு பிள்ளையள் அழாக்குறைதான். ஒரு வருடம் கொழும்பில ரெயினிஸ் ரூ. 10000 மட்டும் அலவன்ஸ். என்னப்பா இது 1 மாதம் குளிக்கிற சோப்புக்கோ காணாது இந்த அலவன்ஸ். போனமுறை வீணைக்கட்சித் தலைவர் எல்லாரையும் வடக்குக்கும் குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கும் போட்டுத்தந்தவர். இப்ப மனிசன் பதவியில இல்லை. இருந்தா பட்டதாரிகள் முழுப்பேரும் தியேட்டர் வாசல்ல எல்ல நிப்பினம். எண்டாலும் மனுசன் இலங்கை ராசாவுடன் ஏதோ கதைக்கிறதாக தகவல் பாப்பம் பொறுத்து.

● ஒபாமாவைச் சந்திக்கலாம். பான்கீமூனைச் சந்திக்கலாம். மோடியைச் சந்திக்கலாம் யாரை வேணுமானாலும் சந்திக்கலாம். எத்தனை தேவாரம் பாடிப்போட்டார். எல்லா லைனாலையும் ஓடிப்போட்டார். இந்த மனிசியை சந்திக்க ஒரு அப்பொயின்ட்மென்ட் கிடைக்குது இல்லை என முகாரி ராகம் பாடுகிறாராம் தோடுடைய செவியன் பாடிய கூத்தமைப்புக்காரத் தலைவர். எல்லாம் நம்மடை அயல்நாட்டுத் தாய்வீட்டுத் முதல் பெண்மணிதான். மனிசியைப்பற்றி தெரியுமல்ல. இரும்புமனிசி. கூத்தமைப்புக்காரரைப் பற்றி பழமும் திண்டு கொட்டையும் போட்ட சீமாட்டி. இவை மோடிக்கு அல்வா குடுத்தாலும் லேடிக்கு அல்வா குடுக்க ஏலாது பாத்தியளே.

● இந்தப் பள்ளிக்கூடங்களின்ர நடைபவனி லொள்ளுத் தாங்க முடியலங்க. 50. 100. 125. 200 எண்டு அப்பா ஒரே மேடை றோட்டு அளப்புத்தான். இந்தத் தவணை நோ படிப்பு. ஒன்லி கொண்டாட்டம். உந்தக் கிழிவிலை நம்மட யாழ்ப்பாணக்கல்வி உருப்படுமே. இந்த முறையும் எங்களுக்கு 25ஆவது இடம்தான் போங்க. உதிலே என்ன பகிடி எண்டால் உந்த விழாவின்ர காசு முழுத்துக்கும் கணக்குமில்ல. வழக்குமில்ல. அந்தச் சங்கம். இந்தக் குழு எண்டு காசு முழுக்க அடிச்சுத் தள்ளுறாங்களாம். அப்பா! கல்விராசகுலகுரு பாத்துக்கொண்டுதானா இருக்கிறாய்?

# சமூக வலைத் தளங்களில் முகநூல்களின் செல்வாக்கு

**மனிதவிழுமியங்களைப் பேணிப் பாதுகாத்துக் கொண்டு ஒட்டுமொத்த மனிதகுல அபிவிருத்திக்காக இந்த நவீன தொடர்பாடல் வசதிகளை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்திக் கொள்வதில் தவறில்லை என்கிறார் வளவாளர் இஸ்மாயில் அப்துல் அஸீஸ்.**

**தங்க ஊசி என்பதால் அதனைக்கொண்டு கண்ணில் குத்திக் கொள்ளலாமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. எவ்வாறாயினும், ஆபத்தை உண்டுபண்ணாத அழிவு, நாச வேலைகளுக்குத் தூபமிடாத சமூக வலைத்தளங்கள் முகநூல் பக்கங்களின் தொடர்பாடல் வளர்ச்சியைப் பற்றி பாராட்டவும் பகிர்ந்து கொள்ளவும் ஊடகவியலாளர்கள் ஊன்றுகோலாய் இருப்பதில் அச்சம்கொள்ளத் தேவையில்லை.**

தற்போதைய 21ஆம் நூற்றாண்டின் உலகை உயிர்ப்பித்துக்கொண்டிருப்பது தகவல் தொழிநுட்பம் என்று எல்லோரும் பெருமைப்பட்டுக் கொள்கின்றோம். உலகம் சுருங்கி தகவல் தொழிநுட்பத்தின் கீழ் ஒரே கூரையின்கீழ் கொண்டு வரப்பட்டுவிட்டது. வீட்டுக்கூரையில், உயரமான மரங்களில், அல்லது மலைகளின் மீதேறி நின்று ஒருவருக்கொருவர் அவசரத் தகவல்களைப் பரிமாறிய காலம் போய் இப்போது உள்ளங் கைக்குள்ளே உலகத்தைக் கண்டுகொள்ளும் கண்டு பிடிப்புக் காலத்தின் உச்சத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்பதில் பெருமைதான்.

உலகமயமாதலின்கீழ் நாடு, பிராந்தியம், சர்வதேசம் என்ற எல்லைகளைத் தகர்த்தெறிந்து அரசியல், பண்பாடு, கலாசார, பொருளாதார, கல்வி மற்றும் மருத்துவம் போன்ற எல்லா அம்சங்களையும் ஒரு குடையின்கீழ் ஒன்றிணைத்துள்ளது இந்த தகவல் தொழிநுட்ப அறிவு. கடிதம், தந்தி, பெக்ஸ், ஈமெயில்., என்று தொடங்கி இப்பொழுது பல்வேறு சமூக வலைத் தளங்களினூடான தொடர்பாடல் வளர்ச்சி என்பது உலகை சுருட்டிக் கொண்டு வந்துள்ளது. சமூக வலைத் தளங்களின் வியாபிப்புத் தொடர்பாக கிழக்கு மாகாண மூவின மும்மொழி ஊடகவியலாளர்களுக்கும் அறிவூட்டும் ஒரு நாள் கருத்தரங்கு “விடியல் ஊடக” அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமையன்று மட்டக்களப்பிலுள்ள “ஈஸ்ட் லகூன்” விடுதியில் இடம்பெற்றது.

இதிலே சமூக வலைத்தளங்களின் அதீத வளர்ச்சிப் போக்கு பற்றியும் அதனைக் கவனமாகக் கையாள வேண்டியதன் அவசியத்தையும் ஊடகவியலாளர்களுக்குத் தெளிவுபடுத்துவதாகவே இந்தக் கருத்தரங்கு அமைந்துவிட்டிருந்தது.

காட்சி ஊடகங்கள் இருக்கும் ஒரு யுகத்தில் சமூகவலைத்தளங்களும் அதே திசையில் செல்லத் தொடங்கி

அத்துடன் நின்றுவிடாது இன்று அது கட்டுக்கடங்காமல் போய் முழு மத்திய கிழக்கையும் கதி கலங்க வைத்திருக்கின்றது. இங்கே நமது தென்கிழக்காசியாவில் மியன்மார் (பழைய பெயர் பர்மா) பெரியதொரு மனிதப் படுகொலையும் மனித அவலமும் அகதி வாழ்க்கையும் தொடர்வதற்கு இந்த சமூக வலைத் தளங்கள் சாமரம் வீசியிருக்கின்றன. மியன்மாரின் பௌத்த தீவிரவாத சமூக வலைத்தளங்கள் மேற்கொண்ட விசமத்தனமான பிரசாரங்களால் றொஹிங்கியா முஸ்லிம்கள் நொருங்கிப் போயிருக்கின்றார்கள். திட்டமிட்டு அவர்களது வாழ்க்கை சீரழிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தியாவில் சினிமா குறித்த

வளர்ந்திருப்பதை இன்று உணர்ந்திருக்கும் மேற்குலகிலிருந்து பாடம் கற்காமல் நாமும் அதே புதைகுழியில்தான் விழப் போகிறோம் என்பது கசப்பான உண்மை.

ஏனெனில் மேற்குலக சமூகம் செய்தது அவர்கள் அறியாமல் செய்த தவறு. ஆனால், தெற்காசியர்கள் தங்கள் கண் முன்னால் இருக்கும் அபாய எச்சரிக்கையைப் படிக்க முடியாத அளவுக்கு குறை அறிவுடன் இருப்பது அவர்களின் மரபணுவிலேயே உள்ள பிரச்சினையா என்ற நகைச்சுவையான கேள்வியும் எழுகின்றது.

சமூக வலைத்தளங்களில் தான் விரும்பிய கண்டது கடியது எல்லாவற்றையும் போட்டு நிரப்பி தானும் குழம்பி மற்றவர்களையும் குழப்பிவிடும் ஒரு அவலநிலை தோன்றியிருக்கிறது. இலங்கையிலுள்ள முகநூல்களில் முப்பது வீதமானவை வெறும் பொய்யான தகவல்களைத் தாங்கி காட்சிப்படுத்து கின்றன என்கிறார் கலாநிதி ரங்ககலன் சூரிய.

சமூக வலைத்தளங்களில் வலம் வரும் எல்லா வீடியோக்களையும் நம்பிவிடாதீர்கள். அவற்றில் போலியானவையும் உள்ளன என ஆதாரத்துடன் நிரூபிக்கிறது பிரான்ஸ் 24 எனும் செய்திச் சேவை நிறுவனம். ஐரோப்பாவுக்குள் படையெடுக்கும் அகதிகளில் இஸ்லாமிய தேசம் கிளர்ச்சிக் குழுவின் ஆயுததாரிகளும் மறைந்துள்ளதாக ஒரு வீடியோவும், ஐரோப்பிய நாடுகளில் பொதுச்சொத்துக்களை அகதிகள் சேதப்படுத்துவதாக மற்றுமொரு வீடியோவும் அண்மையில் தீவிர வலதுசாரிகளால் வெளியிடப்பட்டிருந்தன. ஆனால் அவ்வீடியோக்களுக்கும், அகதிகளுக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை என நிரூபிக்கிறது பிரான்ஸ் 24 இன் வீடியோ.

அத்தோடு அகதிகளுக்காக தொண்டு நிறுவனங்கள் கொடுக்கவந்த உணவுப்பொதிகளையும்

தொழிநுட்பக் கல்வியிலும் சமூக வலைத்தளங்களினூடாக பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதையும் குறிப்பிட்டாகவேண்டும்.

நவீன உலக மயமாதலின் விளைவாக சர்வதேச மொழியான ஆங்கில மொழியின் முக்கியத்துவமும் கற்பதற்கான சந்தர்ப்பமும் ஏற்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கவொரு விடயமாகும். இன்று கல்வியில் கலாசார அம்சங்களை பகிர்ந்துகொள்வதற்கான சந்தர்ப்பத்தை இவ்வுலகமயமாதல் தொழிநுட்ப சிந்தனை ஏற்படுத்தியுள்ளது. பன்மைக் கலாசாரக் கல்வியை அறிமுகப்படுத்தி கலாசாரப் பெறுமதிகள், விழுமியங்களை கலாசாரங்களுக்கு கலாசாரம் பரிமாறிக்கொள்ளும் ஒரு ஊடகமாகவும் இவ்வுலகமயமாதல் திகழ்கின்றது.

கல்வித்துறை திட்டமிடலாளர்களும் கொள்கை வகுப்பாளர்களும் தமது கல்வி சம்பந்தப்பட்ட புதிய விடயங்களை உலகுக்கு அறிமுகப்படுத்துகின்ற அதே நேரம் உலகமயமாதலோடு தொடர்புடைய புதிய தொழிநுட்பம், வினைத்திறனுடன் கூடிய கல்விச் செயற்பாடு, கற்றல் - கற்பித்தலில் நவீன சாதனங்கள் போன்றவற்றின் பயன்பாட்டினையும் அதன் மூலம் வலியுறுத்த தவறவில்லை. அந்த அளவுக்கு இன்று உலகமயமாதலில் தொழிநுட்பக் கல்வி செல்வாக்குச் செலுத்தியுள்ளது. ஆரம்பத்தில் கல்வியைக் கற்பதற்காக வகுப்பறைக்கு செல்லவேண்டிய கட்டாயம் இருந்தது. ஆனால் இன்று அந்த நிலைமாறி வீட்டிலிருந்துகொண்டே கல்வியைப் பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும் இன்று கற்றல் வாய்ப்பு மட்டுமின்றி கற்பித்தல் உபகரணங்கள், கற்பித்தல் முறைகள்கூட மாற்றம் கண்டுள்ளன. எனவே கல்வியில் ஏற்படும் கலாசாரப் பிளவுகளுக்கு ஒரு விடைகாணும் செயற்பாடாகவும் இது விளங்குகின்றது. அதேநேரம் ஆபத்தான



இருக்கின்றன. சமீபகாலத்தில் மிகவும் பிரபலமடைந்திருப்பது சமூக வலைத் தளங்கள். இதன் கட்டுப்பாடுகள் அதனைக் கையாளத் தெரிந்த ஒவ்வொரு தனிநபரிடமும் வந்துள்ளது.

சமூக வலைத்தளங்களை நடத்திக்கொண்டிருக்கும் முதலீட்டு நிறுவனங்கள் மர்மப்புன்னகையுடன் இந்த போக்கினைப் பார்க்கின்றன. சமூக வலைத்தளங்கள் உருவாகும்போதே வெறும் இணைக்கும் தளமாக மட்டுமே அவை இருக்கப்போவதில்லை என்பது தெளிவாகவே இருந்தது.

அந்த நம்பிக்கையில்தான் வருங்கால வைப்புநிதி போல இவற்றில் தனியார் முதலீட்டாளர்கள் பணம் போட்டார்கள். இடைநடுவில் அவை சமூக - அரசியல் இயக்கங்களாக இருக்கவும் முடியும் என்று தங்களின் ஒரு முகத்தைக் காட்டின.

இணையத்தில் பொதுக்கருத்தை திரட்டும்வகையில் ஒரு வலுவான சமூக வலைத்தள இயக்கமாக இவை உருவெடுத்துள்ளன. ரியூனீஸியாவில் தொடங்கிய “அறபு வசந்தம்” எனும் சமூக வலைத்தளப் போராட்டம் முழு மத்திய கிழக்கையும் உலுக்கி ஆர்ப்பாட்டங்களையும், அழிவுகளையும் ஏற்படுத்தி அரச தலைவர்களையும் கொன்று ஆட்டங்காண வைத்தது.

குழந்தைத்தனமான மயக்கங்களை வெளிப்படுத்தும் பெரிய கும்பலுக்கு நடுவில், அன்னா ஹசாரே விஷயத்தில் நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் ஒரு பெரிய விவாதமே சமூக வலைத்தளங்களில் நடந்தது.

இப்போது சமூக வலைத் தளங்களின் வர்த்தக முகத்தின் வெளிப்பாடு வெற்றிகரமாக பிரதிபலிக்க ஆரம்பித்திருக்கிறது. விளம்பரப்பொருளை சமூக வலைத்தளங்களுக்குக் கொண்டு வந்ததன்மூலம் கடைசி அந்தரங்க கோட்டினையும் விளம்பரதாரர்கள் வெற்றிகரமாகக் கடந்திருக்கிறார்கள்.

எதை, எப்படி செய்தியாக்குவது என்ற வரைமுறைகளை செய்தி ஊடகங்கள், குறிப்பாக காட்சி ஊடகங்கள், தாண்டிவிட்டன. விளம்பரதாரர்கள் தங்கள் செல்வாக்கை சமூக வலைத் தளங்களின்மீதும் செலுத்தும் நாள் வெகுதொலைவில் இல்லை. எனினும் முதலாளித்துவம் ஒரு தீயசக்தியாக

அவர்கள் மறுப்பதாக இன்னுமொரு வீடியோ வெளியிடப் பட்டிருந்தது. ஆனால் அதில் என்ன உண்மை என்பதையும் பிரான்ஸ் 24 செய்தி நிறுவனம் தெளிவுபடுத்தியுள்ளது.

மனித விழுமியங்களைப் பேணிப் பாதுகாத்துக்கொண்டு ஒட்டுமொத்த மனிதகுல அபிவிருத்திக்காக இந்த நவீன தொடர்பாடல் வசதிகளை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்திக் கொள்வதில் தவறில்லை என்கிறார் வளவாளர் இஸ்மாயில் அப்துல் அஸீஸ். பொதுவான தேடல் கல்வி மற்றும்

கையாளுகையால் அநாச்சாரங்கள் அரங்கேறவும் இந்த நவீன தொடர்பாடல் வழிசமைத்துக் கொடுத்திருக்கின்றது.


அதனால், தங்க ஊசி என்பதால் அதனைக்கொண்டு கண்ணில் குத்திக் கொள்ளலாமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. எவ்வாறாயினும், ஆபத்தை உண்டுபண்ணாத அழிவு, நாசவேலைகளுக்குத் தூபமிடாத சமூக வலைத்தளங்கள் முகநூல் பக்கங்களின் தொடர்பாடல் வளர்ச்சியைப் பற்றி பாராட்டவும் பகிர்ந்துகொள்ளவும் ஊடகவியலாளர்கள் ஊன்றுகோலாய் இருப்பதில் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

ஏ.எச்.ஏ. ஹுஸைன்



## மருத்துவம்

# ஆண்களுக்கு ஏற்படும் மொட்டை விழுதல்



**கேள்வி:**

எனது மகன் வேகமாக தலைமயிரை இழந்துவருகிறார். இது ஆண்களுக்கு ஏற்படும் மொட்டை விழுதல் போன்று தோன்றுகிறது. இவரது தகப்பனாருக்கோ அல்லது பேரனுக்கோ மொட்டை விழுந்தது மில்லை, இவளவு வேகமாக மயிரை இழந்ததுமில்லை. மயிரிழப்பைத் தடுக்க ஏதாவது வழியுண்டா?

**பதில்:**

நீங்கள் சந்தேகிப்பது போன்று ஆண்களுக்கு ஏற்படும் மொட்டை விழுதலானது ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவானதாகும். காலப்போக்கில் தலைமுடியின் வேர்கணுக்கள் சிறுத்துப்போக புதிதாக தோன்ற வேண்டிய மயிர்களின் எண்ணிக்கையும் குறைந்துபோகின்றது. இதனால் தலைமுடி மெலிந்தும் குறைந்தும் போகிறது. சராசரியாக 100.000 தலை முடி காணப்படுகின்றது. மயிர்கணுக்களில் உற்பத்தியாகும் மயிர் 3 வருடம் வரையில் வளர்ந்தபின் உதிர்கிறது. நாளொன்றுக்கு 40-120 வரையிலான மயிர்கள் உதிர்ந்துவிடுகின்றன. மேலும் ஒரு நேரத்தில் மயிர்களின் வயது வேறுபட்டிருக்கும்.

ஆண் ஓமோனான- Testosterore இன் சமநிலை குழப்பமும், மயிரிழப்புக்கான காரணமாக அமையலாம். இவற்றுடன்கூட MSM (எம்.ஸ்எம்), Zine (ஸின்) கட்டாயமான கொழுப்பமிலங்கள் (Essential Fatty Acids) போன்றன போதியளவில் தேவைப்படுகின்றன. இவற்றை குறைநிரப்புவதால் மயிருதிரும் வேகத்தைக் குறைக்கலாம். மேலும் தாடோச்டேரோன் (Testosteron) ஓமோனின் அளவை சமப்படுத்த றிபுளுஸ்தேர்றேச்றிஸ் (Tribulus Terrestris) எனும் மூலிகையை பயன்படுத்தலாம். மூலிகை தயாரிப்பான போ-தி கொம்ப்ளெக்ஸ் (Fo-Ti Complex) எனும் மூலிகை கூட்டு மயிர்கணுக்களை உசுப்பிவிட்டு புது மயிர் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. மூலிகைக்கூட்டை உள்ளெடுக்கும் அதேவேளை தலைமுடிகளுக்கு பாவிக்கக்கூடிய எண்ணெய் (Hair Oil) ஐ பயன்படுத்தி தலையை தேய்த்துவிடுவதனாலும் மயிர் வளர்ச்சியைக் கூட்டலாம்.

மயிர் வளர்ச்சிக்கு தேவையான உயிர்ச்சத்துக்கள், தாதுப்பொருட்கள் போன்றன ஒரே தயாரிப்புக்களில் கிடைக்கின்றன. கொழுப்பமிலங்களைத் தரவல்ல மீன் எண்ணெய் வகைகள், உணவூடாகவோ அல்லது குறை நிரப்பியாகவோ எடுக்கவேண்டும். மயிருதிர்வும், மயிர் தடிப்பு குறைவடைவதற்கும் வேறு பல காரணங்களும் இருக்க கூடும். குருதிச்சோகை, (இரும்பு சத்து குறைபாடு), தைரோயிட் குறைபாடு போன்றனவும் காரணங்களாகலாம்.



**மனவிரக்தியால் பாதிக்கப்படுபவர்கள் பொதுவாக சமூகத்தை விட்டுவிலகியும் மறைந்தும் இருக்க முற்படுகின்றனர். தம்மைச் சுற்றியுள்ள விடயங்கள் மீதான ஆர்வமும் அவர்களுக்கு அற்றுப்போகிறது. இதனால் வாழ்வில் மகிழ்ச்சியையோ, இன்பத்தையோ அனுபவிக்க முடியாது தனித்துவிடுகின்றார்கள்.**

# டிப்பிறசன் மன விரக்திநிலை

நாம் எல்லோருமே அவ்வப்போது கவலையும் மனவருத்தமும் அடையத் தான் செய்கிறோம். கவலை யையும் மனவேதனையை யும் அனுபவிக்கும் போதெல்லாம் மனம் தளர்வதும் சோர்வடைவதும் சகஜமானதுதான். அனேகமாக பல நேரங் களில் இது இயல்பாக மறைந்துவிடுகிறது. ஆனால் டிப்பிறசன் என்ற 'மனோவிரக்தி' நிலையை அடை யும்போது இந்த சோர்வும் கவலையும் இடைவிடாது நீடித்துவிடுகிறது, அல்லது இந்தக் கவலையும் சோர்வும் அடிக்கடி அன்றாட வாழ்க்கையில் செல்வாக்கு செலுத்தி குழப்பிவிடவும் செய்கின்றன.

மனவிரக்தியால் பாதிக்கப்படுபவர்கள் பொதுவாக சமூகத்தை விட்டுவிலகியும் மறைந்தும் இருக்க முற்படுகின்றனர். தம்மைச் சுற்றியுள்ள விடயங்கள் மீதான ஆர்வமும் அவர்களுக்கு அற்றுப்போகிறது. இதனால் வாழ்வில் மகிழ்ச்சியையோ, இன்பத்தையோ அனுபவிக்க முடியாது தனித்துவிடுகின்றார்கள்.

**மனவிரக்திக்கான அறிகுறிகள்:**

நித்திரைக் குழப்பம், கடும் களைப்பும், சோர்வும், காலையில் எழுந்திருக்கமுடியாமை, பசியின்மை, தம்மைப்பற்றிய பெறுமதி குறைவான நினைப்பு, தான் எதற்கும் லாயக்கில்லை என்று தோன்றுதல் போன்றன இதன் அறிகுறிகளாக இருக்கின்றன. ஆனால் இதில் நீங்கள் முக்கியமாக நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால், இதுபோன்ற மனோநிலையுடன் ஒருவர் தொடர்ந்தும் இருக்கப்போவதில்லை, இது தற்காலிகமான மனச்சிக்கல் என்பது தான். மனவிரக்தி பொதுவாகவே சமூகத்தில் காணப்படக்கூடிய சாதாரண நோய் நிலைதான், எம்மில் ஐந்து பேரில் ஒருவருக்கு அவர்களது வாழ்நாளில் இது வந்துபோவதை புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

எனவே இதுபற்றி அச்சப்படவோ வெட்கப்படவோ, சங்கடப்படவோ கூடாது. இதனைப் புறக்கணிக்கவும் கூடாது. மனவிரக்திக்கு உட்பட்டவர்கள் பொருத்தமான சிகிச்சைகளின் பின்னர் முற்றாகவே இதிலிருந்து குணமடைந்துவிடுகின்றனர். இதற்கு சுகமளிக்கக்கூடிய மூலிகைகள் உணவுக் குறைநிரப்பிகள் என்று பார்க்கும்போது, சென்ற்.ஜோன்ஸ் வோர்ட் என்ற மூலிகை மிகுந்த பயன்மிக்கதாக விளங்குகிறது. மனவிரக்தி வெகுவாகக் குணப்படுத்துவதில் இம்மூலிகையின் ஆற்றலை மருத்துவக்கற்கைகளும் உறுதிசெய்கின்றன. ஆனால் மனவிரக்திக்கு எடுக்கும் ஏனைய மருந்துகளுடன் சேர்த்து இதனை எடுக்கக்கூடாது.

குறைநிரப்பி – அத்தியாவசிய கொழுப்பமிலங்கள் (எசென்ஸ்சியல் பற்றி அசிட்):

உணவின் ஊடாக உடலுக்குத் தேவையான ஓமேகா - 3 முதல் ஓமேகா -6 வரையினுமான கொழுப்பு அமிலங்களை ஆரோக்கியமாக சமப்படுத்தி பேணாதுவிட்டால் மனவிரக்தி ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் இருக்கிறது. இதில் ஓமேகா 3 என்ற கொழுப்பமிலமானது நரம்புக்கலங்களின் முக்கியமான அங்கமாகும். கலங்கள் ஒன்றுடன் ஒன்று தமக்கிடையே தொடர்புகொள்வதற்கு இது உதவுகின்றது. மனநல ஆரோக்கியம் நன்றாக பேணப்படுவதற்கு கலங்களுக்கு இடையேயான இந்த தொடர்பாடல் ஆரம்ப அடிப்படையாக அமைகின்றது.

**உயிர்ச்சத்து வி.எம் 2000:**

இக்குளிசைகளை நாளுக்கு இரண்டு வீதம் உட்கொண்டு வந்தால் மனவிரக்தியை வெற்றி கொள்ளக்கூடிய அனைத்து விற்றமின் B உயிர்ச்சத்துக்களையும் உடல் பெற்றுக்கொள்ளும்.

**மூலிகைக்கலவை - அஸ்வகந்தா பிளஸ்:**

மன அழுத்த அளவு மற்றும் பதற்றத்தின் அளவுகளை நெறிப்படுத்த உதவக்கூடிய பல்வேறு மூலிகைகளைச் சேர்வையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட மூலிகைக் கலவையே அஸ்வகந்தா பிளஸ். மனமற்றும் உடல்ரீதியான அல்லது உணர்ச்சிவசப்படல் காரணமாக அல்லது ஏதோ ஒரு விதத்தில் மனத்தாக்கத்திற்கும் அழுத்தத்திற்கும் உட்படும்போது ஒருவரை நடத்திச் செல்வது உடலில் உள்ள அதிரினல் சுரப்பிகளாகும். அஸ்வகந்தா பிளஸ் ஆனது, ஒருவரின் ஞாபகத்தையும் நிதானத்தையும் விருத்தி செய்யவும், களைப்படைந்த அதிரினல் சுரப்பிகளுக்கு மீள சக்தியை வழங்கி பலப்படுத்தவும், பதற்றத்தை விடுவிக்கவும், நரம்புத்தொகுதியை அமைதிப்படுத்தியும், உங்கள் வீரியத்தை அதிகரிக்கவும், மேலும் நரம்புத் தொகுதிக்கு புத்துணர்ச்சியளிக்கவும் வேண்டிய உடல் ஆற்றலுக்கும் இயலுமைக்கும் உதவுகிறது.

இவை மாத்திரமன்றி ஒருவர் ஆரோக்கியமான வாழ்க்கை ஒழுங்கையும் பின்பற்றவேண்டும்.

அதாவது போசாக்கான உணவுப் பழக்கம், உடற்பயிற்சி, இயற்கையான சூரிய வெளிச்சத்தில் உடலைப்படவிடுதல், சமூகத்தவர்களுடன் ஆரோக்கியமான உரையாடல்களில் ஈடுபடல், மூளைப்பயிற்சி நல்ல சுவாசம், நச்சுத்தன்மை மிகுந்த சுற்றாடலிலிருந்து விலகியிருத்தல் போன்றவற்றை பின்பற்றலாம். இவற்றுக்கூட பின்னரும்கூட ஒருவர் மனவிரக்தியை உணர்வதானால் கவுன்சிலர்கள் என்று அழைக்கப்படும் மனநல ஆலோசகர்களையோ அல்லது உளவியல் நிபுணர்களையோ நாடலாம்.

## அக்கினி புத்திரி

இளைஞரான வக்கீல் வேதநாயகம் ஒரு பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவர். அவரது தந்தை பிரம்மநாயகம். வெள்ளைக்காரர்கள் காலத்திலேயே வக்கீலாக இருந்தவர். அந்தக் காலத்து வக்கீல் என்றால் அவருக்குக் கட்சிக்காரர்களிடமிருந்து அரிசி வரும், பரப்பு வரும், காய்கறி வரும் அத்தோடு பணமும் வரும்.

வழக்குரைஞர்கள் குறைவாக இருந்த காலத்தில் மிகப் பிரபலமாக விளங்கியவர் பிரம்மநாயகம்.

திருக்காட்டூர் கொலை வழக்கு, மாடன் கோவில் சாமி தூக்கும் தகராறில் ஆறு பேர் கொல்லப்பட்ட வழக்கு, வேலக்குடி ஜமீன்தாரின் குடும்பக் கொலை வழக்கு இவற்றிலெல்லாம் ஆஜராகி பெரும் பொருள்திரட்டியவர் பிரம்மநாயகம்.

கட்டவேண்டிய வருமானவரியை ஒழுங்காகக் கட்டி, மிச்சப்பட்டதைப் பத்திரமாகச் சேமித்து வைத்திருந்தார் தன் ஒரே மகனுக்காக. ஆம். வேத நாயகம் அவருக்கு ஒரே வாரிசு.

சட்டக் கல்லூரிப்படிப்பை அவர் முடித்த போது தந்தை காலமானார். மரணப் படுக்கையில் தந்தை மகனுக்குச் சொன்ன ஒரே புத்திமதி "காந்தியடிகள் சொன்னது போல் அப்பாவிகளுக்கு இலவசமாக வாதாடு" என்பதே.

தந்தையின் சொல்லை வேதமாக ஏற்றுக்கொண்ட வேதநாயகம் நீதிமன்றத்தில் தன்னை ஒரு வழக்குரைஞராகப் பதிவுசெய்து கொண்டு, வேறொரு சீனியரிடம் வேலை பார்த்து முதல் முறையாகச் சுயேச்சை வக்கீலாக அன்றுதான் மாஜிஸ்திரேட் கோர்ட்டுக்கு வந்தார். அவருக்குக் கிடைத்த முதல் குற்றாவளி ஜெயஸ்ரீ. இல்லை; சட்டப்புத்தகம் விளக்குவது போல் குற்றஞ்சாட்டப்பட்ட ஜெயஸ்ரீ.

மாலை ஐந்து மணிக்குத் தன்வீட்டில் வந்து தன்னைப் பார்க்கும்படி. ஜாமீன் கொடுத்தவர்மூலம் சொல்லிவிட்டு, வந்து சேர்ந்தார் வேதநாயகம்.

அடையாறு காந்தி நகரில் அவரது பங்களா. ஒவ்வொரு செங்கல்லாகத் தானே பார்த்து வாங்கி அவரது தந்தை கட்டிய பங்களா. காந்தி நகர் எக்ஸ்டென்ஷன் ஆரம்பமானபோது முதல் வீடு. அவர் கட்டிய வீடுதான். அழகு கொழிக்கும் அந்த வீட்டில் அவரும், அவரது மனைவி சரஸ்வதியும் மட்டுமே குடியிருந்தார்கள்.

சரஸ்வதி அவருக்கு முறைப் பெண். உண்மையிலேயே அவள் கல்வியில் சரஸ்வதி. தோற்றத்தில் மகாலட்சுமி. திருமணமாகி மூன்றாண்டுகள் ஆகின்றன. இனிமேல்தான் குழந்தை பிறக்க வேண்டும்.

வேதநாயகம் வீடு வந்துசேர்ந்ததும் அவரது மேலங்கியைக் கழட்டிவிட்டு, மஞ்சள் நீர்கொண்டு வந்து ஆரத்தி எடுத்தாள் சரஸ்வதி.

அவர் சுயேச்சையாக முதல் நாள் கோர்ட்டுக்குச் சென்று வந்தவரல்லவா? அதற்காக.

ஆரத்தி எடுத்து, கணவனுக்கு விபூதி பூசிக் குங்குமமிட்டு விட்டு, அவள் கேட்ட முதல் கேள்வி, "முதல் முதலாகக் கோர்ட்டுக்குப் போனீர்களே! யாருக்காக ஆஜரானீர்கள்?"

அவர் சொன்ன பதில்: "ஒரு விலை மகளுக்காக ஆஜராகப் போகிறேன்."

"ஐயோ, என்ன இது! போயும் போயும் ஒரு கெட்டுப்போன பெண்ணுக்காக ஆஜராகப் போகிறீர்கள்?"

"ஆமாம், கெடாதவர்களுக்கு வக்கீல் எதற்கு?"

"அதிலும் ஓர் ஒழுக்கம் கெட்ட பெண்ணுக்கா?"

"அவள் ஒழுக்கம் கெட்டவள் என்பதை யார் நிர்ணயிப்பது?"

"இல்லாமல் பிறக்குமா, அள்ளாமல் குறையுமா? காரணம் இல்லாமலா பொலிசார் பிடித்திருக்கிறார்கள்?"

"இந்நாட்டுச் சட்டத்தின்படி ஜாமீன் கொடுக்க ஆளில்லாமல் போனாலே, ஒரு நிரபராதி குற்றவாளியாகிவிட முடியும். வெள்ளைக்காரன் நம்முடைய யோக்கியதையைப் பற்றிப் போட்ட கணக்கு அது. அவன் போட்ட சட்டம் அது. ஒருவனைக் குற்றவாளியாக்குவதற்குக் காரணம் இருந்தே தீரவேண்டும் என்பதில்லை. காரணங்களைச் சிருஷ்டித்து விட முடியும்."

"அந்தப் பெண்ணைப் பற்றி எல்லா விவரங்களும் உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாது. ஆனால் ஒன்றை மட்டும் என்னால் தெரிந்து கொள்ள முடிந்தது. பத்தாயிரம் ரூபாய்க்கு நகைகள் அணிந்திருக்கும் ஒரு பெண் ஐம்பது ரூபாய்க்கு ஒரு வாலிபனை அழைத்தாள் என்று சொல்லப்பட்டபோதே. அந்த வழக்கு ஏதோ அடிப்படை இருப்பது எனக்குப் புரிந்தது."

"நகை போட்டிருப்பதால் மட்டும் ஒருத்தி தவறு செய்திருக்கமாட்டாள் என்பது என்ன நிச்சயம்?"

"செய்வாள். செய்யக் கூடும். ஆனால், அந்தத் தவறை ஐம்பது ரூபாய்க்காகச் செய்யமாட்டாள். தொகையையும் பார்த்து, தோகையையும் பார்த்த பிறகுதான் வழக்கு எனக்குப் புரிந்தது."

"நகைதான் அதைப் புரிய வைத்ததா?"

"ஆம். ஏதோ ஒரு பகைதான் அவளைச் சிக்க வைத்திருக்கிறது."

"புகைதான் உங்களுக்குத் தெரிந்திருக்கிறது. இனிமேல்தான் நெருப்புத்தான் தெரியவேண்டும்."

"சரசு, காந்தியடிகளின் எல்லா நூல்களையும் நான் படித்திருக்கிறேன். நீதிமன்றத்தில் மாட்டியிருக்கும் அவரது படமே இந்த வழக்கை என்னை எடுத்துக் கொள்ளும்படி தூண்டிற்று. உண்மை வழக்குகளைவிட, சிருஷ்டிக்கப்படும் வழக்குகளே அதிகமாக இருக்கின்றன என்று காந்தியடிகள் ஒரு முறை கூறியிருக்கிறார். அப்போதும் அவர் அரசாங்கத்தைக் குறைகூறவில்லை. அதிகாரிகளுக்கு வகுக்கப்பட்டுள்ள விதிகளையும், இடப்பட்டுள்ள கட்டளைகளையுமே அவர் குறை கூறியிருக்கிறார். அத்தகைய நிலை இந்த வழக்கிலும் இருக்கும் என்றே எனக்குத் தோன்றுகிறது."

(விளக்கு எரியும்)




# விளக்கு மட்டுமா சிவப்பு?



---

**வாரமொரு சிந்தனை**

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# சமயத்தில் சமரசம்

உலகில் வாழும் உயிர்கள் யாவும் இன்பத்தில் விருப்பமும் துன்பத்தில் வெறுப்பும் இயல்பாகக் கொள்வதைக் காண்கிறோம். இன்பம் பெறுவதற்கு உயிர்கள் முயன்று பல துறைகளில் இறங்கி உழைப்பதைக் காண்கிறோம். இக்காட்சிகளால் நாம் பெறுவதென்ன? படைப்பு நோக்கம் இன்பப்பேற்றைக் கூறிக்கொண்டு நிற்கிறது என்னும் உண்மையைப் பெறுகிறோம். உயிர்கள் துன்பக்கடல் கடந்து இன்பக்கரை ஏறுவதெப்படி? அதற்கொரு தெளிவான பாதை வேண்டாமா, அதுவே சமயம் என்னும் சிறந்த பாதை.

சமயம் என்னுஞ் சொல்லுக்குப் பலர் பலவாறு பொருள் கூறுவார்கள். அச்சொற்களின் பொருளை ஆராய்ந்து பொழுதைக் போக்கவேண்டியதில்லை. உலக வழக்கையொட்டிச் சுருங்கக் கூறின், இன்பப்பொருளாம் இறைவனை அடைவதற்கு உயிர்கள் கடைப்பிடித்து ஒழுகும் ஓர் அறவழியே சமயம் என்று கூறலாம். சமயம் என்று ஒன்று இல்லாவிடின் உலகில் அறமேது?, அன்பேது? ஆன்ம உணர்வேது? மக்களை விலங்குகளிலிருந்து பிரித்து, அவர்களை செந்நெறியில் நிறுத்தி, ஆண்டுவருவது சமயம் என்றால் அதன் சிறப்பை என்னவென்று உரைப்பது.

எல்லாருள்ளத்திலும் வீற்றிருப்பவர் ஒரு கடவுளே. எந்நாட்டவரும், எம்மொழியினரும் எவரும் எல்லாரும் "சகோதரரே" என்று எவர்க்குந் தீங்கிழையாது சமயம் கூறிய வழியில் நன்மை செய்யமுயலுவர். எல்லோரையும் ஒருமைப்படுத்தவல்லது சமயம் ஒன்றேயாகும். இத்தகைய சமயம் மக்கட்கு இன்றியமையாதது என்று சொல்லவும் வேண்டுமா?

உலகில் சில இடங்களில் சிலவேளைகளில் போருக்கும், கொலைக்கும் பிற கொடுமைகளுக்கும் சமயமும் காரணமாக நிற்பதனால் சமயம் வேண்டாம் என்று கூறுபவர்கள் உள்ளனர். சமயப்பெயரால் போரிடுவோர் சமயஞானிகள் அல்லர், அவர் சமய உண்மை, கைவரப் பெறாத மூடர்கள்; உன்மத்தர். அவர் உள்ளத்தில் உண்மை அறிவு ஏற்படுமாயின் பித்த மயக்கந்தீரப்பெற்று தமது அறியாமையை உணர்வர். சமயத்தின்பெயரால் நிகழுங் கொடுமைகளைக் களையவுஞ் சமய அறிவு அவசியமாகும்.

அன்புநெறி வந்த எந்தச் சமயக் குரவராவது தமது கொள்கையை ஏற்க மறுத்த யாரையாவது வருத்தியுள்ளனரா? அவ்வாறு வருத்துபவர் சமய குரவராகமாட்டார்.

தன்னலத்தை அறுத்துத் தனக்கும் பிறர்க்கும் வேற்றுமை இல்லை எனும் ஆன்மஞானத்தை அறிவுறுத்தும் சமயம் வேண்டாமா, இப்பொழுது உலகில் சமயஞானம் அருகிவருவதனால்தான் ஒரு நாட்டாரை மற்றொரு நாட்டார் அழித்து தாம் இன்பமடைய முயலும்நிலை காணப்படுகிறது. இன்று நாடுகளில் ஆலகாலவிடத்தைவிடப் பயங்கரமான நச்சுக்காற்றும் எமனும் அஞ்சத்தக்க கொலைக்கருவிகளும், இதைவிடவும் மோசமான பலவும் காணப்படுகின்றன. மக்களிடையே பரவியுள்ள இத்தீயவிலங்குணர்வை அகற்றுவதற்கு சமயம் வேண்டுமா?, வேண்டாமா? உலகில் ஆன்ம நேயத்தையும் சகோதர உரிமையையும் அமைதியையும் ஏற்படுத்தவல்லது சமயம் சமயமே!


சமயம் இன்றியமையாததெனில் எச்சமயத்தை கொள்வது என்னும் வினா எழாமற்போகாது. உலகிலே பல சமயங்கள் இருக்கின்றன. எச்சமயத்தை ஏற்பது? ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சமயமுண்டு என்றுகூறுவது மிகையாகாது. சமய உண்மை என்பது அவரவர் அறிவாற்றலுக்கும் அனுபவத்துக்கும் ஏற்றவாறு காணப்படுகின்றது. இவ் உண்மை உணர்ந்த பெரியோருங் கடவுள் நிலையை மக்கள் அறிவு நிலைக்கேற்ற வண்ணம் அறிவுறுத்தியுள்ளனர்.

உலகிலுள்ள எல்லாச் சமயங்களும் ஒரு கடவுளையே பலபெயரால் பல வடிவங்களாகப் போற்றிப் புகழ்கின்றன. இவ்வுணர்வோடு எச்சமயத்தை ஆராய்ந்தாலும் அச்சயத்தில் சமரச மணங்கமழ்வது காணலாம். எச்சமயம், எல்லாச் சமயங்களையும் சகோதர சமயங்களாகத் தழுவுகிறதோ, அது சமரச நோக்குடைய சன்மார்க்க சமயம் என்று போற்றப்படும். சாதி, மதம், நாடு, மொழி நிறவேற்றுமைகளைப் பாராட்டாது; எல்லா உயிர்களிடத்தும் ஒரேவித அன்புசெலுத்துமாறு மக்களைத் தூண்டுவதும், கைம்மாறு கருதாப் பணியாற்றுமாறு போதிப்பதும் தனக்கென வாழாது பிறர்க்கென வாழுமாறு அறிவுறுத்துவதும், தியாக உணர்வு நல்கும்; உயர்வு தாழ்வை ஒதுக்கும், இத்தகைய உயர்விழுமிய நோக்கங்களை உடைய சமயம் எதுவே அதுவே இன்று தேவைப்படும் சமயமாகும்.

ஜே.வி.பி.யினரினால் கொண்டுவரப்பட்ட இந்திய எல்லைதாண்டிய தடை செய்யப்பட்ட கடற்தொழிலாளர்கள் பிரச்சினைகள் தொடர்பிலான நாடாளு மன்ற ஒத்திவைப்புப் பிரேரணையில் வாதப் பிரதிவாதங்களின்போது பாராளு மன்ற உறுப்பினர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஆற்றிய உரை

# எமது நிலம் எமது மக்களுக்கே சொந்தம் எமது கடல் வளங்களும் எமது மக்களுக்கே சொந்தம்

## பாராளுமன்றில் டக்ளஸ் தேவானந்தா



**கௌரவ சபாநாயகர் அவர்களே...!**

வடபகுதி கடற்தொழிலாளர்கள் முகம் கொடுத்துவரும் பிரச்சினைகள் குறித்து அந்த மக்களின் குரலாக இந்த சபையில் நான் இன்று உரையாற்ற விரும்புகிறேன்.

முதலில் எமது கடற்தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்றத்தில் மீண்டும் கொண்டுவர இருந்தேன். அதேவேளை ஜே.வி.பி கட்சியினர் அதை ஒத்திவைப்புப் பிரேரணையாக இன்று கொண்டுவந்திருக்கின்றபோது எனது முயற்சியை இடைநிறுத்தி ஜே.வி.பி கட்சியினரால் கொண்டு வந்திருக்கும் பிரேரணைக்குப் பக்க பலமாக எனது கருத்துக்களையும் இங்கு கூற விரும்புகிறேன். அந்த வாய்ப்பைக் கொடுத்த ஜே.வி.பி.யினருக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எமது நிலம் எமது மக்களுக்கே சொந்தம். எமது கடல் வளங்களும் எமது மக்களுக்கே சொந்தம். இந்த நியாய பூர்வமான உணர்வுகளை எமது மனங்களில் இருத்தி வடபகுதி கடற்தொழிலாளர்களுக்காக நாம் நீண்டகாலமாகவே குரல் கொடுத்துவருகின்றோம். அவர்களது துயர்களை துடைப்பதற்காகவும் தேவைகளை நிவர்த்திசெய்வதற்காகவும் நாம் எமது அரசியல் பலத்திற்கு ஏற்றவகையில் உழைத்துவந்திருக்கின்றோம். முப்பது ஆண்டு காலமாக போரின் வலிகளையும், வதைகளையும் சொல்லமுடியாத துயர்களையும் சுமந்து வந்தவர்கள் எமது கடற்தொழிலாளர்கள். அழிவு யுத்தம் முடிவிற்குவந்து ஆறு ஆண்டுகள் கழிந்து விட்டநிலையிலும் இன்னமும் முழுமையான மகிழ்ச்சி அந்த மக்களிடையே ஏற்படவில்லை. இன்னமும் நிறைவேற்றப்படாத தேவைகள் குறித்த தீராத வேதனைகளையும் தேவைகளையும் எமது மக்கள் சுமந்துகொண்டிருக்கிறார்கள்.

அன்று அழிவு யுத்தம் அவர்களது சுதந்திரமாக தொழில்புரியும் உரிமைக்கு சவாலாகவும் தடையாகவும் இருந்தது. இன்று அமைதியும் சமாதானமும் தேசமெங்கும் நிலவுகின்றபோதிலும் வடபகுதி கடற்தொழிலாளர்களின் மனங்களில் மட்டும் அந்த அமைதியையும் சமாதானத்தையும் காண முடியவில்லை. இந்தியாவில் இருந்து அத்துமீறி எமது கடல் எல்லைக்குள் நுழையும் இழுவைப்படகுகளால் எமது கடற்தொழிலாளர்கள் இன்றும் சுதந்திரமாக தொழில்புரியும் உரிமையை பறிகொடுத்து நிற்கிறார்கள்.

வடமராட்சி கிழக்கு, வடமராட்சி, வலிகாமம், தீவகம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு என எமது கடற்தொழிலாளர்களின் கடல் வளங்கள் இந்திய இழுவைப்படகுகளால் சூறையாடப்பட்டு வருகின்றன. தினமும் ஆயிரத்தில் இருந்து ஆயிரத்தி ஐந்நூறு இந்திய இழுவைப் படகுகள்வரை எமது மக்களின் கடல் எல்லைப் பரப்புக்குள் அத்துமீறி நுழைகின்றன. எமது மக்களின் வாழ்வாதாரங்களை வகை தொகையின்றி வாரிச்செல்கின்றன. சொத்துக்களை சேதமாக்கி செல்கின்றன. கடல் வளங்களை அழித்தொழித்து செல்கின்றன. ஒருவாரத்தில் திங்கள், புதன், சனிக்கிழமைகளில் வடமாகாணத்தின் கடற்பிராந்தியத்தை ஆக்கிரமிக்கின்றார்கள். அப்போது, எமது வடமாகாண கடற்தொழிலாளர்களைத் தாக்கி படகுகளை சேதப்படுத்தி மீன்பிடி உபகரணங்களையும் அழித்துவிடுகின்றனர். கடலின் அடிமட்டத்தோடு அவர்கள் வாரி அள்ளுவதால், இறால், நண்டு, கணவாய், கடலட்டை சங்கு மீன்கள் வாழும் பவளப்பாறைகள் என கடலுக்கு அடியிலுள்ள அத்தனையையும் அள்ளிச்செல்வதோடு வளங்களை அழித்தும் விடுகின்றனர். இந்த நிலைமை தொடர்ந்தால் எமது கடல் பகுதியானது வளங்களற்ற பாலை வனமாக மாறிவிடக்கூடிய ஆபத்தை எதிர்கொள்ளவேண்டியிருக்கும்.

இவ்வாறு எமது கடல் எல்லைக்குள் அத்துமீறிவரும் இந்திய இழுவைப்படகுகள் நாளொன்றுக்கு எமது மக்களுக்கு சேரவேண்டிய அறுபது மில்லியன் ரூபாய் பெறுமதியான மீன்வளத்தை அள்ளிச்செல்கின்றன. எமது கடற்தொழிலாளர்கள் முகங்கொடுத்து வரும் இந்த அவலங்களுக்கு உடன் முடிவு காணப்படவேண்டும் என நான் இந்த சபையின் கவனத்திற்கும் வேறு பல சந்தர்ப்பங்களிலும் வேறு தளங்களிலும் பல தடவைகள் கொண்டு வந்திருக்கின்றேன். அதேபோன்று இன்றும் ஜே.வி.பி.யினரின் பக்கபலத்தோடு இந்த சபைக்குக் கொண்டுவருகின்றேன். அத்துமீறல்களைக் கண்காணிப்பதற்கு இலங்கை - இந்திய கடற்படைகள் உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். மேலும் கடற்படைக்கு மேலதிகமாக இந்தியாவில் இருப்பதைப்போல் கரையோர பாதுகாப்புப் படை ஒன்று இலங்கையிலும் அமைக்கப்படவேண்டும். அவர்களுக்கு உதவியாக கடற்தொழிலாளர் சங்கங்களும் சமாஜங்களும் இணைந்து கண்காணிப்புப் பணியில் ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு முன்வரவேண்டும். கரையோரப் பாதுகாப்புப் படை உருவாக்கப்பட்டால், கடற்தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், கடல் வளங்களை பாதுகாக்கவும், எல்லைதாண்டி அல்லது அத்துமீறி மீன்படியில் ஈடுபடுவோரை தடுக்கமுடியும். பாதுகாப்பற்ற கடல் பயணங்களையும் தடுக்கவும் முடியும். எமது இளைஞர்களுக்கு அதை ஒரு வேலை வாய்ப்பாகவும் பெற்றுக்கொடுக்க முடியும்.

எனவே கடற்தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுப்பதோடு கடல் எல்லை தாண்டி அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுகின்றவர்களை தடுப்பதற்கு இந்திய மற்றும் இலங்கையின் மத்திய அரசுகளே ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளை நடத்தி நிரந்தர தீர்வைக் காணவேண்டும். வாழ்வாதாரமாகவும், உணர்வுபூர்வமாகவும் கையாளப்பட வேண்டிய இந்தப் பிரச்சினையை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு பார்க்காமல் இரண்டு அரசுகளும் ஒரு முடிவை எடுக்க வேண்டும். அவ்வாறான முடிவை நடைமுறைப் படுத்துவதற்கும் மத்திய அரசுகளே ஈடுபடவேண்டும். பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளுக்கு கடற்படைகள் எவ்விதமான கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனவோ அதுபோலவே எல்லை தாண்டும் அத்துமீறலையும் கடுமையாக கண்காணிப்பது அவசியமாகும்.

யுத்தத்தினால் தொழில் உபகரணங்களை இழந்தவர்களுக்கு இன்னமும் தொழில் உபகரணங்கள் வழங்கப்படவேண்டியுள்ளது. முன்னர் மண்ணெண்ணெய் மானியம் வழங்கப்பட்டது. பின்னர் மண்ணெண்ணெய்க்குப் பதிலாக வலைகள் வழங்கப்பட்டது. மண்ணெண்ணெய் மானியமாக வழங்கப்பட்ட போது பயனாளிகள் தெரிவுபோதிய அளவு திருப்திகரமாக இருக்கவில்லை. அதனால் பலபேர் பாதிக்கப்பட்டுள்ளார். இன்று மண்ணெண்ணெய்க்குப் பதிலாக வலைகள் மானியமாக வழங்கப்படுகின்றபோதும் அதே குறைபாடுகள் தொடர்கின்றன. அந்தக் குறைபாட்டை திருப்திதரும் வகையில் திருத்திக்கொள்வது அவசியமாகும். கடற்தொழில் திணைக்களங்களில் இன்னமும் மண்ணெண்ணெய் மானியத்திற்கு பதிவுசெய்யப்படாமல் இருப்பவர்கள் பதிவு செய்யப்படவும், வலைகள் வழங்கப்படுவதற்கும், மண்ணெண்ணெய் வழங்கப்படுவதற்கும் அனைத்து கடற்தொழிலாளர்களையும் உள்ளடக்கும்விதமாக முறையான பதிவுகள் செய்யப்படவும் வேண்டும்.

இன்னமும் மீள உரியவர்களிடம் ஒப்படைக்கப்படாமல் இருக்கும் எமது கடற்தொழிலாளர்களின் சொந்த வாழ்விடங்கள் மீள பெற்றுக் கொடுக்கப்படவேண்டும். மேலும் ஏற்கனவே இருந்து சிதைவடைந்துள்ள இறங்குதுறைகள், படகுத்துறைகள் புனரமைக்கப்படவேண்டும். தேவை மற்றும் பொருத்தமான காரணங்களை கவனத்தில் எடுத்து புதிய படகுத்துறைகள் அமைக்கப்பட வேண்டும். வலைகளை உலர்த்தவும், திருத்தங்களைச் செய்யவும், ஓய்வெடுக்கவும் பொருத்தமான இடங்களில் மண்டபங்கள் அமைக்கப்பட வேண்டும். படகுகளை தயாரிக்க, பழுதுபார்க்க தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு, வேலைவாய்ப்பற்றுள்ள இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். கடல் அரிப்பைத் தடுக்கவும், மழைநீரை கடலுக்குவிடாமல் தடுக்கவும் பொருத்தமான இடங்களை தெரிவுசெய்து கற்களால் அணைகளைக் கட்டவேண்டும். அதேவேளை வான் தோண்டும் பணிகளையும் முன்னெடுப்பதோடு, அதற்குரிய கட்டுக்களையும் கட்டிக் கொடுக்கவேண்டும். மீன்களை பதப்படுத்தவும், சேமித்துவைக்கவும், ரின் மீன் தொழிற்சாலைகளை நிறுவவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இரணைமாதா தீவில் அங்கு வாழ்ந்த மக்களை அங்கேயே மீளக்குடியேற்றம் செய்யவேண்டும். அத்தோடு அங்கு கடற்தொழிலாளர்கள் ஓய்வெடுக்கவும், வலைகளை உலர்த்தவும் மீண்டும் அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

கௌரவ சபாநாயகர் அவர்களே...!

தமிழக மக்களுக்கும் ஈழத்தமிழ் மக்களுக்கும் இடையில் இருப்பது தொப்புழ்க் கொடி உறவு. இலங்கை, இந்திய நட்புறவு என்பது அயலுலக நேச நாடுகளுக்கிடையிலான அரசியல் உறவு. இவைகள் பாதுகாக்கப்படவேண்டும். மேலும் வளர்த்தெடுக்கப்படவேண்டும். இதில் நாம் என்றும் உறுதியாக இருப்பவர்கள். இத்தகைய காரணங்களுக்காக எமது கடற்தொழிலாளர்கள் எழுப்பிவருகின்ற நீதியான கோரிக்கைகளின் குரல்களுக்கு நாம் தீர்வுகாணாமல் இருந்துவிட முடியாது. அதேவேளை இந்திய அத்துமீறிய கடற்தொழிலாளர்களால் அல்லது இந்திய எல்லை தாண்டிவந்த கடற்தொழிலாளர்களால் வடபகுதி கடற்தொழிலாளர்கள் தாக்கப்படும் போதும், படகுகள், வலைகள் சேதமாக்கப் படும்போதும் பாதிக்கப்படும் எமது தொழிலாளர்களுக்கு உரிய நஸ்டஈடுகள் வழங்கப்படவேண்டும். அத்துமீறும் இந்திய மீனவர்கள் வருகைதரும் நாட்களில் தொழிலுக்குச் செல்லமுடியாது முடக்கப்படும் கடற் தொழிலாளர்களுக்கு நிவாரணங்களும் வழங்கப்படவேண்டும்.

நான் கடந்த காலங்களில் எமது கடற்தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வுகாண எடுத்துவந்த முயற்சிகளை இந்த சபையில் இருக்கும் அமைச்சர்கள், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இந்தியா சென்று முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் அவர்களோடு இது குறித்து பேசியிருக்கின்றேன். கச்சதீவு சென்று இரண்டு ஆண்டுகளாக இலங்கை இந்திய கடற்தொழிலாளர்கள் மத்தியில் இணக்கப் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றேன். இலங்கை அரசோடும், அதற்கு பொறுப்பான அமைச்சர்களோடும் பேசியிருக்கின்றேன். எமது அரசியல் பலத்திற்கு ஏற்றவாறு கடற்தொழிலாளர்களின் தேவைகளை நிறைவேற்றியும் கொடுத்திருக்கின்றேன். யுத்தகாலகட்டங்களில் பாதுகாப்புக் கெடுபிடிகளால் கடலுக்குள் இறங்கி தொழில் செய்யமுடியாத அன்றைய காலகட்டங்களில் அன்றைய அரசுடன் பேசி அவர்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுத்திருந்தேன். உயர் பாதுகாப்பு வலயங்களாக இருந்த கடற்தொழிலாளர்களின் குடியிருப்பு நிலங்களில் கணிசமானவை மீட்டுக்கொடுக்கப்பட்டிருக்கின்றது. யுத்தம் காரணமாக தடைசெய்யப்பட்ட கடல் பிரதேசங்களில் தொழில்புரிவதற்கான உரிமைகள் பெற்றுக்கொடுத்துள்ளேன்.

ஆனாலும் முப்பது வருட கால யுத்தத்தின் சிதைவுகளில் இருந்து மீண்டெழுந்து வரும் நாம் தொடர் முயற்சிகளை எடுப்பதன் ஊடாகவே எந்த பிரச்சினைகளுக்கும் நிரந்தர தீர்வை கண்டுவிடமுடியும்.

இன்று அரியதொரு காலம் கனிந்திருக்கிறது. மாகாணத்தில் அரசியல் பலத்தோடு ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் மத்தியிலும் அரசியல் பலத்தோடு இணக்க அரசியல் உறவுகளை கொண்டிருக்கிறார்கள்.

தொலைதூரநோக்கோடு நாம் என்றோ விதைத்துவிட்ட தீர்க்கதரிசனங்கள் நம்பிக்கையின் விருட்சங்களாக இன்று நிமிரத்தொடங்கி விட்டன. ஆட்சியில் பங்கெடுப்பது அருவருப்பானது என்ற அவதூறுகளில் இருந்து வரலாறு எமக்கு இன்று மீட்சி தந்திருக்கிறது. ஏன் இவ்வாறு கூறுகின்றேன் என்றால் இன்று மத்திய அரசுடன் இணங்கியும், உறவாடியும் அரசியல் செய்கின்ற பாதையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பயணிக்கின்றது. இதற்கான பாதையை தூற்றல்களுக்கும், அவதூறுகளுக்கும் முகங்கொடுத்து ஏற்படுத்தியவர்கள் நாங்கள்தான். இன்றைய அரசியல் யதார்த்தம் எங்கள் நியாயத்தை ஏற்றுக் கொள்ளச் செய்திருக்கின்றது.

பெரும் காட்டாற்று வெள்ளங்களில் எதிர் நீச்சலிட்டு நாம் வகுத்திருந்த பாதையே எமது மக்களின் விடியலை வாகைசூடும் வழிமுறை என்பது இன்று நிதர்சனமாகிவிட்டது. எமது வழிமுறையை இன்று ஏற்று வந்திருப்பவர்கள் எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணும் பொறிமுறைகளையும் கொண்டிருக்கவேண்டும். இன்று நாடி வந்திருக்கும் எமது வழிமுறை மீது அவர்களுக்கும் பற்றுறுதி உண்டென்றால் அதை நடைமுறையிலும் மெய்ப்பித்து காட்டவேண்டும்.

தாம் பெற்றிருக்கும் அரசியல் பலத்தை எமது மக்களின் சகல பிரச்சினைகளையும் தீர்ப்பதற்காக பயன்படுத்துவார்களேயானால் அதை நாம் எமது மக்களின் சார்பாக மகிழ்ச்சியுடன் வரவேற்போம். ஆனாலும், ஆட்சி மாற்றம் நடந்து நூறு நாட்கள் வேலைத்திட்டத்தை அரசு அறிவித்திருந்த போது எமது கடற்றொழிலாளர்கள் அனுபவித்து வரும் துயரங்களில் பலவற்றை துடைப்பதற்கான வாய்ப்பு கிடைத்திருந்தது. ஆனாலும், அந்த வாய்ப்பை பெற்றவர்கள் நூறு நாட்கள் வேலைத்திட்டத்தை தமது வீட்டு வாசலுக்கு ஏன் கொண்டு வந்து சேர்க்கவில்லை என்ற குரல்கள் கடற்றொழிலாளர் மத்தியில் இருந்து எழத்தொடங்கியுள்ளன.

மத்தியிலும் மாகாணத்திலும் அரசியல் பலத்தோடு ஆட்சி அதிகாரத்தை கொண்டிருப்பவர்கள் தமது துயர்களை ஏன் துடைக்கவில்லை என்ற கேள்விகள் எமது மக்கள் மத்தியில் இருந்து எழுத்தொடங்கிவிட்டன. நீதி கேட்டெழுந்து எமது கடற்றொழிலாளர்கள் வடக்கிலே போராட்டங்களை நடத்திவருகின்றார்கள். வட பகுதி கடற்தொழிலாளர்களின் நீதியான போராட்டங்களும் அதற்கான கோரிக்கைகளும் இந்திய அரசுக்கோ அன்றி தமிழக மக்களுக்கோ எதிரானவை அல்ல.

மாறாக தமக்கு நீதி வேண்டும் என்றும், சுமக்கும் துயர்களில் இருந்து விடுபட்டு தாம் சுதந்திரமாக தொழில் புரியவேண்டும் என்றுமே அவர்கள் நீதிகேட்டு போராடி வருகின்றார்கள். வடபகுதி கடற்றொழிலாளர்களின் கோரிக்கைகளை இந்த நாடாளுமன்றம் கவனத்தில் எடுக்க வேண்டும். அரசாங்கம் அதற்கு உடன் நடவடிக்கை எடுத்து ஆற்றவேண்டிய கடமைகளை துரிதமாக முன்னெடுக்க வேண்டும் என்பதை எமது வடபகுதி கடற்றொழிலாளர்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

இதேவேளை வடக்கு கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக வகுக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள மாவட்டங்களில் ஒன்றிணைந்த கரையோர அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். இத்திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியும் அரசாங்கமும் 35 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க முன்வந்திருந்தது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதன் ஊடாக வடமாகாணத்தில் 255 கரையோரங்களைச் சார்ந்த கிராம சேவைப் பிரிவுகளில் பௌதீக வசதிகளான வீதிகள், சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகள், குடிநீர் விநியோகம், மீனவர் ஓய்வு அறைகள் என்பவற்றை அமைக்கமுடியும். 2000 இளைஞர், யுவதிகளுக்கு பொருத்தமான வாழ்வாதாரம் மற்றும் செயற்திட்ட மேம்பாட்டு அபிவிருத்தி பயிற்சிகளை வழங்கமுடியும். இதனால் 255 கிராமசேவையாளர் பிரிவுகளில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும்.

சுமார் 5000 பெண் குடும்ப தலைவிகளாக உள்ள குடும்பங்களுக்கு வாழ்வாதாரம் கிடைக்கப்பெறும். குளிரூட்டல் தொழிற்சாலைகள் 10ஐ தொழிற்பட செய்வதோடு, 20 ஏல விற்பனை செய்யும் மண்டபங்களையும் அமைக்க முடியும். படகுகள் நிறுத்தும் 3 துறைகளையும், உவர்நீரைத் தடுக்கும் 20 கரையோர அணைக்கட்டுக்களையும் கட்டியமைக்கலாம். கடல் அட்டை பெருக்கத்தை மன்னாரில் ஆரம்பிக்க பாரிய திட்டத்தையும் நடைமுறைப்படுத்தலாம். இரணைமடுவில் பெரியளவிலான விலங்கு உற்பத்தி நிலையத்தையும் உருவாக்கலாம்.

20 கிராமங்களில் சமூக அடிப்படையிலான இலாபம் ஈட்டக்கூடிய உல்லாசப் பயணிகளின் வருகையை ஊக்கவிக்கலாம். கிராமங்களுக்கு அண்மையில் படகுகளைக் கொண்டு வருவதற்கான 8 கால்வாய்களை உருவாக்கலாம். நந்திக் கடல் ஏரியை புனரமைப்புச்செய்து, சுமார் 2500 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தலாம். என்பதையும் வட மாகாண கடற்தொழிலாளர்களின் சார்பாக உயரிய இந்தச் சபையில் கோரிக்கைகளாக முன்வைக்கின்றேன்.

## மனதுக்குள் சிரிப்பதற்கு




**நீதிபதி:** நீ கோழி திருடியதாக உன்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. வக்கீல் ஒருவரை வைத்து உன் நியாயத்தைக்கூறு.

**திருடன்:** வேண்டாம் ஐயா.

**நீதிபதி :** ஏன்...?

**திருடன்:** கோழியின் பெறுமதிக்கு மேல் அவருக்குக் கொடுக்கவேண்டும்.



**வக்கீல்:** உனக்குத் திருமணமாகிவிட்டதா...?

**குற்றவாளி:** ஆகிவிட்டது.

**வக்கீல்:** யாரைத் திருமணம் செய்து கொண்டாய்...?

**குற்றவாளி:** ஓர் ஆணை.

**வக்கீல்:** ஆணில்லாமல் பெண்ணையா திருமணம் செய்து கொள்வார்கள்...?


**குற்றவாளி:** என் அண்ணா செய்து கொண்டிருக்கிறானே...!



**நண்பன் 1:** விக்கல் வருது.

**நண்பன் 2:** வந்தால் கூப்பிட்டு இருக்கச் செல்லன்.

**நண்பன் 2:** நிக்கவே மாட்டேன். எண்டுது எப்பிடி இருக்கச் சொல்லுறது.




**சிறுமி:** புது ரீச்சருக்கு ஒண்டுமே தெரியாதம்மா.

**அம்மா:** ஏன் பிள்ள...?

**சிறுமி:** இரண்டும் இரண்டும் என்ன எண்டு என்னட்ட கேக்கிறா.

## யூடியூப் பகிர்வு: குறும்படம்

# பரிதாப 'செல்'ல மனிதர்கள்!



வயிறார சாப்பிடுகிறார்களோ இல்லையோ, வாய்நிறைய பேச, பார்க்க, படிக்க, செல்ஃபிக்க இன்று செல்போன்கள் வந்துவிட்டன. காலாற நடக்கிறார்களோ இல்லையோ... காது கிழிய செல்போன்களில் எந்நேரமும் பேசிக்கொண்டேயிருக்கும் மனிதர்களை அங்கங்கே பார்க்காமல் இருக்க முடிவதில்லை.



பெரியவர்கள் என்றில்லை, குழந்தைகள்கூட இந்த மாயமந்திரத்தில் சிக்கிக்கொண்டன. இந்தப் பிரச்சினை எப்போதாவது என்றால் பரவாயில்லை. சூரியன் உதிக்கும் முன்பே ஆரம்பித்துவிடுகிறது. நள்ளிரவு வரை நம்மை' உண்டு இல்லையென்று செய்துவிடுகிறது.

சரி, பரபரப்பிலிருந்து தப்பித்து ஓர் இயற்கையின் எழிலான சூழ்நிலைக்குச் சென்று தியானிக்கலாம் என்றால், அங்கேயும் ஊரே கேட்பதுபோல செல்போன் உரையாடல். ஒரு விழாவின் சுவாரஸ்யத்தைக்கூட உருப்படியாக அனுபவிக்கமுடியாது, ஒரு விளையாட்டின் வெற்றியைக்கூட பகிர்ந்துகொள்ளமுடியாது, நண்பர்கள் கூடி சந்தித்துக்கொள்ளும் ஓர் அழகான சந்திப்புகூட முழுமையாக அமைந்துவிடாது, அவ்வளவு ஏன்? கணவன் - மனைவி இக்காலத்தில் அரிதாக சந்தித்துக்கொள்ளும் படுக்கையில்கூட நிம்மதி கிடையாது... செல்போனின் அத்தியாவசிய பயன்பாடுகள் கூட நமக்கு மறந்துவிட்டது. யதார்த்தமாக எதிரெதிரே உள்ள மனிதர்களிடத்தில்கூட இடைஞ்சலாக கள்ளிச்செடி களாக இந்த செல்போன்கள் என்பதை 'ஐ ஃபர்கெட் மை செல்போன்' என்ற இந்தக் குறும்படத்தில் பொட்டில் அடித்ததுபோல் கூறியுள்ளார் இயக்குநர் மைல்ஸ் க்ராஃ போர்ட்.

மையக் கதாபாத்திரமாக சார்லேனே டெகுஸ்மேன் உள்ளிட்டோர் பலர் பங்கேற்றுள்ள இக்குறும் படத்தில்தான் நாம் சிந்திக்கத்தான் எவ்வளவு விஷயங்கள்... பாவம் மனிதர்கள்... செல்போன்களின் ஆதிக்கத்தில்..!

## அச்சத்தின் எதிரொலியா

### அரசியல் கைதிகளின் ஆயுள் சிறை

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மறுதுருவத்தில் அந்த வன்முறைப் பயணங்கள் எல்லைமீறி வக்கிரமடைந்தது. தமிழ் தரப்புக்களஇின் தவறு என்று வாதிடவும் இடமுண்டு. இவையெல்லாம் நடந்து முடிந்தவை. இனவாதம் இலங்கையில் தலை தூக்கி இனங்களுக்கிடையில் ஏற்பட்ட அச்சப்பாடுகளே இதற்கெல்லாம் அடிப்படை.

மீண்டும் அச்சப்பாடுகள் தேசிய அரசுக்குள் தலைதூக்குமானால் மீண்டும் முரண்பாடுகளே முடிவாகி விடும். ஆகவே இதை தேசிய அரசும் நிதானமாகக் கையாளவேண்டும். அத்துடன் தமிழ் தரப்புக்களும் நிதானமாகக் கையாள வேண்டும். அரசியல் கைதிகளை விடுப்பதனால் மீண்டும் ஒன்றிணைவுகள் ஏற்படக்கூடும். ஒருமித்து தமிழ் தரப்புகள் மீண்டும் போராட்டங்களை வலுப் படுத்தக்கூடும் என்கின்ற அச்சப்பாடுகள் அரசுக்கு இருக்குமாயின் அதற்கான அரசியல் உத்தரவாதங்களை தமிழ் பிரதிநிதிகள் வழங்கியே தீரவேண்டும். அரசியல் கைதிகளாக இருப்பவர்கள் யார், யார்? அவர்கள் எந்த மட்டங்களில் கைது செய்யப்பட்டனர். போராட்ட முடிவுக்குப் பின்னர் மீண்டுமொரு வன்முறை வெடிக்காது இலங்கையில் பாதுகாக்கப்பட்டிருப்பது இவ்வாறான அரசியல் கைதிகள் சிறை அடைக்கப்பட்டதாலேயே. இவர்களை வெளியில் விடும்போது மீண்டும் பலமான அமைப்புக்களாக வலுப்பெறலாம் எனும் கருத்துக்கள் சிங்களத் தலைமைகளிடத்தில் இரகசிய கருத்துப் பரிமாற்றங்களாக உலாவருகின்றன. அதுவே உண்மை. இதற்கு தீர்வைக் காணவேண்டும் தமிழ் பிரதிநிதிகள். நவம்பர் 7ஆம் திகதி அரசியல் கைதிகள் தொடர்பான முடிவுகளை வெளியிடுவதாக ஜனாதிபதி சம்பந்தருக்கு உறுதியளித்துள்ளார். இங்கும் நவம்பர் 7ஆம் திகதி அரசியல் கைதிகளை விடுவிப்பது என்ற முடிவினை வழங்கவில்லை.

இதுதொடர்பாக முடிவெடுக்கப்படும் என்றே கூறுகின்றார். அமைச்சரவையின் இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன கருத்து வெளியிடும்போது, அரசியல் கைதிகள் விரைவில் நீதிமன்ற நடவடிக்கைக்குள் உள்வாங்கப்பட்டு "குற்ற மற்றவர்கள்" விடுவிக் கப்படுவார்கள் என்று. பாருங்கள், பத்திரமாக வார்த்தைகளை விடுகின்றார்கள். அலை மோதும் போராட்டங்களுக்காக அரசியல் கைதிகள் ஒரு சிலருக்கான விடுதலைகள் விரைவில் இடம்பெற இருக்கின்றன.

ஆனால் ஒட்டுமொத்த அரசியல் கைதிகளும் விடுவிக்கப்படுவது இல்லை எனும் தொனி இதற்குள் மறைந்திருக்கின்றது. குற்றமற்றவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்கின்றார் ராஜித. அப்படியானால், குற்ற மற்றவர்களை ஏன் இதுவரை சிறையடைத்தீர்கள்? குற்றவாளிகளுக்கு இதுவரை வழங்கிய தண்டனைகளின் முடிவு என்ன? இவையெல்லாம் மீண்டும் இனவாதத்தை வரவழைக்கும். சிங்கள தேசியத்தின் சீண்டும் கருத்துக்களாகும். ஆகவே எது எப்படியமைந்தாலும் இலங்கைத் திருநாட்டில் தமிழர் தலைவிதி மாறப்போவதில்லை என்பது திண்ணமாகின்றது.


அன்றுதொட்டு இன்று வரையும் தேர்தல்களில் இருதுவருங்களில் தமிழ் பிரதிநிதிகள் பிரசாரம் செய்து வென்றதுதான் கண்டமிச்சமாச்சு,

ஒன்று சிங்கள தலைமைகள் நம்பிக்கைக்குரியவர்கள் இணக்க அரசியல் மூலம் தமிழருக்கான தீர்வை வென்றெடுப்போம் தமிழர் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்போம் என்றுகூறி தேர்தலில் ஒருபுறம் வென்றார்கள் மறுபுறத்தில் எதிர்ப்பு அரசியலை மேடைகளில் எக்காளமிட்டு வென்றார்கள். வென்றவர்கள் வென்றார்கள். நின்றவர்கள் நின்றார்கள். நின்றவர்கள் அப்பாவித் தமிழ் மக்கள். வென்றவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர். நடந்த முடிந்தவைகளைப் பேசி நாட்களைக் கடத்தாது நடக்க இருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வையேனும் கண்டுகொடுங்கள்.

முரண்பாட்டை முற்றவிடாது சிங்கள தலைமைகளுக்குள் இருக்கின்ற அச்சப்பாடுகளை நிவர்த்திசெய்து முழுமனதோடு தேசிய அரசு தொழிற்பட வழிசெய்யுங்கள். ஏட்டிக்குப் போட்டியாக எதிர்வாதம்பேசி இருக்கின்ற இணக்கப்பாட்டையும் குறைக்காதீர்கள். தீர்வு என்பதற்கப்பால் அடிப்படைத் தேவையான இன்று மிளர்கின்ற அரசியல் கைதிகளுக்கான விடுவிப்பு, மீள்குடியேற்றம் என்பவற்றில் வெற்றிகாணுங்கள். 2016இல் தீர்வு என்றீர்கள். இப்போது அது நடக்காது என்பது தெளிவாகத் தெரிகின்றது. இதையேனும் செய்யுங்கள். இருக்கின்ற மக்கள் நம்பிக்கையை கனம்பண்ண.

# வாரமொரு காரம்

## பொறுப்பற்ற அதிபர்களால் வெறுப்படையும் பெற்றோர்கள்



### அதிபரின் படத்தால் அலங்கரிக்கப்படும் குடாநாட்டு பாடசாலை ஆண்டு விழாக்கள்!

**யாழ்** மாவட்டத்தில் அண்மைக் காலங்களாக பல பாடசாலைகளில் ஏட்டிக்குப் போட்டியாக ஆண்டு விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றது. இது அதிபர் உட்பட பாடசாலைச் சமூகங்களின் பெருமையை பறைசாற்றுகின்ற அர்த்தமற்ற ஆடம்பர நிகழ்வுகளாக மாறிவருகின்றது. மாணவர்களிற்கு பாடசாலைகளின் ஆண்டுவிழாக்கள் பற்றிய உணர்வுகளை ஊட்ட வேண்டியது கட்டாய தேவைதான். அதற்காக பெருந்தொகையான பணத்தை பெற்றோரிடம் இருந்து அறவிட்டு மூன்று நான்கு நாட்கள் மாணவர்களை அனாதரவாக அலையவிட்டு கற்றல் செயற்பாட்டிற்குத் தடைபோட்டு பிரமாண்டமாக ஏன் இதை செய்ய வேண்டும்...? என்பதுதான் இன்று எழுந்துள்ள கேள்வியாகும்.

இடைநிலை உயர்தர பாடசாலை மாணவர்கள் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பல சீர்கேடுகளிற்கு உட்படும் சந்தர்ப்பங்கள் எதுவும் பாடசாலைச் சமூகத்திற்கு தெரியாதா...? “அதிபரின் படத்தை பெரிதாக்கி ஊர்தியில் கட்டி உலாவரவேண்டும்” எனும் சிறு சிந்தனை நோக்கமுள்ள அதிபர்களிற்கு மாணவர்களின் சீர் கேடு தொடர்பான பொதுநோக்கம் எங்கே புரியப்போகிறது. ஆண்டு விழாவிற்கு பாடசாலை ஸ்தாபகரை நினைவுகூறுவதுதானே முறை. அதிபரின் படத்தை பெரிதாக்கி ஊர்தியில் கொண்டு செல்ல இது என்ன அதிபரிற்கான அரசியல் பிரசாரமா...?

இது ஒருபுறமிருக்க, மறுபுறத்தில் பாடசாலை அதிபர்கள் வியாபார நிறுவனங்களை பாட சாலைக்குள் விட்டு மாணவர்களை ஊசுப்பேற்றி பெற்றோரிடம் பணம் பறிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர். “விரும்பினால் தெரிவு செய்யுங்கள் விரும்பாவிட்டால் விடுங்கள்.” எவரையும் நாம் கட்டாயப்படுத்த வில்லையே என இங்கு வாதிடமுடியாது. சிறுபிள்ளைகளிற்கு ஆசைகாட்டப்படும்போது அது அடம்பிடிப்பாகவே மாற்றம் பெறும். அதுவும் ஒரு துருவத்தில் கட்டாயப்படுத்தல்தான்.

வங்கிகள் தமது இலக்குகளை அடைவதற்காக பரிசில் வழங்கும் ஆசைகளை பாடசாலை மாணவர் களிற்குக் காட்டி கணக்குத் திறக்கும்படி வற்புறுத்துகின்றனர். இதற்கு அதிபர்களும் ஒத்துழைப்பு வழங்குகின்றனர். காரணம் தெரியவில்லை. இதனால் திட்மிட்ட சேமிப்புக்கப்பால் சிறுபிள்ளைகளின் மனநிலைகள் பாதிப்படையக்கூடாது என்பதற்காக பெற்றோரும் இதற்கு ஆமோதிக்கவேண்டியுள்ளது. இதனால் அர்த்தமற்ற முறையில் ஆங்காங்கே சேமிப்பின்றி கணக்குகள் திறக்கப்பட்டு குடும்ப செலவீனம் வீண்விரயமாகின்றது. யாரோ ஒரு வங்கி முகாமையாளர் பதவியுயர்வு பெற யாரோ பாதிக்கப்படும் இச்செயற்பாடுகள் தொடர்பாக கல்வி அதிகாரிகள்கூடக் கவனமெடுக்க மாட்டார்களா...? குறிப்பாக சிறு பிள்ளைகள் கற்கும் பாடசாலை களிற்குள் வெளி உறுப்பினர்களை ஊசலாட அனுமதிக்கமுடியாது. இதை கடுமையாக நின்று கட்டுப்படுத்த வேண்டும்.

அதிகாரிகளால்கூட தற்போது பிரபல பாடசாலை அதிபர்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலையல்லவா உருவாகி வருகின்றது. (இதற்குக்காரணங்கள் பல.) உதாரணமாக பாடசாலை அனுமதிக்கட்டணத்தை இத்தனை பேர் கத்தியும் நிறுத்தமுடியவில்லையே. அவ்வாறிருக்கும்போது இதை எப்படி அதிகாரிகளால் கட்டுப்படுத்த முடியும். ஆகவே தற்போது யாழ். மாவட்ட நீதித்துறை ஓரளவு சீராக இயங்கிவருவதால் இது தொடர்பான விண்ணப்பங்களை நீதித்துறையிடம் விடுகின்றோம். வாரமொரு காரம் விடும் பொதுமக்கள்சார் விண்ணப்பமிது.

**வெண்கட்டியன்**

# இந்தவாரம் உங்கள் பலன்

(22.10.2015 தொடக்கம் 28.10.2015 வரை)

### மேடம்

நண்பர்களின் சுபகாரிய விசயங்களுக்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். கணவன் – மனைவி உறவுகளில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்து ஒற்றமையுடன் இருப்பார்கள். கணவன் – மனைவியின் உறவுகள் சுமாராகக் காணப்படும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பாராத ஆதாயங்கள் உண்டாகும். குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் சற்றுக் குறையும். காதல் விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல தகவல்கள் வந்து சேரும். வெகுநாட்களாகத் தடைப்பட்டுவந்த திருமண் காரியங்கள் நிறைவேற வாய்ப்பு உள்ள காலமாகும். நாட்பட்ட வராத கடன்கொடுத்து இருந்த பணம் திரும்ப கைக்கு வந்துசேரும். செய்யாத குற்றங்களுக்காகப் பழிச்சொல் ஏற்பட இருப்பதால் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது.

### இடபம்

புதிய நண்பர்களின் சேர்க்கையால் ஆதாயம் உண்டு. குலதெய்வவழிபாடு செய்துவருவீர்கள். கணவன் – மனைவி உறவு–களில் சற்று எச்சரிக்கையுடன் முன்கோபத்தை தவிர்த்து இருப்பது நல்லதாகும். வெகுகாலமாக விட்டுப்போன குலதெய்வ வழிபாடு செய்வீர்கள். அரசு வழக்கு சம்பந்தமான விசயங்களில் சாதகமான தீர்ப்புகள் கிடைப்பதற்கு இன்னும் சற்று காலதாமதங்கள் ஏற்படலாம். வெளிநாட்டில் வசிப்பவர்கள். வரவேண்டிய கடன்கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். காதல் சம்பந்தமாக நல்ல செய்திவரும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### மிதுனம்

குடும்பத்தில் தடைப்பட்ட திருமண காரியங்களில் நண்பர்களின் உதவியால் நடைபெறலாம். அரசியல்வாதிகளால் ஆதாயம் இல்லை. பிள்ளைகளால் பொருட்செலவுகளும் மனநிம்மதியும் குறைய இருப்பதால் மிகுந்த எச்சரிக்கையுடன் இருத்தல் நல்லது. வெளிநாடு சென்றுவருவதற்கான புதிய முயற்சிகளில் நல்ல செய்திகள் கிடைக்கும். தேவையற்ற மனச்சஞ்சலம் தவிர்த்து ஆலயங்களுக்குச் சென்றுவருவது நல்லது. ஒரு சிலருக்குப் புதிய வீடு மாற்றம் ஏற்படலாம். இரும்பு, இயந்திரம், இரசாயன சம்பந்தமான பொருட்களின் வியாபாரிகள், பழைய இரும்பு பொருள் வியாபாரிகள், பலசரக்கு போன்ற வியாபாரிகள், ஆகியோர்கள் நல்ல பலனை அடைவார்கள்.

### கடகம்

வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் நல்ல தகவல்களை எதிர்பார்க்கலாம். தொலைதூரப் பயணங்கள்மூலம் எதிர்பார்த்து இருந்தவர்களை சந்தித்து அவர்களால் ஆதாயம் அடைவீர்கள். நாட்பட்ட வரவேண்டிய பணம் கைக்கு வந்துசேரும். பூஜைப்பொருள் வியாபாரிகள், தாய், சேய் நல விடுதிகளைச் சார்ந்தவர்கள், உப்பு, உரவியாபாரிகள், மற்றும் திரவ சம்பந்தமான பொருட்களின் வியாபாரிகள் ஆகியோர்கள் நற்பலன்களை அடைவார்கள். புதிய நண்பர்களின் வீண் பிரச்சினைகள் ஏற்படலாம். குழந்தைகளுக்காகத் திடீர் மருத்துவச் செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பணப்புழக்கம் சுமாராகக் காணப்படும்.

### சிங்கம்

கணவன் – மனைவி உறவுகளில் சிற்சில கருத்து வேறுபாடுகள் வந்துவிலகும். உற்றார், உறவினர்களின் வரவால் மனமகிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டாகும். காதல் விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேரும். பொதுநலத் தொண்டுகளில் ஈடுபட்டு நற்பெயரும், மனநிம்மதியும் அடைவீர்கள், தீர்த்த யாத்திரை மற்றும் குலதெய்வ வழிபாடு செய்துவர முயற்சிப்பீர்கள். சுபகாரிய சம்பந்தமான முயற்சிகளில் ஈடுபட வாய்ப்பு உள்ளது. பழுதுபட்ட வீடு மற்றும் வாகனங்களைப் பழுதுபார்ப்பதன்மூலமாக பொருட்செலவுகள் உண்டாகும். சொத்து சம்பந்தமான வழக்கு விசயங்களில் நல்ல தகவல்கள் வந்துசேரும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

### கன்னி

விட்டுப்போன பழைய உறவு–கள் மீண்டும் ஒன்றுசேர வாய்ப்பு உள்ள காலமாகும். புதிய கடன்வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள். உடல்நிலையில் சுரம் மற்றும் உஷ்ண சம்பந்தமாகிய பிணிகள் வந்துபோகலாம். வங்கிகளில் இருந்து நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் கைவந்துசேரும். மற்றவர்களின் காரியங்களில் அநாவசியமாகத் தலையிட்டு மனநிம்மதியை இழக்காதீர்கள். வீடு மற்றும் வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்காகப் புதிய கடன்களை வாங்க முயற்சிப்பீர்கள். பொருளாதாரத்தில் இருந்துவந்த நெருக்கடிகள் மாறி ஓரளவு முன்னேற்றம் காணப்படும். தேவையற்ற மனச்சஞ்சலம் தவிர்த்தல் நல்லதாகும்.

### துலாம்

கணவன் – மனைவி உறவுகளில் இருந்துவந்த மனக்கசப்புகள் தீர்ந்து ஒற்றுமை உண்டாகும். புதிய ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் வாங்குவதன்மூலம் பொருட்செலவுகள் உண்டாகலாம். உத்தியோகத் துறையினர்கள் மேலதிகாரிகளிடம் மிகுந்த கவனமுடன் பணியாற்றுதல் நல்லது. உத்தியோகத்தில் வெகுகாலமாக எதிர்பார்த்து இருந்த பதவி உயர்வுகள் மற்றும் சம்பள உயர்வுகள் கிடைக்கக்கூடிய காலமாகும். அண்டை அயலார்களிடம் கவனமாகப் பேசிப்பழகுதல் நல்லது. குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவரப் போட்ட எண்ணங்கள் நிறைவேறும் காலமாகும். எழுத்துத் துறைகள், புத்தகம், எழுத்தாளர்கள், தபால்தந்தித் துறையைச் சார்ந்தவர்கள் ஆகியோர்கள் நல்ல பலன்கள் அடைவீர்கள்.

### விருச்சிகம்

பயணங்களின்போது வாகனங்களில் எச்சரிக்கையுடன் சென்றுவருதல் உகந்ததாகும். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர எண்ணுவீர்கள். உடம்பில் வாயு வாதம் போன்ற தொல்லைகள் வந்துநீங்கும். வீடுகளைத் திருத்திக் கட்டவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகுந்த கவனமுடன் பேசிப்பழகுதல் நல்லது. நீண்டகாலமாக வரவேண்டிய பணம் கை வந்துசேரும் காலமாகும். கணவன், மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். தாயின் உடல்நிலை பாதிப்புக்களால் ஏற்பட்டுவந்த மருத்துவச் செலவுகள் சற்று குறைய வாய்ப்பு உள்ளது. தந்தை – மகன் உறவில் சுமூகமான சூழல் உருவாகும். புதிய வீடு வாகனங்கள் வாங்குவதற்காக வங்கிகள்மூலம் எதிர்பார்த்து இருந்த கடன்தொகைகள் கிடைக்கும்.

### தனுசு

காதல் சம்பந்தமான விசயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்துகொள்வுது நல்லதாகும். யாத்திரையின் போது மிகுந்த கவன–முடன் பயணம் செய்வது நல்லதாகும். வெகுகாலமாகக் காணாமற்போன பொருட்கள் மற்றவர்களின் உதவியால் திரும்ப கிடைக்கும். பெண்களால் தென்கிழக்குத் திசையில் இருந்து எதிர்பாராத தனவரத்து உண்டாகும். நண்பர்களால் எதிர்பாராத பொருட்செலவுகளும் மனநிம்மதிக் குறைவும் ஏற்படலாம். உடம்பில் வாயு மற்றும் வாத சம்பந்தமான பிணிகள் வந்துபோகலாம். உத்தியோகத்தில் பதவியுயர்வுடன் கூடிய இடமாற்றம் ஏற்படலாம். உற்றார் உறவினர்களால் ஆதாயம் இல்லை.

### மகரம்

உற்றார் உறவினர்களின் வரவுகளால் மனமகிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டாகும். வங்கிகள்மூலம் எதிர்பார்த்து இருந்த கடன்தொகைகள் கிடைக்கும். உடம்பில் எலும்பு மற்றும் நரம்பு சம்பந்தமாகிய பிணிகள் வந்துபோகும். கணவன் – மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். மாணவர்கள் கல்வியில் பரிசு மற்றம் பாராட்டுக்களைப் பெறுவார்கள். விளையாட்டுத்துறை சார்ந்தவர்கள் கவனமுடன் இருக்கவும். குடும்பத்தில் தடைப்பட்டு இருந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெறக்கூடிய காலமாகும். ஆடம்பர அலங்காரப் பொருள் வியாபாரிகள், சினிமா மற்றும் நாடகத்துறை சார்ந்தவர்கள், திருமணத் தகவல் மையங்கள் மற்றும் திருமணக்கூடங்களை நடத்துபவர்கள் ஆகியோர்கள் நல்ல இலாபம் அடைவார்கள்.

### கும்பம்

குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக உல்லாசப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். நாட்பட்ட பழுதுபட்ட ஆலயங்களைத் திருத்திக்கட்டும் முயற்சிகளில் வெற்றிபெறுவீர்கள். குடும்பத்தில் தடைப்பட்டுவந்த சகோதர சகோதரிகளின் திருமண காரியங்கள் நிறைவேறும். ஆதரவற்ற ஏழைகளுக்கு உதவுவதின்மூலம் மன நிம்மதியும் பொதுமக்களின் பாராட்டுக்களையும் பெறுவீர்கள். நண்பர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். புதிய ஆடை அணிகலன்களை வாங்குவதற்காகப் புதிய கடன்களை வாங்க முயற்சிப்பீர்கள். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### மீனம்

எழுத்துத்துறை, அச்சுத் தொழில்கள், புத்தகம், நோட்டு வியாபாரிகள்,வக்கீல்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், பாடலாசிரியர்கள், இசையமைப்பாளர்கள், தபால் தந்தித்துறையைச் சார்ந்தவர்கள், ஆகியோர்கள் நற்பலன் அடைவார்கள். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெற வாய்ப்பு உள்ளது. தாயின் உடல்நிலையில் இருந்துவந்த தொல்லைகள் குறைந்து காணப்படும். குலதெய்வ ஆலயவழிபாடு செய்துவர வாய்ப்பு உள்ள காலமாகும். பழுதுபட்ட வீடு மற்றும் வாகனங்களை புதுப்பிப்பதன்மூலம் பொருட்செலவுகள் வந்துசேரும். உடம்பில் நரம்பு மற்றும் எலும்புகள் போன்ற உபாதைகள் வந்துபோகும். படித்த வேலை இல்லாத இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் வந்துசேரும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/80/NEWS/2012)

## 15 குட்டிகளைப் போட்ட அதிசய நாய் குட்டி!



ஒன்று இரண்டல்ல மொத்தம் 15 குட்டிகளைப் போட்டிருக்கிறது இந்த மூன்று வயதான றொமி. இது ஒரு Irish Setter வகை நாய். தொடர்ச்சியாக 15 குட்டிகளை ஈன்றிருக்கிறது இந்த நாய். அதனால் மிகவும் களைத்துப் போய்விட்டது. அதில் 10 பெண் நாய்க்குட்டிகளும், 5 ஆண் நாய்க்குட்டிகளும் இருந்தன. நான்கு வாரங்கள் கர்ப்பமாக இருந்தபோது ஸ்கான் எடுத்துப் பார்த்ததில் ஏழு அல்லது ஒன்பது குட்டிகள்தான் இருப்பதாக நினைத்தோம்.

ஆனால் 15 குட்டிகள் போட்டது ஆச்சரியமாக இருப்பதாக அதன் உரிமையாளர் தெரிவித்தார். 15 குட்டிகளுக்கும் ஊட்டுவதற்கு நாயிடம் பால் பற்றாக்குறை காரணமாக புட்டிப்பாலும் வழங்கப்படுகின்றது. குறித்த வகை நாய் இவ்வாறு 15 குட்டிகளைப் போடுவது அரிதான சம்பவம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## வேற்றுக்கிரக மனிதர்கள் உண்மையா?



வேற்றுக்கிரக மனிதர்கள் உள்ளனர், இல்லை என்ற விவாதம் இன்றும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இந்நிலையில் தாய்லாந்து நாட்டின் சிறு கிராமம் ஒன்றில் வேற்றுக்கிரக உயிரினம் போன்ற தோற்றம்கொண்ட ஒரு உடல் கிடைத்துள்ளது. பசுவினைப் போன்ற கால்கள் மற்றும் வால், காது மனிதனைப் போன்ற கை, மற்றும் முகம் அமைப்புக்கொண்ட அது ஒரு கிராமத்துப் புல்வெளியில் சடலமாகக் கிடந்துள்ளது. அது வேற்றுக்கிரக உயிரிதான் என்று ஒரு சிலரும், அல்ல. மரபணு மாற்றத்தால் ஒரு பசுவுக்குப் பிறந்த கன்றுதான் அது என்றும், இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

## மனிதக் காந்தம் அதிசயம் ஆனால் உண்மை!





பிரித்தானியாவின் வடலண்டன் பகுதியில் மனிதக் காந்தமாக ஒருவர் காணப்படுகின்றார். இது மாயமுமல்ல மந்திரமுமல்ல! நிஜமாகவே வட லண்டன் பகுதியில் வசிக்கின்ற ஒரு பெண்ணே இவராவார். இந்தப் பெண்மணியைப் பொறுத்தவரையில் அவரின் உடலில் கூடுதலான காந்தசக்தி காணப்படுகின்றது. நாணயம், காந்தம், ஊசி, ஸ்பனர் போன்ற இரும்புப்பொருட்களையும் கவரும் தன்மை காணப்படுகின்றது. இவ்வாறான பொருட்களுடன் எந்தவிதமான பிரச்சினைகளும் இன்றி நடமாடமுடியுமென்றும் சொல்லப்படுகின்றது.


பெண்களாலேயே பெண்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

KIRUBAA LEARNERS

KIRUBAA LEARNERS | Government Approved Driving Trainning School

கிருபா லேணர்ஸ் | அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை



NO.1 சாரதி பயிற்சிப் பாடசாலை

- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்
- மும்மொழிகளிலும் வாகனப்பயிற்சி
- எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைமுறை
- கனரக சாரதி அனுமதிப்பத்திரம் பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி
- தவணைமுறைக் கட்டணமும், விரும்பிய நேரத்திலான பயிற்சி
- இரவு நேர வாகனப்பயிற்சி 6.00p.m - 9.00p.m



தலைமைக் காரியாலயம் : 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 / 021 492 3200 / 077 722 5292

யாழ்ப்பாணம் :
- முதலாம் கட்டைச்சந்தி, பருத்தித்துறை. 021 492 3201 071 454 6958
- விக்னேஸ்வரா கல்லூரி வீதி, நெல்லியடி. 021 300 6550 071 454 6957
- இல. 227/6, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். (மதவடி அண்மையில்) 021 224 2022 071 454 6956
- கண்டி வீதி, சாவகச்சேரி. (பேரூந்து நிலையம் அண்மையில்) 021 492 3202 021 227 0700

கிளிநொச்சி :
- A9 வீதி, கிளிநொச்சி. (கச்சேரி முன்பாக) 021 228 5505 071 454 6955
- புளியடிச்சந்தி, முல்லை வீதி, விசுவமடு. 021 320 1515 071 454 6955
- வாடியடி சந்தி, பூநகரி. 021 320 1818 071 454 6955
- நாச்சிக்குடா சந்தி, மன்னார் வீதி, முழங்காவில். 021 300 6544 071 454 6955

மன்னார் :
இல. 94, பிரதான வீதி, மன்னார். 071 988 7699 077 847 2732

வவுனியா :
216, A9 வீதி, வவுனியா. (வசந்தி திரையரங்கு முன்) 021 222 7777 071 454 6953




இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி என்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ஒக்ரோபர் 22ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.